பக்கங்கள்: 12

Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களைக்
கொண்டு தயாரிக்கப்படும்
நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்.

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

PUMP
with
Standard Accessories
Select
NEWTONE
Water Pumps

மலர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடு ஐப்பசி மீ 20 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 23 (05-11-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:35

அமைச்சர் ஒருவர் பணயக் கைதியானார்

கொழும்பு நவம்பர் 5

தப்பிச் சென்ற கூலிப்படையினர் மாலைதீவு போக்குவரத்து அமைச்சரையும் மாலைதீவு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரையும் வேறு சில அதிகாரிகளையும் பணயக்கைதிகளாகக் கொண்டு சென்றிருப்பதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

மாலைதீவு ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க இந்திய பராதுருப்புக்கள் 400 பேர் முதலில் வியாழன் இரவு மாலேயில் தரை இறங்கினர்.

நேற்றுக் காலை எஞ்சிய 1,200 துருப்புக்களும் தரை இறங்கினர.

தற்சமயம் மொத்தமாக 1,600 இந்தியத் துருப்புக்கள் மாலேயில் உள்ளனர்.

துருப்புக்களை அனுப்பிக் கிளர்ச்சியை அடக்கியதற்காக மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் தொலைபேசி மூலம் பிரதமர் ராஜீவ் காந்திக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மாலைதீவு அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. மூவர் காயமடைந்தனர். (உ-எ)

இலங்கையை நோக்கியே செல்கின்றனர்?

லண்டன், நவம்பர் 5

மாலைதீவில் புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்ட கூலிப்படையினர் இலங்கையை நோக்கியே தப்பிச் சென்றிருப்பார்கள் என்று சந்தேகிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புரட்சிக்கு சதித்திட்டம் தீட்டியவர்கள் கூலிப்படையினரை இலங்கையில் அல்லது இந்தியாவில் அல்லது சிங்கப்பூரில் கூலிக்கு அமர்த்தியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

கடற் பகுதியில் முத்தரப்புத் தேடுதல்

கொழும்பு நவம்பர் 5

தப்பிச்சென்ற கூலிப்படையினரைத் தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சியில் இந்திய, இலங்கை விமானங்களும் கப்பல்களும் நேற்று ஈடுபட்டிருந்தன.

அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஒன்றும் தேடுதல் வேட்டைக்கு உதவுவதாகக் கொழும்பில் இருந்து பி.பி.ஸி செய்தியாளர் அறிவித்திருக்கிறார்:

மாலைதீவுக்கு நாலாபுறமும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இத்தேடுதல் வேட்டை இடம்பெற்று வருகிறது [உ]

நான்கு இலங்கையர் அகப்பட்டனர்

மாலைதீவில் இந்தியப் படையினரிடம் அகப்பட்ட கூலிப்படையினரில் நான்கு பேர் இலங்கையர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் தப்பிச் செல்ல முயன்றபடகும் கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதேசமயம் இந்திய இராணுவம் மாலேயைச் சூழ்ந்து கொண்டிருப்பதாகவும்—

அங்கு மறைந்திருக்கக் கூடிய கூலிப்படையினரைக் கண்டு பிடிக்க வீடு வீடாகச் சோதனை நடைபெறுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது: (உ)

இந்தியப் படை தங்கியிருந்து தேடுதல்! விரைவில் திரும்பும் என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, நவ 5

மாலைதீவு ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியப்படையினர் அங்கு தங்கி இருந்து கூலிப்படையினரைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் பேசுகையில் முன்கண்ட தகவலைத் தெரிவித்தார். இந்தியப் படைகள் மாலைதீவுக்குச் சென்று கூலிப்படையினரை விரட்டி அடித்தனர் என்று பிரதமர் காந்தி தெரிவித்தும், இரு சபைகளிலும் உறுப்பினர்கள் கரகோஷம் எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

அவர் மேலும் சொன்னதாவது;-

இந்தியப் படைகள் தங்களுக்கு இட்ட பணியைச் செவ்வனே செய்து முடித்தன.

ஜனாதிபதி கையூம் தொலைபேசி மூலம் எனக்கு நன்றி தெரிவித்தார்

இது தொடர்பாக இந்தியா பிற நட்பு நாடுகளுடனும் தொடர்பு கொண்டிருக்கிறது

ஜனாதிபதி கையூமின் கட்டுப்பாட்டின் கீழ் மாலைதீவு இருக்கிறது.

கூலிப்படையினரைக் கண்டுபிடிப்பதற்காக அந்த நாட்டின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியப் படையினர் அங்கு தங்கி இருக்கிறார்கள்.

தெற்காசியாவில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் பேணிக்காக்க இந்தியா உறுதி பூண்டு உள்ளது என்பதற்கு இந்த நடவடிக்கை ஓர் உதாரணம்.

இதை சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஆதரிக்கின்றன.

வெளிநாட்டில் உள்ள விரக்தியடைந்த மாலைதீவு வாசிகள் கூலிப் படையினரைப் பயன்படுத்தினர்.

இயன்றளவு விரைவாகவே துருப்புக்களை விலக்கிக்கொள்ள இந்திய விரும்புகிறது

இந்தியா தனது முடிவுகளை சுயேச்சையாகவே எடுக்கிறது. வெளிச்சக்தி எதனாலும் தூண்டப்பட்டு எடுக்கவில்லை.

துருப்புக்களை அனுப்ப முடிவு செய்த பின்னர்தான் நட்பு நாடுகளுக்கு இந்தியா விஷயத்தைத் தெரிவித்தது; இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (உ-எ)

மாலைதீவுக்கு அவசர உதவி வழங்க இலங்கையும் தயாராக இருந்தது

கொழும்பு, நவம்பர் 5

மாலைதீவில் புரட்சி நடவடிக்கை எடுக்கப்பட்டதையடுத்து கொழும்பில் உள்ள மாலைதீவு தூதுவர் இலங்கை அரசிடம் உதவி கோரினார்.

இலங்கை அரசும் உடனடியாக அவசர உதவி வழங்கும் நடவடிக்கைகளை எடுக்க முயன்றது. ஆனால் இந்தியா உதவப் போவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து இலங்கையின் உதவி நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்பட்டன.

—இவ்வாறு கொழும்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, மாலைதீவு ஜனாதிபதி கையூமுக்கு அனுப்பிய செய்தியிலும் அவசர உதவி வழங்க முன்வந்த செயல் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

"கையூமின் ஆட்சியைக் கவிழ்க்க எடுக்கப்பட்ட புரட்சி நடவடிக்கை பற்றி அறிந்ததும் தாம் அதிர்ச்சி அடைந்ததாக" இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனா தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார். (உ)

மாலைதீவிலிருந்து 2 கப்பலில்

புரட்சிப்படை தப்பி ஓட்டம்!

ஒரு கப்பல் வளைத்துப் பிடிக்கப்பட்டது மற்றயதை இந்திய கடற்படை துரத்துகிறது

மாலே, நவம்பர் 5

மாலைதீவில் வியாழன் காலைமுதல் இடம்பெற்ற புரட்சி நடவடிக்கையை முறியடிக்க இந்திய பராத் துருப்புகள் அங்கு தரையிறக்கப்பட்டன.

இந்தியத் துருப்புகள் தரையிறங்கி நான்கு மணி நேரத்தினுள் புரட்சி நடத்திய கூலிப்படையினர் மாலைதீவை விட்டு ஓட்டம் பிடித்தனர்,

கூலிப்படையினர் இரு கப்பல்களில் தப்பிச் சென்றதாகவும் அவற்றில் ஒன்றை இந்தியக் கடற்படை நேற்று மாலை வளைத்துப் பிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றைய கப்பலில் தப்பிச்செல்லும் கூலிப்படையினரை விரட்டிப் பிடிக்கும் முயற்சியில் இந்திய கடற்படைக் கப்பல்கள் ஈடுபட்டிருப்பதாக புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

5 ஆயிரம் தொன் கப்பல் ஒன்றில் கூலிப்படையினர் பணயக் கைதிகளுடன் தப்பிச் செல்வதாகவும்—

இந்திய வேவு விமானம் ஒன்று அதனை நோட்டமிட்டிருப்பதாகவும்—

விரைவில் அப்படகு இடைமறிக்கப்படும் என்று நம்பப்படுவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மாலைதீவில் பதிவுசெய்யப்பட்ட "புரோகிரஸ் லீட்" என்ற கப்பலிலேயே இவர்கள் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இதே சமயம் வளைத்துப் பிடிக்கப்பட்ட கப்பலில் சில கூலிப்படையினரும். பணயக் கைதிகளும் இருந்ததாக கூறப்படுகிறது. இந்தக் கப்பல் அதில் இருந்தவர்களுடன் மாலேக்கு கிருப்பிக கொண்டு செல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

இளைஞர் காயம்

யாழ்ப்பாணம் நவ 5

ஆவரங்கால் பகுதியில் நேற்று இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

கனகலிங்கம் தவராசா (வயது 28 என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார் (உ 10)

திருமலையில் கண்ணிவெடி; இருவர் பலி! 7 பேர் காயம்

சென்னை, நவ 5

திருகோணமலையில் இடம்பெற்ற இருகண்ணி வெடிச் சம்பவங்களில் இரண்டு பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமுற்றனர்.

திருமலை நகரில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் கடை வீதியில் குண்டு வெடித்தகில் அமைதிப்படை வீரர் ஒருவரும் பொலீஸார் ஒருவரும் உயிரிழந்தனர்

அமைதிப்படையின் பொறியியல் பிரிவு இந்த வெடிகுண்டைச் சோதிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போது அது வெடித்தது

இதே சமயம் திருகோணமலையில ஒரு கட்டடத்தில் கண்ணி வெடி வெடித்ததில் கட்டடம் இடிந்து விழுந்தது. ஆட்சேதம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

இசை. நடன ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மீண்டும் திங்களன்று?

கொழும்பு நவ. 5

முதலாம் திகதி முதல் நான்காம் திகதிவரை கொழும்பில் நடைபெற விருந்த இசை, நடன ஆசிரியருக்கான நேர்முகப்பரீட்சைகள் மீண்டும் திங்கட்கிழமை முதல் கொழும்பில் நடைபெறலாம்எனத் தெரியவருகிறது.

கொழும்பு கல்விச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் கடந்த முதலாம் திகதி முதல் நான்காம் திகதிவரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பரீட்சை கொழும்பில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகத் திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

மீண்டும் இப் பரீட்சையை ஏழாம் திகதி திங்கட்கிழமை முதல் நடத்துவதற்கு கல்விச் சேவை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன. (உ-10)

சுபநேரம்

05-11-1988
ஐப்பசி 20
சனிக்கிழமை

சுபநேரம்:-
3 05முதல் 4-35வரை
ராகுகாலம்:-
09 05முதல் 10-35 வரை
ஏகாதசி விரதம்

பஞ்சாப்பில் 15 பேர் பலி!

சண்டிகார், நவ 5

பஞ்சாப் மாநிலத்தில் பட்டியாலா நகரில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 15 பேர் கொல்லப்பட்டனர் (உ-எ)

பஸ் சேவை நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், நவ 5

யாழ்—கச்சேரி மினிபஸ் சேவை பஞ்சாயத்துச் சபைத் தலைவர் திருவலிதாமகேந்திரன் கையது ஒப்பட்டதை ஆட்சேபித்து நேற்று கச்சேரி —யாழ்ப்பாணம் மினிபஸ் சேவைகள் நடைபெறவில்லை. (ஓ)

★ இந்தியப்படை திரும்புகிறது

இந்தியத் துருப்புக்களில் ஒரு பகுதி நேற்று மாலை கப்பல் மூலம் இந்தியா திரும்பிக் கொண்டிருப்பதாக இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது.

எஞ்சிய துருப்புக்களை எப்போது திருப்பி அழைப்பது என்பது மாலைதீவு அரசுடன் கலந்தாலோசித்துத் தீர்மானிக்கப்படும் என்று புதுடில்லியில்வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்:

விஜிதரன் நினைவாக:

பல்கலைக்கழக மாணவர் நேற்றுப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், நவ 5

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று தமது விரிவுரைகளை முற்றுப் பகிஷ்கரித்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் காணாமற் போன யாழ் பல்கலைக் கழக வணிகமாணவன் விஜிதரனின் நினைவாகவே பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப் பட்டது

விஜிதரனின்நினைவாக நேற்றுக்காலை கைலாசபதி கலையரங்கில் நினைவுதினக் கூட்டமொன்றும் நடைபெற்றது.

பல்கலைக்கழகப் பீடத் தலைவர்கள், பல்கலைக் கழக மாணவரமைப்புத் தலைவர்கள் உட்பட பலர் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்கள். (உ-5)

கி. வா. ஜகந்நாதன் காலமானார்

சென்னை, நவ 5

'கலைமகள்' ஆசிரியரும் பிரபல தமிழறிஞருமான திரு. கி.வா.ஜகந்நாதன் நேற்று பிற்பகல் சென்னையில் காலமானார்.

அவருக்கு வயது 83.

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரிடம் குருகுல முறைப்படி கல்வி பயின்ற திரு ஜகந்நாதன் நூற்றிஐம்பதிற்கும் அதிகமான நூல்களை எழுதியிருக்கிறார்

25 சிறுகதைத்தொகுப்புக்களும் ஒரு நாவலும் இவர் எழுதினார்.

சாகித்திய அக்கடமியின் துவக்க காலத்திலேயே 'வீரர்உலகம்' என்றஇவரது புத்தகத்துக்கு சாகித்திய அக்கடமி விருது கிடைத்தது.

திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு என்ற நூலுக்கு இலங்கை அரசின் விருது கிடைத்தது

தமிழ்ப் பழமொழிகள் தொகுப்பு என்ற நூலை இவர் இறுதியாக தனது தள்ளாத வயதிலும் எழுதிக் கொண்டிருந்தார்.

பிரபல இலக்கியப் பத்திரிகையான 'கலைமகளு' (4 ஆம் பக்கம் பார்க்க)

ஆசியக் கிண்ணம் இந்திய அணிக்கு

இலங்கை கோட்டைவிட்டது

டாக்கா நவ 5

நேற்று டாக்காவில் நடைபெற்ற ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இலங்கை அணி இந்தியாவிடம் தோற்றுப் போனது

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 42 3 ஓவர்களில் 176 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது

இலங்கை அணியின் நான்கு வீரர்கள் அடுத்தடுத்து ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அணி 37. 1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 180 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

சிந்து 76 ஓட்டங்களையும், அணித் தலைவர் வெங்சாகர் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

இடம் பெயர்ந்தோருக்கான

நிவாரணக் கொடுப்பனவு இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் நவ 5

இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக் குடியமர்த்தலுக்கான அயிரம் ரூபா நிவாரணப் பணம் இன்று இலங்கை வங்கிமூலம் வழங்கப்படும்.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ். இலங்கை வங்கியின்பிரதான கிளை ஊடாக இன்று நிவாரணப்பணம் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதன் பொருட்டு இலங்கை வங்கியின் பிரதான கிளை ஊடாக இன்றுகாலை (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள நஷனல் 18" கலர் T V உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: S. நாதன். No 16/3 விதானையார், வீதி, ஈச்சமோட்டை, யாழ்பாணம். (7726)

பாவித்த வீட்டுத் கள பாடங்கள் Show Case கட்டில், கதிரைகள், ஹோல்செற், கபேட், கண்ணாடிமேசை, நேசறி தளபாடம், சாப்பாட்டு மேசை, கதிரைகள், எக்கோடியன், Grinder, Fan பெலோடிக்கா, கிளாஸ், பித்தளைப் பொருட்களும் உடனடி மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. D K. சபாரத்தினம், 35/1 றக்கா லேன், யாழ்ப்பாணம். (7727)

வீடியோ ஹமரா மொடல் GXN70E Title Model விற்பனைக்குண்டு. தொடர்பு:- 13/1, றீல் வீடியோ சென்ரர், ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் (7905)

தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி, ஹோல் செற் Fan, விறாந்தை செற் கட்டில் மெத்தை, கண்ணாடி மேசை, கசற் றேடியோ, சாப்பாட்டு மேசை, செற்றி குசன்கள் மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. No:7 பண்டாரக்குளம் மேற்கு வீதி. நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (7728)

சகல விதமான ரேடியோ, வீடியோ, டெக் T V ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் I. C Transistor வீடியோ (Head) அன்ரனா பூஸ்டர் ஆகியவற்றை மலிவான விலையிலும் நம்பிக்கையுடனும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம். R. V. சென்ரர், No F6 Model Market Jaffna. உரிமையாளர் விக. (7909)

தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள். (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) இல்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

தீபாவளி மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!! (1-11-88 முதல் 9 11-88 வரை) புதிய டிசைன் ஸ்கேட் பிளவுஸ், பேபி குட், கவுன்கள், பெரியோர், சிறுவர்களுக்குரிய ரெடிமேட் ஆடைகள் Fashion Garments; 2 22 கடைச்சாமி வீதி. (Off Navalar Road) நீராவியடி, யாழ்ப்பாணம். (7716)

மலிவு விற்பனை

முந்நிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

வான், மோட்டார் சைக்கிள் விற்பனை

Austin J4 டிலிவரி வான், Honda C B 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு நல்ல நிலையில் உள்ளது. விலை நேரில் பார்த்து கதைத்துக் கொள்ளலாம் தொடர்பு:K பாமநாதன், சுருவில் ஊர்காவற்றுறை. (BusRoute 780) (7911)

கோழிக் குஞ்சுகள் விற்பனை

பிறிமாயின ஒரு நாள் புரொயிலர்க் குஞ்சுகள் சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் வழங்கப்படும் குஞ்சுகளுக்கு 7 நாட்கள் உக்கரவாதம் பதிவு; 11/6, ஸ்ரான்லி வீதி, திருமகள் ஸ்ரோரஸ் சிவலிங்கப்புளியடி, சாயி மெடிக்கல் திருநெல்வேலி சந்தி. (7916)

Hyline கறுப்பு வெள்ளை 4 நாள் பேட்டுக் குஞ்சுகளும் Christombu Farm 10 நாள் புரொயிலர்க் குஞ்சுகளும் கையிருப்பில் உள்ளது. A J S Farm No 45. கொழும்புத்துறை வீதி, (சந்தனமாதா கோயில் அருகாமை) சுண்டுக்குளி யாழ்ப்பாணம்; 'லீலாபதி' கண்டி வீதி மிருசுவில்: (7705)

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்புசேவற்குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet. சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

இறைச்சிக் கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள் குஞ்சுகள், விறாத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

நாய்களுக்கான மருந்துகள்

For Dogs Parvo Distember Rabies Vaccine Phillips vetzyme Tablets, Shampoo, Flea Powder, Spray மற்றும் நாய்களுக்குத் தேவையானமருந்துகளை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம் Nallur Farm Centre C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7687)

தேவை

சகல விதமான வெல்டிங் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை நேரில் வரவும் SHANO WELDING WORKS, 379, BEACH ROAD, GURUNAGAR, JAFFNA. (7721)

யாழ் நகரில் ஒரு வீடு வாடகைக்கு தேவை. மேல்மாடி வீடுகளும் விரும்பப்படும். முழு விபரங்களுடன் எழுதவும் தொடர்பு; 355, மே/பா, உதயன் யாழ்ப்பாணம். (7915)

தேவை

அருநெல்லிக்காய், முழுநெல்லிக்காய், விளாம்பழம், மாம்பழம், பனம்பழச்சாறு ஆகியன தேவை விலையை கலந்தாலோசித்து தீர்மானிக்கலாம். அத்துடன் பாவற்காய் வற்றலும் பெருமளவில் தேவை. தொடர்பு: அ சத்தியன், 140, நாவலர் ரோட், (மனோராதியேட்டர் அருகாமை) யாழ்ப்பாணம். (C438)

பிளாஸ்ரிக்போட் வேலை பழகுவதற்கும், றபர்சீல் வேலைகள் மற்றும் ஓவிய வேலைகள் செய்ய ஆர்வமுள்ள யுவன் யுவதிகள் தேவை நற்சான்றிதழ்களுடன் 10 - 11 - 88 க்கு முன் நேரிலோ கடிதமூலமோ விண்ணப்பிக்கவும். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சரன் ஸ்ரூடியோ 9,8, நவீன சந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம். போன் 23858. (7918)

கொப்பிகள் கட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. அண்மையில் உள்ளவர்களுக்கும், ஈஷ்டமான குடும்பத்தில் இருந்து வருபவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும் மில்க் இன்டஸ்றீஸ் (Milk Industries), 26 26/1 திருநெல்வேலி சிவன் புது வீதி, யாழ்ப்பாணம். (7642)

விற்பனைப் பிரதிநிதி

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஒரு விற்பனைப்பிரதிநிதி தேவைப்படுகின்றார். வயது 18-25 வரை இருத்தல் வேண்டும். G. C. E [சாதாரணம்] சித்தியடைந்திருக்க வேண்டும். முழுவிபரங்களுடன் 10-11-88க்கு முன்பாக கடிதமூலம் விண்ணப்பிக்கவும் ராம் சன்ஸ் பிரயாணப் பொட்கள் தெழிலகம், சுதுமலை வடக்கு மானிப்பாய். (7910)

மணமகன் தேவை

28 வயது இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. செவ்வாய்க் குற்றமில்லை சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க, தொடர்பு:- 344 C/O Uthayan, Jaffna. (7906)

தவறிவிட்டது

2 11 - 88 புதன் கிழமை மானிப்பாயில் இருந்து கொய்யாத் தோட்டம் வந்து கொண்டிருந்தபோது எனது குடும்ப அங்கத்தவர்கள் ஏழு பேரினதும் உணவு முத்திரைகள் தவறிவிட்டன காவு கொண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்துல அலலது 1/10, புதுவீதி கொய்யத்தோட்டம். என்ற முகவரியில் ஒப்படைக்கவும். க. மகாலிங்கம்.

[illegible]

தமிழ், ஆங்கில கட்டுரை வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் றைப்றைற் மூலம் வெளி நாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் 'ஷப்ரு சேவைப் பிரிவு, இல 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம் (C/691)

ரேணியோ

தரமான ரேணியோ பிரதிகளை (தமிழ்/ ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் "ஷப்ரு" சேவைப் பிரிவு, இல 19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/692)

கஸட் மூலம் ஆங்கிலம் பேசக பயிறசி

Spoken English, ஆங்கிலம் இலகுவாக விரைவில் பேசிக் கொள்ள நீங்கள் கசட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி Spencer, அரிப்பொத், மானிப்பாய் ரோட், உடுவில். (7917)

A/L 90 இரசாயனம்

108 Brown Road, A/L 90 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 7-11 88 திங்கள் 4 30 p m திங்கள், புதன் 4.30 to 6 00 p.m (7914)

ஜோதிடம்

இன்று சனி மாற்றம் தமிழின மேடராசிக்கு யோகங்களும், தென்னிலங்கை கும்பராசிக்கு அழிவுகளையும், இரத்தக் களரியையும் ஏற்படுத்தும். எல்லா இராசிகளும் நூறாசிரியர் சத்தியதாஸன் எங்கும் கிடைக்கும். 13/50 பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (7912)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. அருளப்பு சிமியோன் (பாலன்)

தோற்றம் 29 - 10 - 1945 மறைவு: 06 - 11 - 1987

திடீரென எம்மையெல்லாம் ஆழாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் பாலனின் ஆத்ம சாந்திக்காக தினமும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது முதலாவது ஆண்டு நினைவாக நவாலி சென் பீற்றேஸ் தேவாலயத்தில் 05 - 11 1988 திருபலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவில் துயறுறும்

தாய், மைத்துனன்,
சகோதரங்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நவாலி – தெற்கு
மானிப்பாய். (7596)

A/L 89 PHYSICS

Tutor: R. சத்தியசீலன்
Sat / Sun. 4. p. m. ஒளியியல் (மீட்டல்) அரியம்
Sat / Sun. 5. p. m. வெப்பவியல் – சாரீரப்பதன்
ஆரம்பம் 5 - 11 - 1988
★ A/L 90 புதிய பிரிவு ஆரம்பம்: 09 11-1988
21, மணல்தரைலேன் - கந்தர்மடம் (யாழ்.)
(C-733)

First Year of Rememberance

Mrs. MARY RASAMMAH MYLVAGANAM
(Retd. Teacher Uyarapulam Methodist Misson School, Anaicoddai)

Born: 1 St Nov 1903 **Entered Glory:** 5 th Nov. 1987

A Service of Thanksgiving in memory of her will be held on Sunday the 6-th November 1988 at 10.30 a. m. at St. Peter's Methodist Church, Jaffna.

"Deep in our hearts
Your memory is kept
To love and Cherish
Never to forget"

Affectionately remembered and Sadly missed by her loving Children, Grand children and Great grand child.

"Thevastan"
No 17, St. Peter's Lane,
Jaffna. (7725)

ஜீவனி

உங்கள் குழந்தையின் உயிர் காக்கும்.

உங்கள் குழந்தையின் உடலில் இருக்க வேண்டிய நீரும் உப்புகளும் வயிற்றோட்டத்தினால் குறைகின்றன. இது உடல் உலர்ச்சியடைவதற்கு வழிசெய்யக்கூடும். சரியான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் உங்கள் குழந்தை மரணமடையவும் இடமுண்டு. இலங்கையில் தினமும் 6 குழந்தைகள் வரை உடல் உலர்ச்சியினால் மரணமடைகின்றன.

எனவே, உடல் உலர்ச்சி அடைவதைத் தடுக்கும் வழிகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பது அவசியம்.

வயிற்றோட்டம் ஏற்பட்டதும் உங்கள் குழந்தைக்கு நீர், பொரி அரிசிக் கஞ்சி, அரிசிக் கஞ்சி, உப்புக் கலந்த எலுமிச்சம் பழச் சாறு, சாயம் குறைந்த தேநீர் போன்ற நீராகாரங்களைப் போதிய அளவு குடிக்கக் கொடுங்கள். தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானால் தொடர்ந்து பால் ஊட்டல் முக்கியம். புட்டிப் பால் கொடுப்பதானால் வழக்கத்தைவிட இருமடங்கு நீரில் பால் மாவைக் கரைத்து ஊட்டவும்.



இவ்வளவு செய்தும் வயிற்றோட்டம் தொடர்ந்து நீடித்தால் உடல் உலர்ச்சியடைய இடமுண்டு. உடல் உலர்ச்சியின் முதல் அறிகுறி கடும் தாகமாகும்.

இந்த நிலை ஏற்படின், உடனடியாக ஜீவனியைத் தயாரித்து வழங்க வேண்டும் உடல் இழந்துவிட்ட உப்புக்களையும் நீரையும் ஜீவனி மீள அளிக்கும்.



ஜீவனி பானம் தயாரிக்கும் முறை



ஜீவனி பக்கெட்டுக்குள் காணப்படும் இரண்டு பைகளிலுமுள்ள தூள் முழுவதையும் 9ரு லீட்டர் குடிநீரில் கரைக்கவும், (ஒரு லீட்டர் நீர் என்பது 400 மில்லி லீட்டர் அளவுள்ள 2½ சோடாப் போத்தல்களில் அல்லது ஜீவனிப் பக்கெட்டுடன் வழங்கப்படும் பிளாஸ்டிக் கோப்பை போன்ற 5 கோப்பைகளில் அடங்கக்கூடிய அளவு நீராகும்.)

ஜீவனி பானம் கலந்து 24 மணிநேரம் கடந்துவிட்டால், எஞ்சியுள்ள பானத்தை விடிவிட்டுப் புதிதாகக் கலந்தெடுக்கவும்.

ஒரு பக்கெட்டின் விலை: ரூ. 5/- மட்டுமே.

ஜீவனியை உங்கள் கூட்டுறவுக் கடையில் அல்லது அண்மையிலுள்ள மருந்துக் கடையில் வாங்கலாம்

JWT UF 2651

உயிர் காக்கும் ஜீவனி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலாவது பிறந்ததின வாழ்த்து

செல்வப்புதல்வி சி. சிவப்பிரியா

சரணை கிழக்கு சிவநாதன் விஜயலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வி சிவப்பிரியா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 5-11-88 தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார் இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பா பெரியம்மா, அண்ணன்மார், சித்தப்பா ஆகியோர் இறைவனருளால் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

No - 167,
வேலணை நிருபர்,
கா. கணேசலிங்கம். (7875)

BROILERS
இறைச்சிக் கோழி

தீபாவளியை முன்னிட்டு
இறைச்சிக் கோழிகளின் விலை
குறைக்கப்பட்டுள்ளது.
உடன் சுத்தம் செய்து
பெற்றுக்கொள்ளலாம்.

Nallur Farm Centre
C/o நல்லூர் வீடியோ சென்டர்
No. 19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்.
(C/444)

ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம்- ஆனால் தவறாகப் பேசி விடுவோமே என்ற தயக்கம்-
இதுதானே உங்களது பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது.

WRITTEN ENGLISH

ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.
இதனைக் கருக்கிற் கொண்டு

BRIGHT TRAINING CENTRE

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.
உளவியல் அடிப்படையில்,
மிக மிகப் புதுமையான முறையில்

SPOKEN ENGLISH

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.
விபரங்களுக்கு முத்திரையொட்டிய கடிதவிலாசத்துடன் தொடர்பு கொள்க:

BRIGHT TRAINING CENTRE
P. O. Box 162, Colombo.
(7160)

யாழ். கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்
க. பொ. த. (உ) அனுமதி

க. பொ. த. (உ) கலை, வர்த்தகம், விஞ்ஞான வகுப்புகளுக்கு தகுதி பெற்றோர் 09 - 11 - 88 முன்னர் விண்ணப்பிக்கவும். வரையறுக்கப்பட்ட வெற்றிடமே உண்டு.

மு. இராமலிங்கம்
அதிபர்
(7884)

முதல் வருட நினைவு

திரு. திருச்செல்வம் சூசைப்பிள்ளை
(சிங்கராசா)

தோற்றம்: 06-01-1917
மறைவு: 05-11-1987

எம்மை எல்லாம் பேரிடியில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! இறைவன் திருவடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களினால் எம் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இறைவா! நித்திய இளைப்பாற்றியை இவருக்கு கொடுத்தருளும் - முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக் கடவது.
ஆமென்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.
இல. 115, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். (7487)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



உயர்திரு
சின்னப்பு கதிர்காமநாதன்

ஆண்டவன் படைப்பு: 1937- 07- 12
அழிப்பு: 1987- 10- 18
திதி: 1988- 11- 05

"சிவியத்தில்" என்னை நேசித்தவர்களே! மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், வாழ்வின் வழி காட்டியாய் வாழ்ந்த அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டன. உங்கள் நினைவுகள் எங்கள் இதயத்தில் அணையாத தீபமாக பிரகாசித்துக் கொண்டு இருக்கின்றது!

உங்கள் ஆத்மா சாந்திஅடைய இறைவனை என்றும் வணங்குகின்றோம்.

அன்புத் தாய்,
சகோதரர், மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.
சோதி வேம்படிலேன்,
மானிப்பாய். (7871)

DIPLOMA IN HOTEL MANAGEMENT

6 MONTHS
WEEKDAY CLASSES
by
qualified, experienced and dedicated panel of lecturers

Fees - மாதம் ரூ. 150/-
ஆரம்பம்: 21-11-1988
அச்சடித்த பாடக்குறிப்புகள் Free
பிரபல Hotel களில்
செய்முறைப் பயிற்சி
பயிற்சி முடிவில் சிறந்த சான்றிதழ்

வெளிநாடுகளில்
வேலை வாய்ப்பைப் பெற மிக உகந்தது

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3ஆம் குறுக்கு வீதி,
(O.L.R. தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.
(C/737)

துணை வேந்தர் நல நிதியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

துணை வேந்தர் நல நிதியம் என்னும் பெயரில் ஒரு நிதியத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடக்கியுள்ளது.

மகாபொல புலமைப்பரிசில்/கல்வி உதவிப்பணம் என்பனவற்றில் எதனையும் பெறாத மாணவர்களுக்கும், எதிர்பாராத சூழ்நிலை காரணமாகத் துன்புறும் மாணவர்களுக்கும் உடனடி நிவாரணம் வழங்குவதே இந் நிதியத்தின் முக்கிய குறிக்கோளாகும். மாணவர் நலனைச் சீரிய நிலையிலும் உயரிய தரத்திலும் பேணும் முகமாக பல்கலைக்கழக சுவன்சிலின் ஆலோசனையோடு, இந்நிதியத்தின் முகாமைச் சபை நெருக்கடியான நேரங்களில் நிதியுதவி வழங்குவதுடன் பிற வகையான உதவி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

பழைய மாணவர்கள், பொது மக்கள், நலன் விரும்பிகள், தனிப்பட்டோர் ஆகியோரிடமிருந்தும், கழகங்களிடமிருந்தும் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

காசுக்கட்டளைகள், காசோலைகள் என்பனவற்றை 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நலநிதியத்திற்கு' அனுப்பி வைக்கலாம் அல்லது யாழ்ப்பாணம் ஸ்ரானலி வீதி, இலங்கை வங்கிக் கிளையிலுள்ள நமது 10496ஆம் இலக்கக் கணக்குக்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம்.

- துணை வேந்தர்

யாழ் பல்கலைக்கழகம், இலங்கை.
யாழ்ப்பாணம்.
01-11-1988
(C-737)

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி தெய்வானை இராமநாதன்
(மாணிக்க ஆச்சி)

பிறப்பு:- 5- 3- 1908
இறப்பு:- 5- 11- 1987
திதி:- 23- 10- 1988

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும் எங்களை வழி நடத்திய எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:-
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.
பிள்ளையார் கோயிலடி,
மண்டைதீவு. (7880)

ஆங்கிலமொழி அறிவுத் துறையின் திறவுகோல்

யாழ்ப்பாணம், நவ. 5

"ஆங்கிலமொழி அறிவுத்துறையின் திறவுகோல், ஆங்கிலமொழி என்ற சாளரத்தின் வழியேதான் நாம் உலகோடு உறவாடலாம். மாணவரின் தொழில் துறை வாய்ப்புளுக்கு ஆங்கில அறிவு அவசியமானது"

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆங்கிலதின கொண்டாட்டத்தின் போது கல்லூரி அதிபர் திருமதி சகராஜினி கல்யாணசுந்தரேசன் மேற்கண்டவாறு கூறினார்.

ஆங்கிலக்கல்வி அதிகாரி திரு. ஏ. கே. குலசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திரு ஏ. கே. குலசேகரம் பேசுகையில் கூறியதாவது "ஆங்கிலதினம் கொண்டாடுவதைச் சிலர் வீண்நேரச்செலவு என்று சொல்லுகிறார்கள். இன்றைய நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற பெற்றோர்களும், ஆசிரியர்களும் கட்டாயமாக இக்கூற்றை மறுத்துரைப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை"

தரமாக நன்றாக பயிற்சிப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளைத் தயார் செய்த ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவராவர். இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொரு பாடசாலையிலும் நடத்தப்பட வேண்டும்

"பெரும் எண்ணிக்கையில் பெற்றோர்கள் இந் நிகழ்ச்சிக்குச் சமுகம் கொடுத்துள்ளது ஆங்கிலக் கல்வியில் பெற்றோர்கள் காட்டும் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன.

இப்படி அவர் கூறினார். (ச)

பாராட்டுக்கள்
சேலின் இன்ஸ்ரிரியூட்
இருபாலை — கோப்பாய்

O/L 1988 ஆடி மாதம் நடந்த பரீட்சையில் எமதுநிறுவன மாணவர்கள் 97% அதிவிசேட விசேட, சித்திகளைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சித்தியடைந்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களான திரு. T. தயாபரன், திரு. R. செல்வவடிவேல், திரு. ராஜநாதன் நைல்ஸ், திரு. K. S. முத்துலிங்கம், திரு T. தர்மகுலசிங்கம் ஆகியோருக்கு எமது வாழ்த்துக்கள்.

PRINCIPAL
and the
CLERK
(7730)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
எம் நினைவை விட்டு மறையா ஒருவராய்
அமரத்துவம் பெற்ற
திரு. பொ. பரமானந்தன்
பொதுமுகாமையாளர்
தெ. ப பொ உ வி கூட் சங்கம்
பண்டத்தரிப்பு- பரிஸ்

மீளாத்துயிலுக்காய் மிதிலையை விட்டகன்றவரின்
ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்
கோப்பாய்
தெ. ப. பொ. கூட். சங்க ஊழியர்கள்
(7872)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

தோற்றம்: 24 - 9 - 1915
மறைவு: 18 - 10 - 1987
திதி:- ஏகாதசி 05 - 11 - 1988

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து கடமை, கண்ணியம் அன்புடன் எம்மை வாழவைத்த பாசம் நிறைந்த தந்தையே! உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
நந்தா விளக்கு,
தேவாலய வீதி,
சங்கானை. (7732)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உழைத்து உண்பவனே மனிதன்"
— மகாத்மா காந்தி

500 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளைச் சேகரித்துக் கொடுத்து அழகிய "மகாத்மா காந்தி சிலை" ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

சஞ்சிவி

05 - 11 - 1988 சனிக்கிழமை

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்"
"மில்க்வைற் செய்தி இதழ் - 153.

20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி புதிய வெளியீடான "மில்க்வைற் செய்தி இதழ் - 153" ஐ பெற்றுக்கொள்ளுங்கள்

மில்க்வைற்- யாழ்ப்பாணம்.

கரவெட்டி.பருத்தித்துறைப் பகுதியில்

பாதிப்புற்றோருக்கான விண்ணப்பப் படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ 5

பருத்தித்துறை. கரவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த "கடும் பாதிப்புற்றோர்"களுக்கான நிவாரண விண்ணப்பப் படிவங்கள் நேற்று வழங்கப்பட்டன.

சுமார் 500 பேர் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஊனமுற்றவர்களும், குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்களுமே இந்நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

இத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நேற்று இவை வழங்கப்பட்டன.

இந்த விண்ணப்பப் படிவங்களை நேற்றுப் பெற்றுக்கொள்ளாத சோப்பாய், பருத்தித்துறைப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமையே அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது-

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்தவர்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை இந்தவிண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-5)

மரணவிசாரணை நடைபெற்றது

யாழ்ப்பாணம், நவ. 5

நேற்று முன்தினம் ஊர்காவற்றுறையில் சுட்டுக் கொல்லப்பட்ட கொட்டடியைச் சேர்ந்த நல்லதம்பி சந்திரசேகரம் (19 வயது) என்பவரது மரணவிசாரணை நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

பிரேத பரிசோதனை மற்றும் மரணவிசாரணைகளை அடுத்து இவரது சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. [உ-9]

மத்திய கல்லூரி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ 5

நேற்று முன்தினம் வெளியான ஜீ. சி. ஈ. (சாதாரணதர)விசேடபரீட்சையில் யாழ்.மத்திய கல்லூரியிலிருந்து தோற்றிய நான்கு மாணவர்கள் ஆறு பாடங்களில் விசேட சித்தியும், இரு பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருக்கின்றனர்.

ஒரு மாணவன் மட்டுமே 6 பாடங்களில் விசேட சித்தியும் இரு பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றார் என நேற்றைய உதயனில் வெளிவந்த செய்தி சரியல்ல என கல்லூரி அதிபர் திரு. வி பாலசுந்தரம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தமது கல்லூரி பல இடையூறுகளுக்கு மத்தியில் இந்தப் பெறுபேறுகளைப் பெற்றிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். [உ]

முல்லைத்தீவில் துக்கம் அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு, நவ 5

முல்லைத்தீவு வர்த்தகர் சங்கத்தின் முன்னாள் தலைவரான திரு சி. தியாகலிங்கத்தின்90ஆது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் முல்லைத் தீவில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

எனினும் போக்குவரத்துச் சேவைகள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள் வழமை போல் இயங்கின. (ஒ-92)

சீரடையும் பஸ் சேவை

யாழ்ப்பாணம், நவ. 5

கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ்சேவைகள் நேற்று வழமைபோல் நடைபெற்றன.

கடந்த சில தினங்களாக தென்பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இச்சேவைகள் தடைப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு மற்றும் கண்டிக்கான சேவைகள் இன்று வழமை போல் நடைபெறுமென வ.பி.போ.ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

75 இளைஞருக்கு உடுப்புகள்

முல்லைத்தீவு, நவ. 5

பூஸா முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்ட 75 இளைஞர்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட றெட் பானா ஸ்தாபனத்தினர் உடுப்புகள், சவர்க்காரங்கள் என்பவற்றை வழங்கினர். [ஒ 92]

நீண்ட காலத்தின் பின்னர்

யாழ். பொலீஸ் பகுதி இரவிலும் இயங்குகிறது

யாழ்ப்பாணம் நவ 5

யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள பொலீஸ் பிரிவு கடந்த வியாழக்கிழமை முதல் இரவிலும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இரவு வேளைகளில் இரண்டு பொலீஸ் கடமையில் ஈடுபட்டிருப்பர்

இந்தப் பொலீஸ் பிரிவு நீண்ட காலத்துக்குப் பின்னர் பொதுமக்களின் நன்மை கருதி இரவு நேரத்திலும் தற்போது இயங்குவதாக பொலீஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (ஒ-10)

உரும்பராய் கிழக்கில் நிவாரணம்பெறுவோர்

யாழ்ப்பாணம் நவ 5

மீளக் குடியமர்த்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபா பெறும் மேலும் 181 குடும்பங்களின் பட்டியல்கள் நேற்று யாழ் செயலகத்தில் வெளியிடப்பட்டது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த உரும்பராய் கிழக்குப்பகுதி குடும்பங்களின் பெயர்பட்டியலே வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தப் பட்டியல் நேற்றே வங்கிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தப் பெயர்ப்பட்டியல் கொடுப்பனவுக்காக யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக்கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. (உ-9)

கோயிலில் திருட்டு

யாழ்ப்பாணம் நவ 5

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள் ஆலயம் கடந்த வியாழக்கிழமை திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளது.

கதவுகள் உடைக்கப்பட்டு அம்பாளின் 3 பவுண் எடையுள்ள இயந்திரத் தகடு, வெள்ளியினாலான இரு கால் பாதங்கள், ரொக்கப் பணம் என்பன திருட்டுப் போயுள்ளன.

திருடர்கள் கதவில் பொருத்தி இருந்த மணிகள் ஒலிக்காதபடி பட்டுத்துணிகளை மணிகளுக்குள் அடைத்து இத்திருட்டை நடத்தியுள்ளது தெரிய வந்துள்ளது.

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தில் திருடப்பட்ட பொருள்கள் திரும்பி வந்து சேர்ந்ததைப் போல் இங்கு களவு போனவையும் சம்பந்தப்பட்டவர்களால் மீளவும் கொண்டு வந்து வைக்கப்படலாம் என ஆலய உறுப்பினர்கள் எதிர்பார்க்கிறார்கள். (ஒ)

பிரேமாவை அழைத்தது ஏன் என்று அனுரா விளக்கம்

கொழும்பு, நவ 5

சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கும்படி பிரதமர் பிரேமதாஸாவை நாம் அழைக்கவில்லை. இந்திய - இலங்கை அமைதி உடன்பாட்டை எதிர்க்க எம்முடன் சேரும்படி மட்டுமே அவரைக் கேட்டோம்,

—இப்படி எதிர்க்கட்சித்தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

எஹலியகொடையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய அவர், "நாம் அழைத்தோம் என்று அவர் கூறுவது கற்பனை" — என்று குறிப்பிட்டார். (உ-எ)

ஜீ.சி.ஈ. பரீட்சை முடிவுகள்:

தனிப்பட்டோருக்கான முடிவுகள் அடுத்த வாரத்தில்

யாழ்ப்பாணம் நவ 5

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான, ஜீ. சி. ஈ. சாதாரண தர விசேட பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வாரத்தில்யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் தபால் திணைக்களத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் — ரயில் சேவை சீரற்றிருப்பதால் அவை இங்கு வந்துசேர்வதில் மேலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-10)

இன்று

யாழ்ப்பாணம், நவ.5 1986 ஆம் 87 ஆம் ஆண்டுகளில் டிப்ளோமா பயிற்சி பெற்ற மாணவர்களின் ஒன்று கூடல் வைபவம் இன்று பிற்பகல் 2. 30 மணியளவில் யாழ் பல்கலைக் கழகத்தில்நடைபெறவுள்ளது. (ஒ-5)

கி. வா. ஜகந்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு தொடக்க காலத்தில் இருந்து தொடர்ந்து 56 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1906 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருச்சி மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரத்தில் பிறந்த இவர், மிகச் சிறந்த இலக்கியப் பேச்சாளர், எளிமை மாமனிதர் ஆவார். இலக்கியமாகப் பழகியவர் (உ-எ)

இன்று ரயில் வரும்

யாழ்ப்பாணம் நவ 5

யாழ்ப்பாணத்துக்கான வார இறுதி ரயில் சேவை இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ரயில் நிலைய அதிகாரிகள் இது தொடர்பாக வவுனியா ரயில் நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது ரயில் சேவை நடைபெறுவது குறித்து ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

இதனிடையில் சரக்கு ரயில் ஒன்றும் இன்று இங்கு வரக்கூடும் என வும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

நிவாரணப்,...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டு மணிக்கு திறக்கப்பட்டு நிவாரணப்பணம் வழங்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். மாலை நான்கு மணிவரை வங்கி திறந்திருக்கும்.

இதற்கெனஇன்றுவங்கியின் ஆறு கருமபீடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்குமென வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-ஐ)

மாணவருக்குப் பாதுகாப்பு பாடசாலைக்குள் மட்டும்

கொழும்பு, நவ. 5

பாடசாலைகளுக்குள் மட்டும்தான் மாணவருக்குப் பாதுகாப்பு வழங்க முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

பாடசாலைகளுக்குள் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர் தலைவர்கள் ஆகியோரைக் கல்வி அமைச்சு பணித்திருக்கிறது. அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இத்தகவல்களை வெளியிட்டார். (உ-எ)

✶ சிறுவர் ✶ சிறுமியர் ✶ ஆடவர் ✶ மகளிர்
ஏற்றதான கண்கவர் தீபாவளி
ஜவுளித் தெரிவுகளுக்கு
மம்மி டி
100, கண்டி வீதி,
சாவகச்சேரி. (7865)

மரண அறிவித்தல்கள்

திரு. முருகேசு நடராசா
(வட்டுக்கோட்டை)

திரு. முருகேசு நடராசா முகாமையாளர் மக் ரவல்ஸ் (Mack Travels, Pvt. Ltd) யாழ்ப்பாணம், முன்னைநாள் (Air Ceylon உத்தியோகஸ்தர் காலமாகி விட்டார். இவர் கனகேஸ்வரியின் (ஆசிரியை, வட்டு இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், முகுந்தன், கஜனு ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வநாயகம், கதிரவேற்பிள்ளை, நவரத்தினராசா (முகாமையாளர் ஹற்றன் நஷனல் வங்கி), காலஞ்சென்ற விஜயலட்சுமி பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை (C. G R), காலஞ்சென்ற பஞ்சலிங்கம் (இலங்கை வங்கி), நிரஞ்சனாதேவி நவரத்தினராசா (ஆசிரியை இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), சண்முகநாதன், யோகலிங்கம், பேரின்பநாதன், சோமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சுதேசபவனின் P H. I) சகலனுமாவார். அன்னாரது ஈமச்சடங்குகள் இன்றுசனிக்கிழமை(5 11- 88) நண்பகல்12மணியளவில்வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Mack Travels (Pvt) Ltd).
ஸ்தாபனத்தார்.

(C/ 739)

திருமதி மாரிமுத்து செல்லத்துரை

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த செல்லத்துரை மாரிமுத்து காலமானார். இவர் செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா வள்ளி அம்மையின் அன்புமகளும் நீலகண்டன் (முன்னாள் எழுதுவினைஞர் பொலீஸ் திணைக்களம், உரிமையாளர் நல்லதம்பி ஸ்ரோர்ஸ் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்,) தட்சணாமூர்த்தி (சுவிஸ்), சிவசோதி (ஜேர்மனி), கணேசமூர்த்தி (சுவிஸ்), நவரட்ணராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்ற இராசம்மா, செல்லம்மா, சின்னம்மா, இலட்சுமி, நடேசு, பராசக்தி, பொன்னம்மா தம்பிராசா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி கார்த்திகேசுவின் சகலியும், காலம்சென்ற அந்தோனிப்பிள்ளை, காலம்சென்ற கனகசபை, நடராசா, மனோன்மணி, துரைராசா, காலம்சென்ற சுபமணியம், நிர்மலானந்தராணி, வில்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரதீபன், நிரஞ்சனி, திலீபன், நிருபனசுகந்தினி, மதன், தர்ஷனி, தட்சாயினி, நிஷாந், கவிதா, சந்துரு ரமணன, தாரணி, அருண் ஆகியோரின் அன்புப் பேத்தியும், தில்லைவாணி, கிரிஜாம்பாள், சறோஜினிதேவி (ஜேர்மனி), ஆனந்தி (சுவிஸ்) ஆகியோரின் மருமகளும் ஆவார் அன்னாரின் பூதவுடல் 5-11-88 இன்று சனிக்கிழமை பி. ப. 3 மணியளவில் புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செ. நீலகண்டன்
புங்குடுதீவு. (7886)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையில் நடாத்துனர் பதவிக்கான விண்ணப்பம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் நடாத்துனர் பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகைமையுடையோரிடமிருந்து கோரப்படுகின்றன.

தகைமைகள்:

வயது: - 01-11-88 ஆந் திகதியன்று 20 வயதிற்கும் 42 வயதிற்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

உயரம்: - 5 அடிக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

நிறை: - 100 இருத்தலுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை: - ஜீ. சீ ஈ (சாதாரண) பரீட்சையில் ஒரு முறையிலோ அல்லது இரு முறையிலோ தமிழ் பாஷையும், கணிதம், அல்லது தூய கணிதமும் உட்பட ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
ஆளணி முகாமையாளர்,
வட பிராந்திய போக்குவரத்துச் சபை,
பலாலி வீதி,
கோண்டாவில்.

விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தில் 21-11-1988 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஆளணி முகாமையாளர்
வட பிராந்திய போக்குவரத்துச் சபை.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் நடாத்துனர் பதவிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

(1) முழுப்பெயர்:-
(2) நிரந்தர முகவரி:-
(3) பிறந்த திகதி:-
(4) 01- 11- 88இல் வயது -:
(5) தேசிய இனம்;-
(6) உயரம் -..... அடி -..... அங்குலம் -.....
(7) நிறை -..... முத்தல் -
(8) கல்வித் தகைமை - ஜீ. சீ ஈ (சாதாரணம்) பரீட்சையில்

சித்தியடைந்த தரங்களும்	பாடங்களும்	சித்தியடைந்த வருடம்
(1)		
(2)		
(3)		
(4)		
(5)		
(6)		
(7)		
(8)		

(9) வேறு தகைமைகள் இருப்பின் குறிப்பிடுக -
(10) தேசிய அடையாள அட்டை இல -

மேற் குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன் பிழைகள் காணுமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் நானறிவேன்.

....
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.
(C/443)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05- 11- 1988 இல்அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthavan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Saturday 5th November 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன். விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

சுஞ்சரி
சுந்தரி
05 -11-1988 சனிக்கிழமை

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது. முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st – Lane, Pt - Pedro Road, Jaffna.

கருத்துக் கலசம்

ஒளி மயம்

உலகம் இப்போது உலகமாக இல்லை! அதாவது உலகத்தில் வாழும் மனிதன் மனிதனாக இல்லை! மனிதனது வாழ்க்கை, நெறி தழுவிய, சீரான, வாழ்க்கையாக இல்லை.

மனிதன் தானாகவே வாழ்க்கையை அதிவேகமாக்கிக் கொண்டான். விஞ்ஞானம், தொழில்நுட்பம், முன்னேற்றம் என்பவற்றின் விளைவே அந்த அதிவேகம்.

அந்த அதிவேகத் தன்மையால், ஒவ்வொருவரது நாளாந்த வாழ்க்கையும் இயந்திரமயமாகிவிட்டது போன்ற தன்மை பரவி நிற்கிறது. அதன் காரணமோ என்னவோ அநேகமாக அதன் விளைவு அல்லது செவ்வாக்கு என்று கூறுமளவுக்கு, மனிதன் இயந்திரமாக மாறிவிட்டான்.

கூட்டு மொத்தத்தில், மனிதப் பண்பும், மனித நேயமும் அருகி விட்டன. உலகில் எங்கு பார்த்தாலும் சண்டை, சச்சரவு, குழப்பம், வன்செயல், பதவி ஆசை, அடக்கி ஆளும் வெறி, ஆக்கிரமிப்பு வேட்கை, மேலாதிக்க மோகம் என்று உலகம் அல்லோல கல்லோலப் பட்டு நிற்கிறது. மக்கள் சஞ்சலம் நிறைந்தவர்களாக, மனஅமைதிகுறைந்தவர்களாக அவதிப்படுகிறார்கள்.

தர்மம் என்பது வெறும் நான்கு எழுத்துச் சொல்லாகவே உள்ளது. அதர்மம் தான் மேலோங்கி நிற்கிறது. அதுவே உலகத்தை ஆட்சியும் செய்கிறது.

தர்மம் அருகும் போது உலகம் அழியும். மக்கள் அழிவார்கள் இயற்கையில் பிரளயம் தோன்றும் என்று முதியோர்கள் சொல்வது உண்டு.

ஆனால் அதர்மத்தால் நீண்டகாலம் ஆட்சி செய்ய முடியாது. ஒரு கட்டத்தில் அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, இருண்ட உலகில் ஒளி ஏற்ற இயல்பாகவே ஒரு மாற்றம் வரும்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பதில் விளைவு உண்டு என்ற தத்துவம் பிழைப்பதில்லை.

அதர்மத்தின் பதில் விளைவாக உருவெடுக்கும் ஒன்றில் அதர்மத்தை அழிக்க வல்ல ஓர் உள்ளீடு இருக்கும்.

அந்தஉள்ளீட்டை இனங்கண்டு அதனை வியாபிக்கச் செய்தால், செயற்படவைத்தால் இருள்போக்கி ஒளி ஏற்றலாம்.

மனிதனிடம் உள்ள இயந்திரப் போக்கும், அதர்மத் (அசுரத்) தன்மையும் நீங்கி மனிதப் பண்பும், மனு நீதியும் வளர்ந்தால் ஒளிமயமான உலகத்தைத் தரிசிக்கலாம்.

மூஷிகவாகனனுக்கு பள்ளி கொள்ளும் பரந்தாமனுக்கு பாம்புக்கு பகையான கருடன் வாகனம்!

- டி. எஸ். நாராயணசுவாமி -

ஸ்ரீமன் நாராயணனைக் குறித்து தவமிருந்து வேண்டிய வரங்கள் பெற்றுள்ள அடியவர்களின் வரலாறு பல உண்டு.

அந்த நாராயணனே வரம் கேட்டு வாங்கிய வரலாறும் ஒரு சில உண்டு.

மாவலியிடம் மண்தானம் கேட்டான்.

கர்ணனிடம் புண்ணியத்தைக் கேட்டான்.

குபேரனிடம் பொன் தானம் கேட்டான்.

கருடனிடம்...?

என்ன வரம் கேட்டான்?

ஏன் கேட்டான்? பார்ப்போம்.

வினதை – கத்துரு

தட்சப் பிரஜாபதி தன் குமாரிகளில் பதின்மூன்று பேரை சச்யப முனிவருக்கு மணஞ்செய்து கொடுத்தான். அவர்களில் ஒருத்தியின் பெயர் வினதை. இன்னொருத்தியின் பெயர் கத்துரு.

வினதை மீது பொறாமை கொண்டிருந்தாள் கத்துரு. வினதையை அடிபணிய வைக்கத்தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

வினதையின் புதல்வர்களில் ஒருவன் தான் கருடன்.

கத்துருவின் புதல்வர்கள் ஆதிசேஷன், கார்க்கோடகன்.

ஒருநாள் தேவேந்திரனின் வெண்ணிறப்புரவியை வினதையும் கத்துருவும் கண்டனர்.

அந்தப் புரவி முழுக்க முழுக்கத் தூய வெண்ணிறமாக இருப்பதை வினதை குறிப்பிட்டு வியந்தாள். ஆனால் அதன் வால் கறுப்பு என சாதித்து வாதம் செய்தாள் கத்துரு. எவர் வாதம் உண்மையானதோ அவர்களுக்கு மற்றவள் அடிமை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

தன் வாதம் வெற்றிபெற அந்தப் புரவியின் வாலில் தொங்கி அது கருமையாகத் தென்படுவது போல் செய்யும்படி தன் மகன் ஆதிசேஷனுக்குக் கட்டளையிட்டாள் கத்துரு.

அடிமை

அது அதர்மம் என மறுத்து விட்டான் ஆதிசேஷன். அந்தப்பணியைச் செய்து முடித்தான் கார்க்கோடகன். வினதை, கத்துருவுக்கு அடிமையானாள்.

அவளைச் சிறையிலிட்டு தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டாள் கத்துரு.

வினதையை விடுதலை செய்யும்படி கச்யப முனிவர் வேண்ட,

யுத்தம் ஆரம்பம்

திருமாலுக்கும் கருடனுக்கும் கோர யுத்தம் தொடங்கியது.

சச்ய பரிடம் கற்ற மந்திர, தந்திர வித்தைகளில் திருமாலை திணறடித்துக் கொண்டிருந்தான் கருடன்.

அவனது மாற்று பக்தி காரணமாக அவனுக்கு அளவு கடந்த பலம் கிட்டியது.

21 நாள் யுத்தம் வெற்றி தோல்வி இன்றி நிகழ்ந்து கொண்டிருந்தது.

திருமாலே தன்னை ஜெயிக்க முடியவில்லை என்று அறிந்த கருடனின் ஆணவம் தலைக்கு ஏறியது.

கர்வபங்கம்

கருடனுக்கு கர்வபங்கம் நிகழும் நேரம் நெருங்கியது.

அப்போது திருமால் கருடனிடம், 'கருடா, உன் மாத்ருவரம் கேளும். நான் தருகிறேன்'— என்று கர்வத்துடன் பதிலளித்தான் கருடன்.

'நீ வாக்குத்தவற மாட்டாயே?'— திருப்பிக் கேட்டார் திருமால்.

கருடன் பதிலளித்தான்: 'என் தாய் மீது ஆணை. திருமாலுக்கே வரம் தந்த பெருமை எனக்குக் கிடைக்கட்டும்'—

ஸ்ரீமன் நாராயணன் வரம் கேட்டார்: 'அப்படியானால் நீயே எனக்கு வாகனமாக இருந்து சேவை செய்யும் தொண்டனாக வேண்டும்.

கருடனின் கர்வம் சிதறியது. ஆணவம் அழிந்தது. அவன் அகக்கண்கள் திறந்தன.

வாகனமான கருடன்

பகவானுக்கு வாகனமாகும் பாக்கியத்தைத் தனக்குத்தர அதையே வரமாகக் கேட்டு அருள் புரிந்ததை எண்ணி ஆனந்தித்தான். தன் தாய்க்குச்செய்ய வேண்டிய கடமையை முடித்து விட்டு வருவதாகக் கூறி, பகவானின் அனுமதியுடன் அமிர்த கலசத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

அமிர்தகலசத்தை கத்துருவிடம் தந்து தாயை விடுதலை செய்தான் கருடன். தன் பிள்ளைகளான சர்ப்பங்கள் அனைவரும் அமிர்தத்தைக் குடிக்க வேண்டும் என விரும்பினாள் கத்துரு.

அமிர்தகலசத்தைத் தர்ப்பைப் புற்கள் மீது வைத்து விட்டு கார்க்கோடகனை அழைத்தாள், கத்துரு.

ஸ்ரீமன் நாராயணன் ஆக்ஞைப்படி ஆதிசேஷன் தன் வாலால் அமிர்தகலசத்தைத் தட்டிவிட அமிர்தம் தர்ப்பையின் மீது சிந்தி மறைந்தது.

கார்க்கோடகன் முதலான சர்ப்பங்கள் அமிர்தத்திற்காக தர்ப்பையை நக்கியபோது அவற்றின் நாக்கு பிளவுபட்டதால்தான் இன்றும் நாகங்களுக்குப் பிளவுபட்ட நாக்கு இருப்பதாகக் கூறுவார்கள்.

தன் தாய்க்குத் தீங்கு இழைத்த கத்துருவின் புத்திரர்கள் என்றகாரணத்தால் தான் கருடனுக்கும் நாகங்களுக்கும் பகை ஏற்பட்டது.

கருடனும் பாம்பும்

தன்னை வாகனமாக்கிக் கொண்ட ஸ்ரீமன் நாராயணனின் திருமேனியைத் தாங்குகின்ற காரணத்தால் கருடனும்,

தாயார் கட்டளையிட்டும் தீமைகளைச் செய்யாமல் தர்ம நெறியில் நின்ற காரணத்தால் ஆதிசேஷனும் பகையின்றி பாசத்துடன் பகவான் சந்நிதியை அலங்கரிக்கின்றனர்.

'பாம்புக்குப் பகை கருடன்' என்பர்.

அந்தப் பாம்பிலேயே பள்ளி கொள்ளும் பரந்தாமன் ஸ்ரீமன் நாராயணன் அதற்குப் பகையான கருடனையே தன் வாகனமாக்கிக் கொண்டு உள்ளார்.

பகவான் சந்நிதியில் பகை கூடப் பாசமாகி விடும் என்பதைக் காட்டத்தானோ, பள்ளி கொள்ள ஒரு பாம்பையும் எழுந்தருள கருடனையும் வாகனமாகக் கொண்டுள்ளார், திருமால். ★

நூறுண்டு வாழ நடந்து பழக வேண்டும்

- ஜோன் டிக்னம் -

விடியலின் இருளைக் கிழித்தவாறு அவர் வேகமாக நடக்கிறார்.

முதுகை நேராக நிமிர்த்தி வயிற்றை உள்ளடக்கிய வண்ணம், கால்களை நீட்டிப் போட்டு, கைகளை முன்னும் பின்னும் வீசியவாறு நடந்து செல்கிறார்.

அவர் மட்டுமல்ல, அநேக தம்பதிகள், முதியவர்கள்; இளைஞர்கள் போன்றோர் நடக்கிறார்கள்; சிலர் (ஜொகிங்) துள்ளல் மென்னடை போடுகிறார்கள்.

ஆம், இன்று ஏராளமான மக்கள் நடக்கிறார்கள்.

சரியான பாதை

உண்மையிலேயே உடற்பயிற்சிக்காக நடப்பவர்கள் சரியான பாதையிலே காலடி எடுத்து வைக்கின்றார்கள்.

'நடத்தல்' என்ற உடற்பயிற்சி பிரபலமாகிக் கொண்டிருக்கும் காலம் இது.

''நீங்கள் என்ன நிலையில் இருந்தாலும் அப்படியே வாருங்கள்'' என்று இந்தப் பயிற்சி அழைப்பது தான் அதன் உண்மைக்காரணம்.

விசேஷ சாதனங்கள் அதற்கு வேண்டியதில்லை, அறிவுரைகள் அவசியமில்லை, அதிகமாக நேரங்கூட தேவை இல்லை, அதற்கு என தனியிடமும் ஒதுக்க வேண்டியதில்லை, ஒரு ஜோடி காலணிகள் இருந்தால் அதுவே போதும்.

எந்த நேரத்திலும், எந்தக் காலநிலையிலும் தனியாகவோ அல்லது மற்றவர்களுடனோ நடக்கலாம்.

எத்தகைய செலவும் கிடையாது. வேறு சேதமோ, காயமோ ஏற்படவும் வழியில்லை.

நன்மைகள்

பொதுவாக, இதுவரை நடத்தப்பட்டிருக்கும் ஆய்வுகளின்படி, நடத்தல் எனும் பயிற்சியானது நல்ல உடல் நலனோடு இனிமையான இளமையோடு நீண்டகாலம் வாழ உதவி செய்கிறது என்று கண்டறியப்பட்டிருக்கிறது.

17 ஆயிரம் ஹவார்ட் பல்கலைக்கழகப் பட்டதாரிகளை வைத்து 16 மாதங்களாக ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தது விடாமல் அவர்கள் தொடர்ந்து செய்த உடற்பயிற்சியே என்று அந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

The New England Journal of Medicine என்னும் சஞ்சிகை இத்தகவல்களை வெளியிட்டிருக்கிறது.

இந்த ஆய்வை நடத்தியவர் டாக்டர் ரால்ப்பேஃபன்.

ஒவ்வொரு வாரமும் 4½ கிலோ மீற்றருக்குக் குறைவாக நடப்பவர்களைவிட கிட்டத்தட்ட 13-15 கிலோ மீற்றர் தூரம் வரை நடப்பவர்களிடையே மரண அபாயம் 21 விழுக்காடு குறைவாகவே காணப்பட்டது என இந்த ஆய்வு காட்டியது.

சற்று வெளியே சென்று உலவி விட்டு வருவதன் மூலம் தசைகளை சற்று தளர்த்தி விட்டு, சில கலோரிகளையும் எரித்துக் கொள்ளலாம்.

நடப்பது தரும் பலாபலன்கள்

ஆனால் சற்று முயற்சி எடுத்து திட்டமிடுவதன் மூலமும், தொடர்ந்து சுறுசுறுப்பாக நடைபோடுவதின் மூலமும் பின்வரும் சிறந்த பலன்களை அளிக்கக்கூடிய உடலை தகுதியான நிலையில் வைத்துக் கொள்ளக்கூடிய திட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.

* நடத்தல் மிகச் சிறந்த ஒரு பயிற்சி. அது இருதயத்தையும் நுரையீரல்களையும் நன்கு பலப்படுத்திக்கொள்ள உதவும்.

★ உடலில் எடை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளலாம். அல்லது திட்டமிடப்பட்ட உணவின் மூலம் எடையைக் குறைத்துக்கொள்ளலாம்:

எலும்புகளில் ஏற்படும் இழப்பிற்கு (Osteoporosis) எதிராகப்போராடலாம்.

★ உடலை வலுப்பெறச் செய்து அதன் பயனாக ஏராளமான சக்தியைப் பெற்றுக் கொள்ளலாம்.

★ ஆழ்ந்த நித்திரை நம்மைத் தேடிவரச் செய்யலாம்.

★ மூட்டுகள், தசைநார்கள், தசைத் தளைகள் ஆகியவற்றின் விறைப்பினைக் குறைத்து வலுப்பெறச் செய்யலாம்.

* நடப்பதற்கு உதவும் தசைகளை வலுவுள்ளதாக்கி மேம்பாடடையச் செய்யலாம்.

* உடலின் மேற்பகுதி, கெண்டைக்கால் பகுதி, புட்டம், இடுப்பு அடிவயிறு, தொடை ஆகிய உறுப்புக்களை உரமுள்ளவைகளாக்கலாம்.

* மன இறுக்கத்தைப் போக்கி மனப்பாங்கை மேம்பாடடையச் செய்யலாம்.

★ மேலும் நடத்தலானது இரத்த அழுத்தத்தையும்; கொலஸ்டிராலையும், அமிலங்களை (Triglyceride) குறைக்க உதவிசெய்யும்.

* நடத்தலானது நீங்கள் உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் இருக்கஉதவுகிறது. அதன் விளைவாக நீங்கள் உடல்நலத்தோடு நீண்ட காலம் வாழ உதவிக்கரம் நீட்டுகிறது. ★

ஆதாரம்: நல்வழி.

ஊது கண்ணு குழலெடுத்து உயர்ந்து தமிழ்க் குலம் சிறக்க!!

தேவர்பட்ட துயரையெல்லாம்
தீர்த்தழிக்க அசுரனெதிர்
தேரேறிச் சென்றகண்ணு!
தெருத் தெருவாய் ஈழமதில்
ஆருமற்ற அனாதைகளாய்
அல்லலுறும் தமிழர்களை
வீறுபெற்று எழுந்து வாழ்வில்
வெற்றிபெறச் செய்திடவா!

தேவர்களின் மகிழ்ச்சியிலே
தமிழர்களும் பங்குகொண்டு
தீபமேற்றித் தீபநாளை
திரண்டு கொண்டாடி வந்தோம்!
ஏதுபயன்? எங்கள்வாழ்வில்
இன்றுவரை இன்பமில்லை!
ஊதுகண்ணு குழலெடுத்து
உயர்ந்துதமிழ்க் குலம்சிறக்க!

அரக்கர்குலம் அழிந்ததன்று!
ஆனாலும் அவர்கள்குணம்
இறக்காமல் மண்ணிலின்றும்
ஏன்கூத்து ஆடுதய்யா?
பரந்தாமா நாங்களுன்னை
பக்தியுடன் கரம் குவித்து
சிரம்தாழ்த்தி வேண்டுகிறோம்
செந்தமிழைக் காத்திடவா!

பாற்கடலில் துயில்பவனே!
படிப்படியாய் எங்களினம்
ஏற்றமின்றிப் படுகுழிக்குள்
இறந்துவிழுந் தழிகிறதே!
கூற்றுவனும் எங்களுயிர்
கொல்லுதற்கே துள்ளுகிறான்!
வேற்றுமையைக் களைந்துபுது
விளக்கேற்ற வாருமய்யா!

இழப்பதற்கு ஏதுமின்றி
இருட்டிலிலே கிடக்கின்றோம்!
விளக்கேற்றி எங்களினம்
வெளிச்சத்தில் வாழ்வதெப்போ?
மழைமேக வண்ணநின்
மணிக்கரத்தில் சக்கரத்தை
சுழற்றிவா எமைவதைக்கும்
துயர்யாவும் பொடிபடவே!

—செ. குணரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேம்ஸ்

கி. பி. 2037....

விமானம் உயர உயரப் பறந்துகொண்டிருந்தது. மீண்டும் ஒரு முறை பக்கத்து 'சீற்' றைத் திரும்பிப் பார்த்துக் கொண்டேன். ஆனந்தத்தால் நெஞ்சம் துள்ளிக்குதித்துக் கொண்டிருந்தது. ஆகா! எத்தனை அருமையான படைப்பு. அதுவும் என்னைப்பார்த்து அடிக்கடி புன்னகைத்துக் கொண்டு; எமது மண்ணில் எவருக்கும் கிட்டாத அதிஷ்டம் எனக்குக் கிட்டியுள்ளது போலத் தோன்றியது.

யாழ்ப்பாணத்திலேயே மிகப் பெரிய நிறுவனம் எங்களுடையதுதான். ஏனைய நிறுவனங்களைப்போல் எமது நிறுவனமும் அரசுக்குச் சொந்தமானது. இது மக்களுக்குப் பலவிதமான சேவைகளை அளித்துக் கொண்டிருக்கிறது.

முக்கியமாக ஒருவருடைய முகத்தை வடிவமைத்துக் கொடுத்தல். எங்களிடம் முகங்களின் பல மொடல்கள் இருக்கின்றன. ஒருவர் வந்து தனக்குப் பிடித்த மொடலைத் தெரிவு செய்வார். அவரது முகம் 70வீதம் அந்த மொடலை ஒத்ததாக மாற்றி அமைக்கப்படும் மற்றும் செயற்கை இரத்தம், அவயவங்கள் என்பன தயாரித்து வழங்குதல்.

வழுக்கையர்களுக்கு முடி வளர்வதற்கான சிகிச்சை அளித்தல் போன்ற பல துறைகளில் எமது நிறுவனம் மக்களுக்குச்சேவையாற்றிக்கொண்டிருக்கிறது.

மீண்டும் ஒரு முறை திரும்பி பக்கத்து 'சீற்' றைப் பார்த்துக் கொண்டேன்: கட்டையான முடி. கறுப்புக்கண்ணாடி. அசைவுகளில் ஒரு நிதானம். பிரம்மனுக்கே சவால்விடும் தோற்றம். எத்தனை அருமையாக உருவமைக்கப்பட்டிருந்தான் அந்த ரோபோ இயந்திர மனிதன். அருகில் சென்று அவதானித்துப்பார்த்தால் தான் அது மனித இயந்திரம் என்பது புலப்படும்.

இந்த ரோபோவினுடைய பெயர் என்ன தெரியுமா? ஜேம்ஸ். Xp74 வரிசையில் தயாரிக்கப்பட்ட மிக நவீன வடிவமைப்பே இந்த ஜேம்ஸ்.

ஜேம்ஸ் ஐ எங்களுடைய நிறுவனத்துக்காக ரஷ்யாவிலிருந்து தருவிப்பதற்கு நான் பட்ட சிரமங்களைச் சொல்லில் வடிக்க முடியாது.

எமது மண்ணில் முதலில் கால் பதித்த நவீன ரோபோ ஜேம்ஸ் என்பதைச் சரித்திரம் சொல்லும்.

அந்தச் சரித்திரத்தின் எங்காவதோர் மூலையில் அதை அழைத்து வந்ததற்காக என்னுடைய பெயரும் இடம் பெறும் என்று மனதில் ஒரு நப்பாசை.

ஜேம்ஸ்ஐ எமது நிறுவனத்தில் வேலைக்குச் சேர்த்ததும் எனது வேலைப்பழுவின் பெரும் பகுதி குறைந்துவிடும். நிறுவன ஒழுங்குவிதிகள், ஆலோசனை வழங்கல், கம்பியூட்டர்களைக் கையாளுதல் போன்ற பல துறைகளில் இவனை ஈடுபடுத்த முடியும். புத்தகங்களிலிருந்தும் சாதாரண நடைமுறைகளிலிருந்தும் புதிய புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வதற்கும் இவனது மெமறியில் வசதி செய்யப்பட்டுள்ளது.

இனி எனக்கு ஒரு சிறு விடயம் முதற்கொண்டு பெரிய விடயங்கள் வரையில் ஒவ்வொன்றையும் நெறிப்படுத்தி ஆலோசனை வழங்கிக்கொண்டிருக்கும் சிரமம் இருக்காது. நிறுவன நிர்வாகம், ஒழுங்கு என்பவற்றிற்காக சிலருடன் மனஸ்தாபப்படவேண்டி ஏற்படாது. எல்லாவற்றையும் இவனிடமே ஒப்படைத்துவிட வேண்டியதுதான். நிறுவனம் பற்றிய சகல தகவல்களையும் முதலில் இவனுக்கு வழங்க வேண்டும்.

''சாதாரண பொது விடயங்களில்கூட இவனால் ஆலோசனை வழங்கமுடியுமென்று சொன்னார்களே? ஒருமுறை பரீட்சித்துப் பார்ப்போமா?'' என எண்ணிக்கொண்டேன்.

திரும்பி அவனை ஆதரவாகப் பார்த்துப் புன்னகைத்தேன். பதிலுக்கு அவன் இதழ்கள் ஒரு முறை திறந்து மூடின.

'ஜேம்ஸ்! நான் ஒரு சின்ன விஷயத்தைப்பற்றி உங்களிடம் அபிப்பிராயம் கேட்கப் போகிறேன். உங்களுடைய மெமறிக்கு இதுவரையில் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து இதுபற்றிய உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல முடியுமா?' எனப் 'பேட்டி' பாணியில் ஆரம்பித்தேன்.

'ஆம்' எனப் பதிலளித்தான் ஜேம்ஸ்.

'ஒரு நாட்டை ஆளும் விடயத்தில் அனேகமாக தவறுகளும் அநீதிகளும் தான் நடந்துகொண்டிருக்கின்றன. பல கட்சி ஆட்சிமுறை இருக்கும் ஒரு நாட்டில் ஆளும் ஒவ்வொரு கட்சியும் நாட்டையும் மக்களையும் முன்னேற்றத் தெண்டிப்பதிலும் பார்க்கத் தன் கட்சியின் செல்வாக்கைப் பாதுகாப்பதிலும் உயர்த்துவதிலுமே கூடிய கவனம் செலுத்துகின்றன. அத்துடன் அதிகாரத்திலிருப்பவர்கள் தமக்கு அறிமுகமானவர்களுக்கு அதிக சலுகைகளைக் கொடுக்கின்றனர்: இலஞ்சம் வாங்குகின்றனர். இதனால் நாடு முன்னேறாமல் இருப்பது மல்லாமல் சாதாரண மக்கள் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகின்றனர். வோட்டுக்கேட்க மக்களிடம் பணிவாக வரும் அவர்கள் பதவிக்கு வந்ததும் தாம் பெரியவர்கள் என எண்ணி மக்களை மறந்துவிடுகின்றனர். ஒரு கட்சி ஆட்சிமுறை உள்ள நாட்டில் அதிகாரத்திலிருப்பவன் தன்னைத் தட்டிக் கேட்க யாருமில்லை என்ற காரணத்தால் சர்வாதிகாரியாக மாறி மக்கள் மீது அடக்குமுறைகளைத் திணிக்கிறான். இதனால் மக்கள் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இவை பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன? இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள்கூறும் ஆலோசனைஎன்ன?'

ரோபோ அசையாது இருந்தான். பின் தலையைத் தடவிக் கொண்டான். சித்திக்கிறானா? அல்லது விடை தெரியாது முழிக்கிறானா? சிரிப்பாக இருந்தது.

'ஒரு ரோபோவை ஆட்சி பீடத்தில் அமர்த்தினால் சகல பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்'.

எனக்கு ரோபோவின் இந்தப் பதில் வியப்பைத் தந்தது. 'கள்ளப்பயல். தன்னுடைய ஆக்களை ராசாவாக்கிப் போடுவம் என்று பார்க்கிறான்' என்று எண்ணிக்கொண்டேன்.

'நீங்கள் கூறியது எப்படிச் சாத்தியமாகும்?' அவனிடம் கேட்டேன்.

'நாட்டைப் பற்றியதும் சட்டதிட்டங்கள், உலக அரசியல் விடயங்கள் பற்றியதுமான சகல விடயங்களையும் ரோபோவினுடைய மெமறிக்குக் கொடுத்தல் வேண்டும். பின் அவனின் உத்தரவின்படி நாட்டை வழிநடத்த வேண்டும். ரோபோ சரியான முடிவுகளையே எடுக்கும். மனிதனைப்போல் உணர்ச்சிகளுக்கும் ஆசைகளுக்கும் கட்டுப்பட்டுப் பிழையான முடிவுகளை எடுக்காது. மனிதன் பிழை விடுவதற்குக் காரணம் உணர்ச்சிகள் ஆசைகள் ஆணவம் என்பவையே. ரோபோவிடம் இவை இல்லை'

ரோபோவினுடைய பதில் எனக்கு வேடிக்கையாக இருந்தது. இதற்கு உயிர் இருக்குமானால் நிச்சயம் மோட்சத்திற்குத்தான் போகும். காரணம் இதற்குத்தான் ஆசைகள், ஆணவம் என்பன இல்லையாமே.

விமானம் பலாலி விமான நிலையத்தில் இறங்கப்போவதற்கான முன்னறிவிப்பு வழங்கப்பட்டது. எமது உரிமைப் போராட்ட காலங்களில் இவ் விமான நிலையம் ராணுவமயப்படுத்தப்பட்டுச் சின்னபின்னமாக இருந்ததென அப்பு அடிக்கடி சொல்வது ஞாபகத்திற்கு வந்தது. இன்று இது உலகின் தலைசிறந்த விமான நிலையங்களில் ஒன்று என்பதை நினைத்துப் பெருமைப்பட்டுக்கொண்டேன்.

விமானம் தரையிலிறங்கியது. எங்களை அழைத்துச் செல்வதற்காக எயர் ரக்சி காத்திருந்தது. அதில் ஏறிக் கொண்டோம். எயர் ரக்சி உரும்பராயிலுள்ள எமது நிறுவனத்தின் மேல்மாடி இறங்குதுறையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

★ ★ ★

சீ பொறுத்துப் பொறுத்துப் பார்த்ததாகி விட்டது. எல்லா விடயங்களிலும் ஜேம்ஸ்லின் தலையீடு நீக்கமற நிறைந்திருக்கிறது. நான் கதிரைமேசையில் இருக்கிறேன். ஒன்றுமில்லாத வெண்காயம் போல, அவன் ஹீரோவாக உலாவருகிறான். எல்லோரும் அவனிடம்தான் தொடர்பு கொள்கிறார்கள். அவனுக்குத்தான் ஏதோ எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொள்கிறார்கள். என்னைக் கவனிப்பாரோ ஒரு விடயம் பற்றிக்கலந்தாலோசிப்பாரோ யாரும் இல்லை. சச்சா! இவனை இங்கு கொண்டு வராமலே இருந்திருக்கலாம். இவ்வளவு காலமாக இந்த நிறுவனத்தைத் திறம்பட நடத்தி வந்ததுயார்? இவர் வந்து தான் ஏதோ புதிது புதிதாகப் பண்ணிக்கொண்டிருக்கிறாரோ?

ஏன் இப்பொழுது கூட இவனை வேண்டாம் என்று திருப்பி அனுப்பிவிட்டால்?

அதற்கு நிறுவன நிர்வாகக் குழு அனுமதிளிக்குமா? இவன் வந்த பின்பு நிறுவனம் இலாபகரமாகவும் சிறப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறதே.

ஒரு கணம் சிந்தித்தேன். எனக்கே விநோதமாக இருந்தது. இயந்திரத்தில் கூட பொறுமைப்படும் நான் என்ன மனிதன்? அதற்கு உயிரில்லை. என் சொந்த முயற்சியின் பலனாக இங்கு தருவிக்கப்பட்ட ஒரு மெஷின். அது திறமையாக வேலை செய்தால் எனக்கும்தானே பெருமை. 'எங்களுடைய எயர் ரக்சி ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 60 கிலோ மீற்றர் தூரம் பறக்கிறது' என அடிக்கடி கூறி பெருமைப்பட்டுக் கொள்வதில்லையா? அதுபோலத்தானே.

இருந்தும் இவனது சர்வாதிகாரப் போக்கு சகிக்கக்கூடியதாயில்லையே. ஒரு சிறு அலுவல் கூட இவனது அனுமதியில்லாமல் செய்துவிட முடியாது. அப்படி ஏதாவது செய்துவிட்டால் அதில் எங்காவதோர் இடத்தில் பிழை கண்டுபிடித்துக்கொண்டு வந்து சத்தம் போட்டு அவமானப்படுத்திவிடுகிறான். யாராவது ஒரு பத்து நிமிடம் இங்கு வரப்பிந்திப் போனால் கூட வயிற்றில் அடிப்பதைப்போல் சம்பளத்தில் வெட்டுகிறான். அதுதான் போகிறது என்று விட்டாலும் நாலுபேருக்குமத்தியில் 'ஏன் லேற்' என்று அதிகார தோரணையில் வேறு கேட்டுத் தொலைக்கிறான்.

அன்று நான் மூன்று நிமிடம் பிந்திவந்ததற்குக்கூட சம்பளத்தில் வெட்டியதுமல்லாமல் நாலுபேருக்கு மத்தியில் என்னை அவமானப்படுத்தியும்விட்டான். எவ்வளவு கஷ்டப்பட்டு அவனை இங்கே கொண்டுவந்து ஒவ்வொரு விடயங்களையும் ஆசையாகச் சொல்லிக்கொடுத்து எத்தனையோ அரிய புத்தகங்களை எல்லாம் அதனுடைய மெமறியில் பதிவதற்காகக் கொண்டு வந்து கொடுத்து [illegible] தொழிலாளர்களை மனிதர்களுக்கும்] உனக்கும் என்ன வித்தியாசம்?

நண்பனே! நான் மீண்டும் சொல்லுகிறேன் யாரிலும் குற்றம் கண்டுபிடிப்பது சுலபம். ஆனால் நீயும் அதுபோன்ற நிலைகளை அடையும்போது அதேபோன்ற குற்றங்களைச் செய்துவிடுகிறாய்.

நண்பா! எந்த ஒரு தொழிலும் இன்னொரு தொழிலிலிருந்து உயர்ந்ததோ தாழ்ந்ததோ இல்லை. அப்படி நீ கருதுவாயானால் வோட்டுக் கேட்க மக்களிடம் பணிவாக வந்து பின் பதவி கிடைத்ததும் மக்களைக் குறைவாகக் கருதிப் புறக்கணிக்கும் அரசியல்வாதிகளுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்?

தோழனே! நான் மீண்டும் சொல்லுகிறேன் யாரிலும் குற்றம் கண்டுபிடிப்பது சுலபம். ஆனால் நீயும் அதேபோன்ற நிலைகளை அடையும்போது அதேபோன்ற தவறுகளைச் செய்துவிடுகிறாய்.

நண்பா! தேவையற்ற சிந்தனைகளால் மனதைக் குழப்பிக்கொள்ளாதே என்றும் சிரித்துக்கொண்டே இரு.

மனிதனே! ஒரு நாள் நீ இங்கு வந்துதித்தாய். அதனால் அப்போது உன்னவர்கள் மகிழ்ந்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் நீ அழுதுகொண்டிருந்தாய். எனவே நீ இறக்கும்வரை சிரித்துக்கொண்டே இருந்து விட்டு சிரித்துக்கொண்டே போய்விடு. அதன்போது உன்னவர்கள் அழட்டும்.'

தொடர்ச்சியாக நீண்ட நேரம் பேசிவிட்டு அமைதியாக எழுந்து நடந்துகொண்டிருந்தான் ஜேம்ஸ்.

என்மனதில் சிறிதளவு தெளிவு ஏற்பட்டிருப்பது போல் தோன்றியது.

ஆனால் ஜேம்ஸ் நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருந்தது. ஜேம்ஸ் எனக்குக் கூறிய கருத்துக்களை ஏதாவது புத்தகங்களிலிருந்தும் சாதாரண நடைமுறைகளிலிருந்தும் பெற்றிருக்கமுடியும்.

ஆனால் அவற்றை இச்சந்தர்ப்பத்தில் என்னிடம் சொல்லவேண்டும் என எப்படி அவனுக்குத் தோன்றியது?

என் மனநிலையை எவ்வாறு அவன் அறிந்துகொண்டான்?

என் நடவடிக்கைகளிலிருந்தும் முகபாவங்களிலிருந்தும் ஊகித்துக்கொண்டானா?

எப்படி இது சாத்தியமாயிற்று?

தற்செயலாக மெமறி பொக்ஸ்' இல் உள்ள ஏதோ ஒரு இணைப்பின்மூலம் ஜேம்ஸ் ஏதோ ஒரு வித்தியாசமான இயல்பைப் பெற்றிருக்கிறானா? இச்சம்பவம் மும்முரமாக நடந்துகொண்டிருக்கும் ரோபோ பற்றிய ஆராய்ச்சிகளுக்கு ஒரு முக்கிய திருப்புமுனையாக அமையுமோ? ★

மனித இயந்திரம் 'ரோபோ' வின் ஆதிக்கம் உலகில் பரவத் தொடங்கி இருக்கிறது.

மனிதன் பிழை விடுவதற்குக் காரணம் ஆசை, உணர்ச்சி, ஆணவம் ஆகியவற்றினால் ஆட்கொள்ளப்படுவதே.

இந்த உணர்ச்சிகளே இல்லாத 'ரோபோ' நாட்டின் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுவிட்டால்...

இந்த விஞ்ஞானக் கற்பனைச் சித்திரம் அந்த எதிர்காலத்தை விவரிக்கிறது.

- உரும்பராய் சிவன் சுதன் -

'ரோபோ' ஜேம்ஸ்: (மனிதனைப் பார்த்து) 'நான் உனக்குச் சலுகை காட்டினால் எனக்கும் தமக்கு வேண்டியவர்களுக்கும் சலுகை காட்டும் அரசியல்வாதிக்கும் என்ன வித்தியாசம்?'

பெரிதாகக் கருதினால் நிறுவனமோ நாடோ வளர்ச்சியடையமாட்டாது. அப்படி நீ கருதுவாயானால் நாட்டுமக்களை வெறுத்து சுட்சிவளர்க்கத் துடிக்கும் அரசியல்வாதி என்ன சிந்தனை? என் புத்தியைச் செருப்பால் அடிக்க வேண்டும்.

சீச்சீ அது என்ன மனிதனா? அல்லது உயிரா? பாவம் பார்ப்பதற்கு. ஒரு இயந்திரத்தைப் பழுதாக்கவேண்டும். அவ்வளவுதான். இவன் செயல்திறனை நிர்மூலமாக்சிவிட்டால் இவனைத் திரும்பவும் ரஷ்யாவிலுள்ள அதே எலெக்ரோனிக் சென்ரறுக்கு அனுப்பிவிட்டு நான் வேலைகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளலாம்.

எனது சுயநலத்திற்காக இப்படி ஒரு காரியத்தைச் செய்வது தவறாகாதா?

இது சுயநலமா? எத்தனை மனிதர்களின் வேலை வாய்ப்பை இவன் விழுங்கிக் கொண்டிருக்கிறான். எத்தனை வெறுத்து சுட்சிவளர்க்கத் துடிக்கும் அரசியல்வாதி

சஞ்சிகை வாழ்க!

சஞ்சீவி சஞ்சிகை வார இதழில் அனைத்து அம்சங்களும் மிகவும் நன்றாக உள்ளது.

இன்ஷா அல்லாஹ்.

செல்வி. ஏ. மெஹர்பான்பேகம்
926, எதுல் கோட்டே
கோட்டே.

★ ★ ★

அண்ணா கேள்வி - காந்திஜி பதில் சிந்திக்க வைத்தது

15. 10. 88 சஞ்சிகையில் வெளிவந்த அண்ணாவின் கேள்வியும் காந்திஜியின் பதிலும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன.

மகாகவி அருந்திய 'அமுதம்' பலே ஜோர்.

இது போன்ற பல அம்சங்கள் தொடர்ந்து சஞ்சீவி சஞ்சிகையை அலங்கரிக்க வேண்டும் என்பது எனது அவா.

– இ. சிவனேஸ்
மணித்தீவு.

★ ★ ★

புதிய தகவல்களைத் தருவது சஞ்சீவி

சஞ்சீவி வாசகர்களில் நானும் ஒருவன்.

கம்பியூட்டரைப் பற்றிய கட்டுரைகள் சஞ்சீவியில் வெளிவந்தன. அவை தந்த புதிய செய்திகள் மகிழ்ச்சியையும் வியப்பையும் தந்தன.

— உ. முரளீதரன்,
இணுவில்.

★ ★ ★

படிப்போர் பயனடையும் சஞ்சீவி

சஞ்சீவி மலையில் நோய் தீர்க்கும் அரிய லிகைகள்மூ உள்ளன.

அது போன்று சஞ்சீவிச் சஞ்சிகையிலும் படிப்போர் பயன்பெறும் பல அம்சங்கள் நிறைந்துள்ளன.

— செ. குலபாலசெல்வம்,
கருங்கண்டல்,
அடம்பன்.

★ ★ ★

அறிவுக்கு விருந்தான சஞ்சீவி

சஞ்சீவி சஞ்சிகை தனியிடம் பிடித்து விட்டது.

சஞ்சீவியில் ஒவ்வொரு ஆக்கமும் வெகுபிரமாதம்.

அறிவுக்கு விருந்தான சஞ்சீவி சஞ்சிகை பல்லாண்டு நிலைத்து நிற்க வாழ்த்துகின்றேன்.

சஞ்சீவியில் 'சஞ்சிகை' தனி இடம் பிடித்துவிட்டது. ஒவ்வொரு ஆக்கமும் வெகு பிரமாதம். அறிவுக்கு விருந்து. பணி தொடரட்டும்.

— வாழையூர் ரி. ரஜந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்நாம் விடுதலை வீரர்கள் நவீன ஆயுதங்களைப் பெற கடைப்பிடித்த யுக்தி!

வியட்நாமில் அமெரிக்க துருப்புகள் பிரவேசம் செய்த நேரம் அது.

பெரும் காடுகளில் மறைந்திருந்த வியட்நாம் விடுதலை வீரர்களை தேடிப்பிடித்து கொன்று குவிக்க அமெரிக்க இராணுவ வீரர்கள் நவீனரக துப்பாக்கிகளை ஏந்தியபடி நடந்து கொண்டிருந்தனர்.

பதுங்கி இருந்த வியட்நாம் வீரர்களிடமோ அந்த அளவு நவீன ஆயுதங்கள் கிடையாது. இந்நிலையில் அமெரிக்க இராணுவத்தை எப்படி நாம் எதிர்த்துப் போராடப் போகிறோம் என்ற சிந்தனையுடனே வியட்நாம் வீரர்கள் அவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

அமெரிக்க இராணுவத்தினர் ஒவ்வொருவருமே துப்பாக்கி ஏந்திய கையோடு வாயில் எதையோ போட்டு சுவைத்துக் கொண்டே நடப்பதை வியட்நாம் வீரர்கள் கவனித்தார்கள்.

எனவே அவர்கள் வாயில் எதைப் போட்டு அப்படி மெல்லுகிறார்கள் என்பதை அறிய தீவிரமானார்கள்.

இந்நிலையில அமெரிக்க இராணுவத்தினர் சிலர் வாயில் மென்று வந்தவத இடே துப்பிச் செல்வதைக் கவனித்துவிட்டு இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து மறைந்ததும் வியட்நாம் வீரர்கள் அந்த இடத்திற்கு ஓடிப்போய் அந்தப் பொருளை சோதனை இட்டார்கள்.

அது சுவிங்கம் என்பது தெரியவந்தது

உடனே வியட்நாம் வீரர்களுக்கு மூளை வேகமாக வேலை செய்தது. நிறையச் சுவிங்கங்களை வாங்கி அவைகளை நீண்ட குச்சிகளின் முனைகளில் இணைத்தார்கள்.

தாங்கள் பதுங்கி இருக்கும் காடுகளில் பெரிய மரங்களின் உயரமான கிளைகளில் இருக்கும் தேன்கூடுகளை அந்தக் குச்சியின் முனையால் தீண்டித் தீண்டி அதிலுள்ள ஈக்களுக்கு ஆத்திரமூட்டினார்கள்.

இது நடந்து சில நாட்களில் மீண்டும் அமெரிக்க இராணுவத்தினர் அந்தக் காட்டுப்பகுதியில் துப்பாக்கியை ஏந்தி வாயில் சுவிங்கத்தை மென்றபடி வந்து கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே சுவிங்கத்தின் மணத்தை உணர்ந்து அதன் மீது ஆத்திரத்தோடு தேன் கூடுகளில் இருந்த ஈக்கள் பெரும் படைபோல பறந்து வந்து அமெரிக்க இராணுவ வீரர்களின் முகங்களில் வந்து அப்பிக்கொண்டன.

இந்த ஈக்களின் முன்னால் துப்பாக்கியை வைத்து என்ன செய்ய முடியும்? அவர்கள் அனைவரும் அலறிக்கொண்டு துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் விட்டெறிந்தபடி தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தலைதெறிக்க ஓடினார்கள்.

அமெரிக்க வியட்நாம் போரில் முதன்முதலாக வியட்நாம் விடுதலைவீரர்களுக்கு நவீன ஆயுதங்கள் இந்த வழியில்தான் கிடைத்தன. ★

நல்ல நண்பர்கள் கிடைப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டியது....

பிறருடன் பழகி நண்பர்களை பெறக் கற்றுக்கொள்ளுங்கள்.

ஒருநண்பர் இருந்தால் உங்கள் வாழ்க்கையின் போக்கு சுலபமானதாகவும், வளம் நிறைந்ததாகவும் ஆகிவிடுகிறது.

அத்தகைய நட்பு நீங்களே உங்களுக்கு அளித்துக்கொள்ளும் மிகச் சிறந்த பரிசாகும்.

நீங்கள் உங்கள் நண்பரைத் தேர்ந்து எடுக்கலாம்; ஆனால் விலைகொடுத்து வாங்கிவிட முடியாது; யாரையும் நண்பராகும்படி வற்புறுத்தவும் முடியாது:

ஒரு நல்ல நண்பரைத் தேடிக்கண்டுபிடிப்பது ஒன்று தான் வழி:

நம்முடைய பலநயமான செயல்கள் நண்பர்களைச் சம்பாதித்துக்கொடுக்கும்.

முன்யோசனை இல்லாமல், ஆத்திரத்தில் ஈடுபடும் ஒரே ஒரு செயல் நண்பர்களை இழந்துவிடச்செய்யும்.

ஒரு நல்ல நண்பரைப்பெற நமக்குத் தகுதிவேண்டும்; அது கிடைக்க நாமும் வளர வேண்டும்.

நமது உள்ளத்தில் சுயநலமில்லாத நட்புணர்வு மலர வேண்டும்; மற்றவர்களுக்காக மனம்நெகிழும் மனம் அங்கே வீசவேண்டும்.

நாய்கள் நம் நேசத்துக்குரியனவாக, நட்பு உணர்ச்சியோடு பழகுவதாக, எளிதில் ஆகிவிடுகின்றன. அவை அந்த உணர்வைக் காட்ட வாலை ஆட்டுகின்றன-அனுவசியமாக நாக்கை நீட்டுவது இல்லை!

பிறரிடம் நயமாக,இனிமையாக, அன்போடும், பரிவோடும் பேசக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள்.

பிறரிடம் அன்புகாட்டுவதும் நேச உணர்வு கனியப் பழகுவதும்தான், மேலும் மேலும் நிறைய நண்பர்களைச் சம்பாதித்துக்கொள்வதற்குரிய பண்புகள்.

'நம் செயலில் அன்பின் மலர்ச்சி தெரியவேண்டும்' —என்பதுதான் எல்லா மதங்களுக்கும் பொதுவான அடிப்படை; நமக்கு இதயம்போல முக்கியமாக அமைந்த கொள்கை.

நண்பர்கள் யார்? மற்றவர்கள் உங்களை உதறிவிட்டு பிரிந்துசெல்லும்போது, அன்போடும் முகமலர்ச்சியோடும் உங்களிடம் நெருங்கி வந்து ஆறுதல் கூறுபவர். அத்தகைய நண்பரை நீங்கள் வெளியேதேடி, நாடி,அடைய முடியாது.

அப்படி ஒருவர் கிடைக்க' நீங்கள்தான் உள்ளத்தால் உயரவேண்டும். ★

– சுவாமி சின்மயானந்தர்

முன்னோர் மிகவும் புத்திசாலிகளே!

ஒரு சமயம் பாவேந்தர் பாரதிதாஸன் இல்லத்திற்கு நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை சென்று இருந்தார்!

இருவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். திடீரென்று நாதஸ்வரச் சக்கரவர்த்தி தன்னருகில் இருந்த மரத்தூண் ஒன்றை சுண்டிப் பார்த்தார்:

பாரதிதாஸன்

'கவிஞரே! இது ஆச்சா மரத்தில் செய்த தூண் உங்களுக்குத் தெரியுமோ?—

பாரதிதாஸன், ஓ..... அப்படியா... இது ஆச்சா மரமா? அது தானே கேட்டேன். நான் இதன் மீது சாய்ந்து கவிதை எழுதும்போதெல்லாம் 'என்ன ஆச்சா...ஆச்சா? என்று யாரோ துரிதப்படுத்துவதுபோல் எனக்கொரு பிரமை ஏற்பட்டு நானும் கவிதைகளை வேகமாக எழுதி முடித்து விடுகிறேன்...

ராஜரத்னம்பிள்ளை சிரித்துக்கொண்டே .....

'கவிஞரே... ஒரு விஷயம் எங்கள் தொழிலுக்குரிய நாயனம், மேளம் ஆகிய வாத்தியங்களை இந்த மரத்தைக் கொண்டுதான் செய்கிறார்கள். அவற்றிற்கு இதுதான் உகந்த மரம். ஆனால் இந்தமரத்தைக் கொண்டு வீடு கட்டுவது ஆகாது என்பார்கள்.'

புன்னகைத்தவாறு பாரதிதாஸன்.....

'நம் முன்னோர்கள் மிகவும் புத்திசாலிகள். ஆச்சா மரத்தைக் கொண்டு அனைவரும் வீடுகட்ட ஆரம்பித்து விட்டால் அப்புறம் இசைக கலைக்கு உரிய அருமையான வாத்தியங்களைச் செய்ய மரம் கிடைக்காமல் போய்விடுமே என்று இது வீட்டுக்கு ஆகாத மரம் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள்'—

இந்த வாதத்தை மறுக்க முடியாமல் நாதஸ்வரச்சக்கரவர்த்தியும் சிரித்துக் கொண்டார். ★

காந்திஜியின் 50 கடிதங்கள்

விஜயபென் பஞ்சோலி என்ற பெண் 1935 இல் மகாத்மா காந்திஜிக்குக் கடிதம் எழுதத் தொடங்கினார்.

பஞ்சோலி ஓர் ஆசிரியை.

காந்திஜியும் அவரை மாணவியாக ஏற்று பதில் எழுதி வந்தார்.

அவருக்குக் காந்திஜி மொத்தமாக 50 கடிதங்களை எழுதினார்.

அக்கடிதங்கள் இப்போது அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அக்கடிதங்கள் குஜராத்மொழியிலேயே காந்திஜி எழுதியிருந்தார்.

யேல் பல்கலைக்கழக ஆசிரியரும் பஞ்சோலியின் நண்பருமான பிரவீன் என். பத் என்பவர் அக்கடிதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். ★

உங்களுக்குத் தெரியுமா?

✱ வெட்டுக்கிளிக்கு அதன் முன் கால்களிலும் ஈக்களுக்கு தலையிலும் காதுகள் உள்ளன.

★ தேனீ, [சிவப்பு நிறத்தைத் தவிர ஏனைய நிறங்களை இனங்கண்டு கொள்ளும்.

✱ தன் காலால் உதைத்தே ஒரு மனிதனைக் கொல்லக்கூடிய அளவு பலம் வாய்ந்தது தீப்பறவை. ★

முதன் முதலாக...

★ நினைவுத் தபால் தலைகளை வெளியிட்ட நாடு அமெரிக்காதான்.

2-1-1893 இல் கொலம்பிய கண்காட்சியை ஒட்டி முதல் நினைவுத் தபால் தலை வெளியிடப்பட்டது.

✱ நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை தோன்றியது பிரிட்டனில்தான்.

இதற்கு 1265 ஆம் ஆண்டில் அத்திவாரம் இட்டவர் சைமன் டி மாண்ட் போர்ட் என்பவர். ✱

புற்று நோய்க்கு சவால்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புற்றுநோயாளர் குழு ஒன்று ஜப்பான் சென்றுள்ளது.

அதில் ஒரு பெண் உட்பட 9 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அவர்கள் ஜப்பானின் பெரிய சிகரமான பிஜியை ஏறத் திட்டமிட்டுள்ளனர். இதில் 140 மைல் தூர சைக்கிள் பயணமும் அடங்கும்.

சாதாரண மக்கள் போல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களாலும் முடியும் என்பதை நிரூபிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆட்கொல்லி நோய்களில் ஒன்று புற்றுநோய்.

மரணத்துக்குச் சவால்விடும் வகையில் அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பது துணிச்சலானது. ★

ஏழுமலையானிடம் கடன் கோரும் இந்திய அரசு

இந்திய அரசு ஏழுமலையானிடம் கடன் கோரி விண்ணப்பித்திருக்கிறது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் கடன் கேட்காமலா ஏழுமலையானிடம் கேட்டிருக்கிறது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்!

ஆம். இந்திய அரசுக்கு சொந்தமானது தேசிய விமான நிலைய ஆணைக்குழு.

திருமலை ஏழுமலையான் கோவில் தேவஸ்தானத்திடம் 25 கோடி ரூபா (இலங்கைப் பணத்தில்) கடன் கோரி இந்த ஆணைக்குழு விண்ணப்பித்து உள்ளது.

தேவஸ்தானமும் வட்டியில்லாமல் இத்தொகையை கடனாக வழங்க ஒப்புக்கொண்டிருக்கிறது. 20 ஆண்டுகளில் திருப்பிச்செலுத்தப்படவுள்ள இக்கடன் திருப்பதி விமான நிலைய விஸ்தரிப்புக்குப் பயன்படுத்தப்படவுள்ளது. ★

காலணிகள் தயாரிக்கும் கம்பியூட்டர்

காலணிகளை கம்பியூட்டர்கள் தயாரிக்கும் காலம் பிறந்துவிட்டது.

கைகளால் உருவாக்கிய காலம் ஒன்று இருந்தது.

விஞ்ஞான யுகமான இன்று கம்பியூட்டரும் செருப்புத் தைக்கத் தொடங்கிவிட்டது.

மணிக்கு 220 சப்பாத்துக்களின் அடிப்பாகங்களையும் மேற்பாகத்தைத் தயாரித்து வழங்கும் கம்பியூட்டர் வந்து விட்டது.

இந்தக் கம்பியூட்டரில் 196 மாதிரியான சப்பாத்துக்களைத் தயாரிக்கமுடியும். ✱

அதிசய ஏரி

உலக அதிசயங்களில் ஒன்றான பிச் ஏரி, டிரினுட் (Trinidad) நாட்டில் இருக்கிறது:

இந்த ஏரியில் என்றுமே தண்ணீர் கிடையாது. ஆனால் சாலைகளுக்குப்போடுகிற தார் தான் கிடைக்கிறது.

இதனைத் தோண்டி எடுத்து கப்பல், கப்பலாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வியாபாரம் செய்கிறார்கள்.

மேலும் இவ்வாறு தோண்டிய இடத்தில் இரண்டு நாட்களில் தார் நிரம்பிவிடுகிறது.

இது இயற்கை நிகழ்த்தும் அற்புதங்களில் ஒன்று. ★

மூன்றும் உலக நாடுகளின் கடன்தொகை

மூன்றும் உலகநாடுகளின் மொத்தக் கடன்கள் கடந்த ஆண்டு 33லட்சத்து 66 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

கறுப்பர் நாடுகளான ஆபிரிக்க நாடுகள் மட்டும் 5 லட்சம் கோடி ரூபா கடன்வாங்கி இருக்கின்றன.

இத்தக்கடன் சுமையினால் இந்தநாடுகளின் வளர்ச்சிப் பணிகள் தடைப்பட்டு வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்து வறுமை வளர்ந்துவருகிறது.

இந்த நாடுகளின் கடன்களை அடைப்பதற்கு சர்வதேச நிதி நிறுவனம் 33 ஆயிரம் கோடிரூபாவில் நிதி ஒன்றை ஏற்படுத்துவதாக அறிவித்துள்ளது. ★

அடுக்குமாடி கட்டுவதில் புதியபாணி

பொதுவாக அடுக்குமாடிகளைக்கொண்ட கட்டடம் ஒன்று கட்டவேண்டுமானால் தரைமட்டத்திலிருந்து ஒவ்வொரு மாடியாகக் கட்டிக் கொண்டுபோவார்கள்.

ஆனால் இதற்குநேர்மாறான முறையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கட்டடம் கட்டுகிறார்கள்.

அதாவதுஉச்சியில் அமைக்க வேண்டிய மாடியை முதலில் தரையில் வைத்துச் செய்து விடுவார்கள். பின்னர் இந்த 'மாடி'யை இரும்பு மற்றும் கொன்கிரீட்டிலான இரண்டு தூண்களின் வழியே 'ஜாக்' போன்ற அமைப்புக்களைக் கொண்டு மேலேஉயர்த்திவிடுவார்கள்.

மேல்மாடியின் கீழ் அமைக்க வேண்டிய மாடிகளையும் அவ்வாறே செய்து உயர்த்தி விடுகிறார்கள்.

இந்தமுறையில் கட்டடம் எழுப்பினால் ஆட்களையும் பொருள்களையும் உயரத்திற்குக் கொண்டுசெல்வது தவிர்க்கப்படுவதோடு குறுகிய காலத்தில் குறைந்த செலவில் கட்டடம் கட்ட முடியும் என்கிறார்கள். ★

11 வயதுச்சிறுவனின் சாதனை!

கிறிஸ்டோபர் லீ மார்ஷல், வயது 11.

அமெரிக்கக் கலிபோர்னியாவில் ஒசியானோ பகுதியைச் சேர்ந்த அந்தச் சிறுவன் 5 ஆவது வகுப்பு படிக்கிறான்.

ஒற்றை என்ஜின் கொண்ட விமானத்தை ஓட்டிச் சென்று அத்திலாந்திக் கடலைத் தாண்டிப்பறந்து சாதனை புரிந்து இருக்கிறான் இச்சிறுவன்.

பயண தூரம் 1,500 மைல் ஆகும்.

1927 இல் சார்ள்ஸ் லினர்பேர்க என்ற இளைஞர் அமெரிக்காவில் இருந்து பாரிஸ் நகருக்கு ஒற்றை என்ஜின் விமானத்தைத் தன்னந்தனியே ஓட்டிச் சாதனை படைத்தார்.

இப்போது அதே பாதையில் இந்தச் சிறுவன் சென்று புதிய சாதனை படைத்து இருக்கிறான்.

குளவிகளைக் கொல்ல தேனீக்கள் நடத்தும் 'சுற்றி வளைப்பு' நடவடிக்கை

பெரிய குளவிகள் (Hornets) தேன்கூட்டை நாடுவது உண்டு.

குளவிகள், தேனீக்களைக் கொட்டி மயக்கமுறச் செய்து, அவற்றை எடுத்துச்சென்று, தங்களது லார்வாக்களுக்கு (Larvae) உணவாக்குவதற்காக இவ்விதம் தேன்கூட்டை நெருங்கும்.

அவ்வித சந்தர்ப்பங்களில் குளவிகளைத் தாக்கிக் கொல்வதற்கு ஜப்பானியத் தேனீக்கள் தங்கள் கொடுக்கைப் பயன்படுத்துவதில்லை. தங்களது இறைக்கைகளைத்தான் பயன்படுத்துகின்றன என்று ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

குளவி ஒன்று தேன்கூட்டில் உள்ள காவலாளித்தேனீயைத் தாக்கியதும், உடனே அக்குளவியைச் சுமார் 250தேனீக்கள் சூழ்ந்து கொள்வதாக ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டனர்.

ஒரு சிறிய பந்துபோல தேனீக்கள் சூழ்ந்துகொள்கின்றன:

சுமார் 30 நிமிஷங்களுக்குப் பின்னர் அவை அகன்றதும் குளவி செத்துக்கிடக்கிறது. ஓரிரு தேனீக்களும் செத்துக் கிடக்கின்றன.

எப்படி இது இடம்பெறுகின்றது?

குளவியைச் சூழ்ந்துள்ள தேனீக்கள் படபடவென்று இறைக்கைகளை அடிக்கின்றன.

பந்துபோல சூழ்ந்த தேனீக்கள் இவ்விதம் சிறகடிக்கும் போது அப்பந்தின் நடுவில் சுமார் 4 நிமிடங்களில் 46டிகிரி சென்டிகிரேட் (சுமார் 115 டிகிரி பரன்ஹைட்) அளவுக்கு வெப்பம் உண்டாகிறது. இந்த வெப்பம் தாங்காமல் குளவி இறந்துவிடுகிறது.

ஆராய்ச்சியாளர்கள், சிறகடிக்கும் தேனீக்களின் நடுவே நுண்ணிய வெப்ப அளவுமானியை Thermo meter) வைத்து இவ்விதம் வெப்ப அளவைக் கண்டுபிடித்தனர்.

ஆராய்ச்சிக்கூடத் தேனீக்களையும் குளவிகளையும் வைத்துப் பரிசோதித்ததில் தேனீக்கள் 48-50 டிகிரி சென்டிகிரேட் (சுமார் 122 டிகிரி பாரன்ஹீட்) வெப்பத்தைத் தாங்கக்கூடியவை என்றும், குளவிகள் 47 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தில் இறந்துவிடுகின்றன என்பது அறியப்பட்டது.

இந்த அதிசய உத்தியைக் கையாளும் ஜப்பானியத் தேனீக்கள் Apis Terana Japonica என்னும் ரகத்தைச் சேர்ந்தவை.

இத்தேனீக்களால் சூழப்பட்ட குளவி எதுவும் உயிர் பிழைத்தது கிடையாது என்று கண்டுபிடிக்கப்பட்டது. ★

நாய்கள், பூனைகளுக்கும் ரசிகர் மன்றம்-ரஷ்யாவில்

நடிகர், நடிகைகளுக்குத் தான் நம்மவர்கள் ரசிகர் மன்றங்கள் அமைத்து வருகிறார்கள்.

ஆனால் கம்யூனிஸ்ட் நாடான சோவியத் யூனியனில் வீட்டுப்பிராணிகளுக்கு ரசிகர் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன.

மாஸ்கோவில் புதிய குடியிருப்புப் பகுதியில் அண்மையில் செல்லப் பிராணிகள் ரசிகர் மன்றம் தொடங்கப்பட்டது.

இந்த மன்றத்தினர் வீட்டுப் பிராணிகளை வளர்ப்பது சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கின்றனர்.

கண்காட்சிகளையும் நடத்துகின்றனர்.

பிராணிகள் தியேட்டர்களையும் ஏற்படுத்தியுள்ளனர். நாய்களைப் பயிற்றுவிக்கும் மையங்களையும் இந்த மன்றத்தினர் நிறுவுகின்றனர்.

சமீபத்தில் இம்மன்றத்தினர் கண்காட்சி நடந்தது. அப்போது செல்லப்பிராணிகளின் பவனி வந்தது.

நாய்களின் ஓட்டப்பந்தயமும் நடந்தது. நன்கு பயிற்றுவிக்கப்பட்ட நாய்கள் தம் கைவரிசையைக் காட்டின.

பிராணிகள் பற்றிய கவிதைகள்,புகைப்படங்கள், ஓவியங்கள் முதலிய போட்டிகளும் நடந்தன. விசேட பரிசுச் சீட்டுக் குலுக்கலும் நடைபெற்றன. ★

சேவலைக் காலையில் எழுப்புவது யார்?

அதிகாலையில் நித்திரையால் எழும்புவது என்றால்... நாம்படும் வேதனை சொல்ல முடியாது.

அதுவும் மாரிகாலக் குளிரில் என்றால் சொல்லவே வேண்டியதில்லை.

அலாரம் வைத்துவிட்டு நித்திரைக்குப் போவோரும் அலாரம் அடிக்கத் தொடங்கினால், அதை நிறுத்திவிட்டு நித்திரையைத் தொடர்வர்.

அதிகாலையில் அலாரம் அடிக்கத் தவறினாலும் சேவல் கூவத் தவறுவதில்லை.

சூரியன் உதிப்பதற்கு முன்பே சேவல்கள் கூவத் தொடங்கி விடுகின்றன.

ஆனால் இந்தச் சேவல் கோழியை யார் அந்த அதிகாலையில் எழுப்புவது?

இது என்ன! முதலில் கோழி வந்ததா, முட்டை வந்ததா என்ற கதைபோல் இருக்கிறது என யோசிக்கிறீர்களா?

கோழிகள் இரவில் தங்கள் வாய் அலகுகளைத் தரையில் படும்படியாக வைத்து உறங்குகின்றன.

எனவே, காலையில் சூரியன் வருவதற்கு முன் தரையில் ஏற்படும் வெப்பமாறுதலை அலகின் உதவியால் உணர்ந்து விடியலைச் சொல்லிக் கூவுகின்றன.

தகவல்: 'பறவை இனங்கள்' நூல்

பரிவுடன் பணியாற்ற....

அரச ஊழியர்கள் நம்முடன் இன்னும் சிறிது பரிவுடனும் மலர்ந்த முகத்துடனும் அக்கறையுடனும் நடந்து கொள்ளக்கூடாதா என்று அங்கலாய்ப்பவர்களுக்கு ஒரு செய்தி.

ஜப்பான் ரயில்வே கம்பெனி தனது ஊழியர்களை மலர்ந்த முகத்துடன் பணியாற்றப் பயிற்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது.

பல்லைக்காட்டாமல் நாணுக்காகச் சிரித்து வரவேற்பது எப்படி? போன்ற விஷயங்கள் இந்தப்பயிற்சியில் உண்டு.

ஜப்பான் எயர்லைன்ஸ் முன்னாள் பெண் அதிகாரிகள் பயிற்சி ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

இப்பயிற்சிக்காலம் இரண்டே நாட்கள்.

இப்பயிற்சிக்காக சுமார் முக்கால் கோடி ரூபா மட்டுமே செலவாகிறதாம்.

நம்நாட்டில் இப்படி ஒரு பயிற்சியைநடத்தக் கூடாதா?

பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத் தான் உணர்தலே முத்தி

வேதாந்தம்

1. வேதாந்தம் அறிமுகம்
2. அத்வைதம் (சங்கரர்)
3. விசிட்டாதுவைதம் (இராமானுஜம்)
4. துவைதம் (மத்துவர்)

வினாவிடை விளக்க குறிப்புகள்

அலகு 1.

வேதாந்த அறிமுகம்

வேதாந்தம் என்பது வேதத்தின் அந்தம் என்பது பொருளாகும். ஒவ்வொரு வேதத்தையும் பிரிவுகளாகப் பிரிக்க முடியும். அவை முறையே வேதங்கள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் என்பவையாகும். அந்த வகையில் வேதங்களின் அந்தமாகக் காணப்படும் உபநிடதங்களே வேதாந்தங்கள் என அழைக்கப்படுமாயினும், அவ்வாறு அழைக்கப்படாமல் குறிப்பிட்ட ஒருமதமே வேதாந்தம் என அழைக்கப்படுகின்றது. இதற்குக் காரணம் உபநிடதக்கருத்துகளே இம்மதம் அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்.

இவ்வேதாந்தம் ஆகிய இம்மதம் எழுந்த வரலாற்றை நோக்குவோம். உபநிடதம் கூறுகின்ற தத்துவங்கள் பல்வேறு அறிஞர்களால் எழுதப்பட்டமையால் அவற்றிற்கிடையே பல்வேறு முரண்பாடுகள் காணப்பட்டன. சில உபநிடதங்கள் பிரமம் ஒன்று எனக்கூற சில உபநிடதங்கள் பலவெனக்கூற சில உபநிடதங்கள் ஆன்மா உண்மை எனப் போதிக்க சில உபநிடதங்கள் ஆன்மா பொய் எனக் கூற இவ்வாறு உபநிடதங்களில் காணப்பட்ட தத்துவ முரண்பாடுகள் புதிய தத்துவங்கள் தோன்றுவதற்கு காரணமாயிற்று. இவ்உபநிடதத் தத்துவ முரண்பாடுகளைத் தீர்த்து ஒற்றுமைக்கான பல அறிஞர்கள் முனைந்தனர். அவர்களில் முக்கியமானவர் கௌடபாதராவர். இவர் உபநிடத கருத்துக்களை மையமாகக்கொண்டு பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கவுரை எழுதினார். இவ்விளக்கவுரையானது விளக்கத்தை தரகொடுப்பதற்குப் பதிலாக மயக்கத்தையே கொடுத்தது.

இதனால் மேலும் பல விளக்க உரைகள் தோன்றின. இவரது கருத்தையும் தனது கருத்தையும் அடிப்படையாகக்கொண்டு சங்கரர் புதிய ஓர் மதத்தை நிறுவினார். இதுவே சங்கரவேதாந்தம் என்றழைக்கப்படும்.

சங்கர வேதாந்தம் (அத்வைதம்)

தென்னிந்தியாவிலுள்ள சேலம் கிராமத்தில் கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் சங்கரர்ராவர் இவர் தமது மதிநுட்பத்தினால் மாபெரும் மதம் ஒன்றை நிறுவினார். அது சங்கரவேதாந்தம் என்றழைக்கப்பட்டது. ஒரு மதத்தை நிறுவுவதற்கு அறிஞர்கள் 3 வகை பிரமாணங்களை ஆதாரமாகக்கொள்ளுவர். அவை முறையே-பிரதியட்சப்பிரமாணம், அதாவது காட்சிக்கொள்கை.

அனுமானப் பிரமாணம் (ஊகித்தறிதல்)

ஆப்தவாக்கியம் (வேதவாக்கு)

இவற்றுள் ஆப்தவாக்கியத்தை மட்டும் ஆதாரமாகக்கொண்டு சங்கரர் தனது கேவலாத்துவைத்தை நிறுவுகிறார்.

கேவலாத்வைதம் என்பது (அத்-கல்ல, துவைதம்-இரண்டு) அதாவது இரண்டல்ல என்ற பொருளை உடையதாகும். அதாவது சங்கரருடைய கருத்துப்படி உள்ள பொருள் ஒன்றே ஒன்று. அதுவே பிரமம் ஏனையவைஉலகம், ஆன்மா எனக்கூறப்படுபவையாக உலகிலேயே உள்ள பொருள் ஒன்றே எனக்கூறப்படுகின்றபோது ஏனைய தத்துவ ஞானிகள் குறிப்பிட்ட உலகம் ஆன்மா பற்றி கருத்துக்களை இவர் மறுக்க வேண்டியவராகின்றார். பிரமம் மட்டும் உள்ள பொருள்என கூறுகின்ற சங்கரர் உலகம் என்றால் என்ன என்பதற்கும் அது ஒரு பொருள் அல்ல,என்பதற்கும் கூறுகின்ற தத்துவ சிந்தனையை நோக்குவோம்.

உலகம்

உலகம் என்பது நிலையான ஒரு பொருள் அல்ல. உள்ள பொருள் பிரமம் மட்டுமே எனக்கொண்டால் பின்பு சடமாகிய உலகம் இருக்குமே தவிர பிரமம் என்ற பொருள் இருக்கமுடியாது.

4. சில சித்தாந்திகள் வேதாந்திகள் கூறுகிறபடி ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறும்பொருட்டு பிரமத்தால் உலகம் இடையிலே படைக்கப்படுகின்றது எனக்கொண்டால் ஆன்மாக்கள் முந்தியடைந்ததன் பின் உலகம் இல்லாது ஒழிந்துவிடும்.

இத்தகைய வாதங்களை ஆதாரமாகக்கொண்டு பிரமம் மட்டுமே உண்மையான பொருள் உலகம் என்பது வெறும் தோற்றம் எனும் தனது கருத்தை நிறுவுவதற்கு விவர்த்தவாதத்தை ஆதாரமாகக்கொள்கிறார். விவர்த்தவாதம் என்பது ஒருபொருள் மாறுமலே மாறிவிட்டதாகத் தோன்றுவதாகும். அதாவது இரவுப் பொழுதில் ஒருவனால் காணப்படுகின்ற கயிறானது பாம்பாகத் தெரிவதுபோல பிரமம் ஆனது உலகமாகமாறிவிட்டதாக தெரிகிறது என்பது இவருடைய விவர்த்தவாதக் கொள்கையாகும். இங்கு காரணமான கயிறுமட்டும் உண்மை. காரியமான பாம்புமட்டும் பொய். இதே போல் பிரமம் மட்டும் உண்மை. உலகம் என்பது பொய். அறியாமை காரணமாக கயிறு பாம்பாகத் தெரிவதுபோல அவித்தை காரணமாக பிரமம் உலகமாகத்தெரிகின்றது என்பதே விவர்த்தவாதக் கோட்பாட்டின் விளக்கமாகும்.

ஆன்மா (சங்கரரின்)

உள்ள பொருள் ஒன்றே எனக் கூறிய சங்கரர் ஆன்மா என்றொரு வேறு பொருள் இல்லை. பரமாத்மா ஆகிய பிரமமே பல்வேறு ஜீவாத்மாக்களாக தோற்றமளிக்கிறது. அவித்தை காரணமாகவே இவை இவ்வாறு நிரழ்கிறது. எனக்கூறுகின்ற சங்கரர் இதற்கு ஆதாரமாக பிரதிபிம்பவாதத்தை முன்வைக்கிறார்.

பிரதிபிம்பவாதம் என்பது உண்மையான ஒரு பொருள் பல்வேறு மாயப்பொருள்களாக தோற்றமளிப்பதைக் குறிப்பதாகும். உதாரணமாக ஆகாயத்தில் ஒரேயொரு சந்திரன் மட்டுமேயுண்டு. அது ஆறுகள், குளங்கள், ஓடைகள் என்பவற்றில் பல்வேறுசந்திரன்களாகத்தோற்றமளிக்கும். அறியாமை காரணமாக பல்வேறு சந்திரர்கள் இருப்பதாக கருதுவது முட்டாள் தன்மையானதாகும். இதைப்போல் ஒரேயொரு பரமாத்மா மட்டுமே இருக்கிறது. இது அவித்தை காரணமாக பல்வேறு ஜீவாத்மாக்களாகத் தோற்றமளிக்கிறது. உண்மையில் இருப்பது பரமாத்மா ஒன்றே. அதாவது பிரமம் என்பதே இவருடைய வாதமாகும். இவ்வாறாயின் எமது காட்சிக்குப்புலம்பல் ஆன்மாக்கள் பல்வேறு வகையாகத் தெரிவதற்கு அறியாமை காரணம் என்று கூறுகின்ற சங்கரர் இதை விளக்குவதற்காக அபேச்சவாதத்தை முன்வைக்கிறார்.

அதாவது பல்வேறு எல்லைகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு காணித்துண்டு அவ் எல்லைகளை எடுத்து விட்டபின்பு ஒரே காணியாகத் தோற்றமளிக்கிறது. இதேபோல் ஒரேஒரு பரமாத்மா உடலங்களுள் அடைபட்டு பல்வேறு ஜீவாத்மாக்களாகத் தோற்றமளிக்கிறது.

சங்கரர் தனது கொள்கைக்கு ஆதாரமாக மூவகை நிலைகளைக் குறிப்பிடுகின்றார்.

1. கனவுநிலை 2. நனவு நிலை 3. பரமாத்மா நிலை.

என்பனவே அவையாகும். கனவுநிலையில் உண்மையென கருதுகின்ற ஒருவிடயம் நாம் நனவுநிலைக்கு[விழிப்புநிலைக்கு] வருகின்றபோது பொய் எனத் தெரிகின்றது. இதைப்போல நாம் நனவு நிலைகளில் காணுகின்ற விடயங்கள் பரமாத்மா நிலைக்கு வருகின்றபோது பொய் எனத் தோற்றமளிக்கும். எனவே நனவுலக சம்பவங்கள் அதாவது உலக வாழ்க்கை நிலைகள் உண்மையானவை அல்ல என்பது சங்கரருடைய கருத்தாகும்.

இவ்வாறு பிரமமானது உலகமாகவும், உயிர்களாகவும் தோற்றமளிப்பதற்கு அவித்தையே காரணம் என்று சங்கரர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அவித்தையானது இவ்வாதத்தைத் தோற்றம் பெறச்செய்கிறது. பூரணமான தன்மையை விகாரப்படுத்திக் காட்டுவது இவ் அவித்தை பிரமத்தில் இருந்துதோன்றி பிரமத்தைச் சார்ந்தும் சாராமலும் காணப்படும்.

பிரமம் அவித்தையோடு சாராத நிலையில் குணம் குறிகளற்ற யாவற்றையும் கடந்து எல்லாவற்றிற்கும் மேலான ஏகப் பரம்பொருளாகக் காணப்படும். பிரமத்தின் இந்நிலையைத்தான் சங்கரர் நிற்குணப் பிரமம் எனக் குறிப்பிடுவர்.

பிரமமானது அவித்தையோடு கூடிக்காணப்படுகின்ற நிலையில் சகுனப்பிரமம் என அழைக்கப்படும். சகுனப்பிரம நிலையானது பிரமம் குணம் குறிகளோடுகூடி உடல் உலகங்களாக மாறுபட்டு தோற்றம் பெறும் நிலையாகும். சைவ சித்தாந்திகள் சகுனப்பிரம நிலையைச் சிறப்பாகப் பேச வேதாந்திகள் நிற்குணப்பிரம நிலையைச் சிறப்பாகக் கருதுகின்றனர்.

சங்கரருடைய முத்திக்கான வழி

தன்னைத் தானே உணருதல் முத்தியென்பது சங்கரருடைய வாதமாகும். அதாவது அவித்தை காரணமாக தன்னுடைய மேலான நிலையினில் நின்றும் உயிர்களாகக் காட்சி அளிக்கின்ற சகுனப்பிரம நிலைக்கு இறங்கி நிற்கின்ற பிரமம் அவித்தையினின்றும் நீங்கி நிற்குணப்பிரம நிலையை அடைவதே முத்தியென்பது இதன் கருத்தாகும். அதாவது உயிர்களாகிய நாங்கள் அறியாமை காரணமாக நாங்கள் பிரமம் என்பதை அறியாது இருக்கின்றோம். எனவே ஞானம்பெற்று அறியாமையில் நின்றும் நீங்கி எம்மை நாமே உணர்ந்துகொள்வதே முத்தியாகும்.

அடுத்து ஒருவன் தன்னைத் தானே உணர்வதற்கு அறிவு பெறப்படவேண்டும். இங்கு அறிவு என்பது உண்மையறிவான மெய்ஞானத்தைக் குறிப்பதாகும். இந்த மெய்ஞானத்தை எவ்வாறு பெறலாம் என்று சங்கரர் விளக்கமளிக்கிறார். பற்றற்ற நிலையில் செயல்களைச் செய்வதனாலும் ஒழுக்கமுடைய வாழ்க்கையை வாழ்வதனாலும் வேத உபநிடத சமய தத்துவ நூல்களைக்கற்பதனாலும்ஒருவன்தன்னைத்தான்உணரமுடியும்,அதாவது நிற்குணப் பிரமநிலையான முத்தியை அடைய முடியும் என்று சங்கர வேதாந்தம் விளக்கமளிக்கிறது.

★

க. பொ. த. (உயர்தரம்) இந்துநாகரீகம் (தத்துவம்)

தயாரிப்பு: வேலணையூர் தாஸ்

பாடம் பயில்வோம்

ஆளுமையின் ஒரு வெளிப்பாடே தாய்மை!

- கோ, ரெ. கொன்சன்டைன் -

திருமணம் என்பது புரிந்துணர்வினாலும் அதன் விளைவாக ஏற்படும் இசைவாக்கிக் கொள்ளலின் (Adaptation) அடிப்படையிலும் உருவாகும் ஒரு உறவுமுறை. ஒரு சிறந்த குடும்பத்தின் தோற்றத்திற்கு ஒத்துப்போதல் அல்லது இசைவாக்கிக் கொள்ளல், ஆண் பெண் இருபாலாரிடத்தேயும் அடிப்படையாகக் காணப்படவேண்டிய ஒரு குணம்சமாகும். துரதிஷ்டவசமாக ஆண்களை விடப் பெண்கள் திருமணத்தின் பின் உளவியல் ரீதியிலும், சமூக ரீதியிலும் பெரும் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. இந்த மாற்றங்களின் போது பலரது திறமைகள் அதாவது ஏற்கனவே அவர்களிடமிருந்த திறமைகள் அவர்கள் ஏற்கனவே வெளிக்காட்டிய திறமைகள் மங்கிப்போவது பெரும் ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல. ஆனால் பெண் விடுதலை சம்பந்தமாக புரட்சிகரமான கருத்துக்கள்தோன்றி வரும் இக்காலகட்டத்தில் நிச்சயமாக அது ஒரு ஆராய்ச்சிக்குரிய விடயமேயாகும்.

இம்மாற்றத்திற்கு ஐந்து அடிப்படையான காரணங்களைக் கொடுக்கலாம்.

1. தாய்மையும், பாரம்பரிய தாய் ஸ்தானமும்

ஒரு பெண் திருமணவயதை அடையும்போது அவளுக்குத் தாய்மை இயல்பூக்கம் ஏற்படுகிறது. (Motherhood Instinct) இது காமம், கோபம் போன்றது. இது இயற்கையாகவே ஏற்படும் ஒரு உள் தூண்டல், இது பழக்கப்படுத்திக்கொள்ளலின் (Habituation) அடிப்படையில் உருவாவதன்று. இதன் காரணமாக அவளுடைய எதிர்பார்ப்புகள் வாழ்வின் நோக்கங்கள் சிறிதளவு மாற்றமடைகின்றன.

அத்துடன் எமது சமுதாயத்தில் ஒரு பெண் திருமணமாகியதும் இப்படித்தான் வாழவேண்டும், ஒருதாய் இப்படித்தான் இருக்க வேண்டும் என சமுதாயம் எதிர்பார்க்கிறது. இதனை மீறுபவர்கள் வசைமொழிகளுக்கு ஆளாகும் சந்தர்ப்பம் அதிகம். இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில் இந்த வசைமொழிகளை ஆரம்பிப்பதும் தொடர்வதும் பெரும்பாலும் பெண்களே.

2. உளவியல் காரணம்

ஒரு குடும்பத்தின் சமூக இடைத்தாக்கங்களில் முக்கிய இடம் வகிப்பது ஆண். அதேவேளை குடும்பத்தை வழிநடத்துதல், குடும்பப் பொறுப்பு பெரும்பாலும் பெண்ணுக்குரியதாகவே கருதப்படுகிறது. இதன் அடிப்படையான காரணங்கள் ஒன்று பெண்ணிடம் காணப்படும் தாய்மை இயல்பூக்கம், மற்றையது ஆண்களிடம் தொடர்ச்சியாகக் காணப்படும் சுய வளர்ச்சிக்கான (Personal) Development) உள்தூண்டல். பெண்களின் சுய வளர்ச்சிக்கான உள்தூண்டல் அவர்களது மூன்றும் தசாப்தத்துடன் குறையத் தொடங்குகிறது என உளவியலாளர்கள் கருதுகிறார்கள். பெண்கள் வாழ்வின் தாக்கங்களை மேடுபள்ளங்களை எளிதாகச் சமாளிக்கும் ஆற்றல் உள்ளவர்கள். ஆனால் ஆண்களிடம் அப்படியான தன்மை குறைவு. இதனால் அவர்கள் வெற்றிக்காக, சுய வளர்ச்சிக்காகப் பெரும் பிரயத்தனம் செய்கிறார்கள்.

3. பெண்களின் இயல்பான தாழ்வு மனப்பான்மை

இது உளவியல் ரீதியிலும் சமூகவியல் ரீதியிலும் நன்கு விளங்கிக் கொள்ளக்கூடிய காரணம். ஒரு பெண் திருமணத்தின் மூலம் உளவியல் ரீதியான ஒரு பாதுகாப்புணர்வைப் பெறுகிறாள். இந்தப் பாதுகாப்புணர்வு அவள் ஒரு சிறந்த தாயாக இருப்பதற்கு இன்றியமையாதது. (அதேவேளை ஆண்களது முன்னேற்றிற்குப் பெண்ணினது உறுதுணை அவசியம் என்பது மறுப்பதற்கு இல்லை) இப்படியான ஒரு பாதுகாப்புணர்வை ஒரு பெண் தன்னைவிட அறிவாற்றலிலும், சமுதாய ரீதியிலும் உயர்நிலையிலுள்ள ஒரு ஆணிடமிருந்தே முழுமையாகப் பெறலாம். இதை எமது சமுதாயத்தில் நாம் காணலாம். படித்த, பட்டம் பெற்ற பெண்கள்கூட தங்களைவிடத் திறமையான ஆண்களையே எதிர்பார்க்கிறார்கள் இந்த நிலையினால் பெண்களுக்கு அவர்களது திறமையில் ஆளுமையில் இருக்கும் நம்பிக்கை குறைவடைகிறது.

4. ஆண்களின் மேலாதிக்கமும், ஆட்கொள்ளும் தன்மையான உறவுமுறைமையும் (Possessive Type of Relationship)

ஆண்களின் மேலாதிக்கத்தினால் பெண்களின் ஆளுமை பாதிக்கப்படுவது மறுக்கப்படமுடியாத ஒன்று. கிராமப்புறங்களில் இந்தப் பாதிப்பு அதிகம். இது பல காரணங்களில் ஒன்றே.

எமது சமுதாயத்தில் காணப்படும் இன்னொரு காரணி உறவுமுறையின் தன்மை. இது பெற்றோர் பிள்ளை உறவு, சகோதரஉறவு, கணவன் மனைவி உறவு, காதலர் உறவாக இருந்தாலும் எல்லாவற்றிலும் கட்டுப்படுத்தும் அல்லது ஆட்கொள்ளும் தன்மையே காணப்படுகிறது. பாரம்பரியமாக வளர்க்கப்பட்டு வந்திருக்கும் உறவுமுறையின் வடிவமாக இருக்கலாம்.

5. பொருளாதார சமூக வசதிகள்

மேலைத்தேசங்களிலே இருக்கும் நிலைமையை நோக்குவோமாயின் அங்கே ஒரு பெண் தாயாக இருக்கும் அதேநேரத்தில் சமுதாய ரீதியிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. இதற்கான ஒரு காரணம் அவர்களின் வாழ்க்கைத் தரமும் அரசாங்கக் கொள்கைகளும். ஸ்கன்டினேவிய நாடுகளில் பெரும்பாலானவர்கள் திருமணம் செய்வதையே தவிர்த்து வருகிறார்கள். ஒன்றாக வாழ்ந்து வந்தாலும் திருமணத்தைத் தவிர்க்கிறார்கள். இப்படி வாழும் பட்சத்தில் ஒரு ஆணினால் ஒரு பெண்ணின் ஆளுமை பாதிப்படைய சந்தர்ப்பம் இல்லை. அங்கே அரசாங்கம் அவர்களுக்கு உதவிப்பணம் வழங்குகிறது. கல்விவசதி செய்து கொடுக்கிறது. அவர்களின் வேலை நேரங்களில் அவர்களின் குழந்தைகளுக்குப் பராமரிப்பு சேவை நடத்துகிறது. அங்கே தொழிற்சாலைகளுடன் இணைந்ததான [illegible] யங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இங்கே இந்த வசதிகள் எண்ணிப் பார்க்க முடியாதவை. இங்கே ஒரு குழந்தையின் வளர்ச்சி, எதிர்காலம் எல்லாமே தாயின் கைகளில்தான் தங்கியிருக்கிறது.

முடிவு:

புதிய கருத்துக்கள் வரவேற்கப்படவேண்டியவை, ஆராயப்பட வேண்டியவை. கருத்துக்கள் முன்வைக்கப்படும் போது நாம் இரண்டு விடயங்களை அவதானிக்க வேண்டும். முதலாவதாகக் கருத்துகள் உணர்ச்சிபூர்வமாக அன்றி அறிவுபூர்வமாக முன்வைக்கப்பட வேண்டும். எமது சமுதாயத்தில் கருத்துகள் அநேகமாக உணர்ச்சிபூர்வமாகவே முன்வைக்கப்படுகின்றன.

இரண்டாவதாக இந்தக் கருத்துகள் சமுதாயத்தால் உள்வாங்கப்படும் பட்சத்தில் எதிர்கால சமுதாயத்தில் ஏற்படக்கூடியதாக்கம்.

எமது சமுதாயத்தில் எமது பண்பாட்டில் பெண் குறிப்பாகத் தாய் ஒரு நிர்ணயக் காரணி. பெண்ணின் சமுதாய நிலையில் மாற்றம் ஏற்படும் போது குடும்பம் ஒரு வலிமை குன்றிய சமூக அலகாக மாறும். இதனால் எமது பண்பாடு சமுதாயம் எல்லாமே பெரும் மாற்றங்களுக்கு உட்படும்.

தாய்மையும் ஓர் ஆளுமையின் வெளிப்பாடேயாகும். அதுவும் ஒரு உன்னதத் திறமை. இந்த ஆளுமை பெண்களுக்குத் தவித்துவமானது. இதனால்தான் 'ஒரு ஆண் சீரழியும்போது அவன் மட்டும் சீரழிகிறான். ஆனால் ஒரு பெண் சீரழியும்போது ஒரு குடும்பமே சீரழிகிறது' என்று கூறுவார்கள். தாய்மை என்ற ஆளுமையின் செல்வாக்கை, முக்கியத்துவத்தை எமது தற்காலச் சமுதாயம் சரியான விதத்தில் ஏற்றுக் கொள்ள வைப்பதே இன்றைய காலகட்டத்தின் தேவையாகும். ✦

உங்களுக்கு

1. காலையில் எழுந்தவுடன் ஆகாரங்கள் எதையும் சாப்பிடுமுன் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

2. தினமும் பத்து முதல் இருபது நிமிடங்கள் அல்லது அதிகபட்சம் அரைமணி நேரம் செய்தல் அவசியம்.

கடதாசியின் சுயசரிதை

தம்பி இங்கே வா! என்னைப்பற்றி அறிய உனக்கு ஆசையாய் இருக்கும் அல்லவா?

நான் முதலில் நெல்லாக இருந்தேன். என்னை விவசாயி ஒருவர் விதைத்தார். நான் நல்லாக வளர்ந்தேன்.

சில மாதங்களின் பின் அறுவடை செய்யப்பட்டேன். நான் வைக்கோலாக இருந்தேன்.

என்னையும் என் சகோதரர்களையும் கடதாசி தொழிற்சாலை ஊழியர்கள் வாங்கிக் கொண்டு போய்ப் பட்டையாக அடுக்கி வைத்தார்கள், பின் ஒரு இயந்திரத்தில் போட்டு சிறுசிறு துண்டுகளாக வெட்டினார்கள்.

ஒரு தொட்டியில் போட்டு சோடாத்தூளையும் வேறுசில மருந்துகளையும் கலந்து 3½ மணி நேரம் வரை காய்ச்சி கூழ் ஆக்கி ஒரு இயந்திரத்தில் போட்டு கடதாசி ஆக்கப்பட்டேன். பின் கொப்பிகளாகக் கட்டப்பட்டேன். எங்களைக் கடைக்காரன் ஒருவன் வாங்கிக் கொண்டு போனான்.

என்னையும் மற்றவர்களையும் அழகாக அடுக்கி வைத்தார்கள். ஒரு நாள் ஒரு சிறுவன் வந்து பணம் கொடுத்து வாங்கினான்.

அவன் வீட்டுக்குக் கொண்டு போய் வைத்தான். அது ஒரு மண் வீடு, அவன் என்னைப் பல மாதங்கள் பொன் போல வைத்துக் காப்பாற்றினான்.

என்னைப் போன்ற ஒற்றைகளில் எழுதி முடிந்ததும், அவன் என்னை இந்த மூலையில் போட்டு விட்டான். என்மேல்

கறையான் ஏறி என் உறுப்புகள் ஒவ்வொன்றாகத் தின்று வருகிறது. ஒரு சிறிய பகுதி தான் நான். என் காலம் முடியப்போகிறது. நான் இறப்பதற்கு முதல் இதைச் சொல்வதற்காகத்தான் உன்னை அழைத்தேன். ★

ஜெ. புஸ்பநாதன்
கொக்குவில் இந்துக்கல்லூரி.

எண்ணம் போல வாழ்வு

பட்டம் தம்பி பட்டம்
பலவர்ணப் பட்டம் பார்
எட்ட எட்டப் பறக்குது
ஏதோ உனக்குக் கூறுது
உயர உயரப் பறக்குது
உயர்ந்த கதைகள் பேசுது
தளர்ந்து கொஞ்சம் இறங்குது
தாவி மேலே பறக்குது

தளர்ச்சி மனதில் வந்தாலும்
தளரா உள்ளம் வேண்டுமாம்
எழுச்சி கொண்டு ஏறுது
இங்கும் அங்கும் தாவுது
உயர்ச்சி வேண்டில் வாழ்விலே
உயர்ந்த எண்ணம் வேண்டுமாம்
கவர்ச்சி கொண்ட வர்ணங்கள்
மலரும் மனதிற் கெழுச்சியே

பச்சை சிகப்புப் பட்டங்கள்
பசுமைப் புரட்சி வேண்டுதாம்
விசும்பில் உயரப் பறந்தாலும்
விண்ணில் மனிதன் வாழ்ந்தாலும்
எண்ணம் போல வாழ்வுதான்
என்றும் எமக்கு அமையுமாம்
உலகம் வாழ எண்ணுவாய்
உயர்வு தாழ்வு நீக்குவாய்

—ஏ. டபிள்யு. அரியநாயகம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைக்கதை அமைப்பது ஒரு 'ரஸவாத' வித்தையே

ஒரு திரைப்படத்துக்குக் கதை முக்கியமானது. இன்று வெளியாகும் பல திரைப்படங்கள் தோல்வியைத் தழுவுகின்றன.

அதற்குக்காரணம் கதை இல்லாததுதான் என்று பரவலாக பேசப்படுகின்றது.

அதற்குக் காரணம் கதாசிரியர்கள் பஞ்சமா. இதற்கு பிரபலமான கதை வசனகர்த்தா, பின்னர் இயக்குநராக மாறிய 'வியட்நாம்வீடு' சுந்தரம் கூறுவதை வாசியுங்கள்.

நெற்றிக்கண்ணைத் திறந்து குற்றம் காணும் உங்கள் கேள்வி என்னளவில் கேள்வியல்ல.

சிந்தனை வேள்வி.

ஹோட்டல் வைத்தால், அனேகமாக பண்ணப்படும் பொருள்களை விதவிதமாக உருமாற்றம் செய்வதுண்டு.

அடுக்களை ஆட்டுக்கல்லில் அரைபடும் மாவெல்லாம் ஆவியில் வெந்து இட்லி வடிவெடுக்கும்.

அடுத்தநாள் மீதமுள்ள இட்லிகள் ஆட்டுக்கல்லில் அரைபட்டு 'உப்புமா' வாக உருவமெடுக்கும்.

உப்புமா மிஞ்சினால் மீதி இட்லிகளுடன் அரைபட்டு 'குருமா' வாசப் பிறக்கும்.

இந்த இட்லிக்கு நடக்கும் புனரபி மரணம், புனரபி ஜனனம். Reincarnation பூராவும் அடுக்களை மர்மம். ஆட்டுக்கல் மட்டும் அறிந்த உண்மை:

விற்பவரின் வியாபாரத் திறமை, வாங்கிச் சாப்பிடுவோரின் ரசிப்பும் ருசிப்பும் இன்றைய குருமாவின் முந்தைய வடிவத்தைப்பற்றி சிந்திப்பதில்லை. அதில் ஒரு முன்னேற்றம்.

அரைக்கும் ஆட்டுக்கல் இயந்திர ஆட்டுக்கல்லாக மாறியதே தவிர அரைக்கப்படும் மாவு அதேதான். இது என் பூடகமான நாசூக்கான விளக்கம்.

பதிமூன்று சென்டிமெண்ட்ஸ் எட்டே சீக்குவன்ஸ்கள் (Sequences இதற்குள் ஆட்டைத்தூக்கிமாட்டில்போட்டு, மாட்டைத் தூக்கி ஆட்டில் போட்டு, ஆயிரமாயிரம் பர்முலேஷன் காம்பினேஷன்கள்.

இன்று நடப்பது கதைப் பஞ்சமல்ல. ரசனைக்கேற்ப கதைகளை உருவாக்கும் தர்ம யுத்தம்.

அண்மையில் Generation Gap ஐ அனுசரித்து மசாலா தூவவேண்டிய நிர்ப்பந்தங்கள ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட வெற்றிகள் மசாலாவின் மகோன்னத காலமாக மாறியது. இது அகில இந்திய படரீதியாக நடந்த மாற்றம். Totality யை மட்டும் பார்க்காமல் கதையம்சம். திரைக்கதையின் அழகு, இசையம்சம், காமராவின் பங்கு, இயக்குநரின் அழகுபடுத்தும் திறன். இவைகளைப் பிரித்துப் பிரித்து ரசிகர்கள் அலசி ஆராய்ந்தனர். அவர்களின் திறனாய்வை, புலனாய்வு செய்வதே உங்கள் கேள்வி.

எண்ணைப் பொறுத்தவரை தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் ஆகிய நான்கு மொழிகளில் ரீமேகிங் இல்லாமல், நேரடியாக அந்தந்த மொழியின் Natiuity பிரகாரம் கதை, திரைக்கதை வசனமெழுதும் வாய்ப்பும், அனுபவமும் கிடைத்ததில், ஒன்றுமட்டும் நன்றாகப்புரிந்தது.

எத்தனை புதுமை செய்தாலும் எளிதில் எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளும்படி ஒரு கதையை, திரைக்கதையை அமைப்பது ரஸவாத வித்தைதான்.

அங்கீகரிக்கப்பட்ட Accepted Subject Matters கதையாகி, செலுலாய்டில் சித்தரிக்கும் விதம் புதுமாதிரியும் Visual Impactடன் இருந்தால் மினிமம் காரண்டி. Safety யாக உள்ளது.

வெளிச்சத்திலே படமாக்கி, இருட்டில் போட்டுக்காட்டும், நிழலில் தெரியும் பொம்மையின் கதை.

அந்த நிழல்கள் நிஜமாகின்றன. நிஜங்கள் நிழலாகின்றன.

ரசிகர்களால் தோற்றுவிக்கப்படுவதே படங்களின் வெற்றி.

எழுபது சீன்களில் இருபதை Highlight செய்து அதில் ரசிப்பு, ஈடுபாடு, மெய்மறக்கும் நிலை, சிரிப்பு, அளவோடு அழுகை, தாளம் போட்டு தலையசைக்கவைக்கும் இசை, இவைதான் வெற்றிக்கான காரணம்.

கட்டிடம் சுட்ட அஸ்திவாரமே முதலில் போடப்படும். பிறகு அதே அஸ்திவாரம் மண்ணால் மூடப்பட்டு அதன்மீது கட்டடம் ஓங்கி நிற்கும். அஸ்திவாரம் கதை, திரைக்கதை

கதை, திரைக்கதை செய்யும்போது ஒரு சிசுவின் பிரசவத்தைப் போன்று Complicated Situations இருக்கின்றன

அவைகளெல்லாம் செவ்வனே சுவனிக்கப்பட்டு பங்கேற்கும் எல்லா கைகளும் இணைந்தால், பல கைகளின் கைதட்டல் காதில் ஒலிப்பது உறுதி. ★

'வியட்நாம வீடு' சுந்தரம் கருத்து

'ஆஸ்கார்' விருது பெயர் வந்த விதம்!

ஹொலிவுட்டின் தலை சிறந்த திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் ஆஸ்கார் விருதுக்கு 60 வயது நிறைகிறது.

திரைப்படங்களின் கலை நேர்த்திக்கும், தொழில் நுணுக்கச் சிறப்பிற்கும் அங்கீகாரம் வழங்கும் உன்னதப் பரிசாக உலகெங்கும் ஒருமனதாகக் கருதப்படும். இந்த ஆஸ்கார் விருதுகளை அகாடமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் அண்ட்ஸயின்ஸஸ் என்னும் திரைப்படக்கலை, விஞ்ஞானக் கழகம் 1928ஆம் ஆண்டில் நிறுவியது.

1929ஆம் ஆண்டு மே மாதம் 16 ந் தேதிதான் இந்த விருதுகள் முதன்முதலாக வழங்கப்பட்டன.

அமெரிக்கத் திரைப்பட உலகின் தூண்களாக விளங்கிய லூயி மேஜர், டக்ளஸ்பேர் பாங்க்ஸ், மேரி பிக்போர்ட், ஜாக் வார்னர் போன்ற பிரமுகர்கள் 36 பேர், 1927 மே 11ந் திகதி நடைபெற்ற விருந்துக் கூட்டமொன்றில் இந்த அகாடமியை ஏற்படுத்தினார்கள்.

சிறந்த கலைஞர்களுக்கு என்ன பரிசு வழங்குவது என்று விவாதிக்கப்பட்ட போது, இப்போது வழங்கப்பட்டு வரும் ஆஸ்கார் பரிசுச் சிலையின் உருவத்தை அந்த விருந்தில் ஒரு மேஜை விரிப்பின் மீது செட்ரிக் கிப்பன்ஸ் என்னும் கலைஞர் வரைந்து காட்டினார்.

பின்னாளில், அந்த உருவத்தைப் பார்த்த அந்தஅகாடமியின் நூலகர் மார்கரெட் ஹெரிக் என்னும் பெண்மணி 'அட! இச்சிலை, எனது மாமா ஆஸ்காரைப் போவே உள்ளதே?' என்று ஆச்சரியத்துடன் கூறினார்.

அந்தப்பெயரே அதற்கு இறுதிவரையில் நிலைத்துவிட்டது.

அமெரிக்காவின் முதலாவது பேசும்படமான, வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்தாரின் 'தி ஜாஸ் சிங்கர்' படம். முதல் விழாவில் பாராட்டு பெற்ற படமாகும். ஆனால், அந்த முதலாவது விருதளிப்பு விழாவில் இப்போது காணப்படுவதுபோன்ற பரபரப்போ. விறுவிறுப்போ ஏதும் இல்லை, (எ - 4)

சிவாஜி ரசிகர்கள் எச்சரிக்கை

சிவாஜி கணேசன் நடித்த பாடல் காட்சியை ஒளிபரப்ப மறுத்தால், டெலிவிஷன் நிலையம் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்று தென் சென்னை மாவட்ட 'தமிழக முன்னேற்ற முன்னணி' அறிவித்துள்ளது. ★

படம் வெற்றி அடைய....

மேலை நாட்டின் பிரபல திரைபட இயக்குநர் சிசில் பி. டிமிலி.

'பத்துக் கட்டளைகள்' படத்தின் மூலம் பிரபலமானவர்.

அவரை சிலர் சந்தித்து 'ஒருபடம் வெற்றியடைய என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டனர்.

அதற்கு சுசில் பி டி மிலி 'படக்தையை எடிற் செய்யுங்கள்; படத்தை அல்ல (Edit your Script! Dont Edit the Film)' —என்று சொன்னார். ★

ஸ்டுடியோக்களில்.....

'வலது காலை வைத்து வா' —புதிய படம் ஒன்றின் பெயர் இது.

பியூட்டி கிரியேஷன்ஸ் இப்படத்தைத் தயாரிக்கிறது.

சித்ரா, கே. ஆர். விஜயா, செந்தாமரை, எஸ். எஸ். சந்திரன் ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர். ★

'அத்தைமடி மெத்தையடி'யில் கே. எஸ்.ஜி மகன் நடிக்கிறார்

சில நடிகர் - நடிகைகள் பெற்ற செல்வங்கள் அவர்களின் வாரிசுகளாகத் திரைவானில் நட்சத்திரங்களாக மின்னிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா!

இந்த நட்சத்திரப் பட்டியலில் பிரபல கதை திரைக்கதை வசனகர்த்தா டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணரின் மூத்த மகன் கே. எஸ். ஜி. வெங்கடேஷ் இடம் பெறுகிறார். அதுவும் கதாநாயகனாகவே அறிமுகம் ஆகிறார்.

"பார்த்தால் பசு" படத்தைத் தயாரித்த சி. ஆர். புரொடக்சன்ஸ் அடுத்து கே. எஸ். கோபாலகிருஷ்ணன் கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்ய "அத்தை மடி மெத்தையடி" என்ற பெயரில் புதுப்படம் தயாரிக்கிறது. இந்தப் படத்திலேயே கதாநாயகனாக நடிக்கிறார். அழகும் இளமைத் துடிப்பும் மிக்க கே. எஸ். ஜி. வெங்கடேஷ்.

இவர் ஒளிப்பதிவுத் துறையில் பயிற்சி பெற்று ஒரு படத்துக்கு ஒளிப்பதிவும் செய்து கொண்டிருப்பதுடன், இரு வீடியோ படங்களுக்கும் ஒளிப்பதிவு செய்துள்ளளார்.

பல்லவி

கே. எஸ். ஜி. வெங்கடேசின் காதல் ஜோடியாக பல்லவி நடிக்கிறார்.

மேஜர் சுந்தராஜன், எஸ். எஸ். சந்திரன், காந்திமதி மற்றும் பலர் நடிக்கிறார்கள். ஒளிப்பதிவு சுரேஷ்.

"அத்தை மடி மெத்தையடி" படப்பிடிப்பு கடந்த (அக்டோபர்) மாதம் தொடங்கியது. (எ - 4)

'ட்ராக்குலா' பாணியில் 'அமாவாசை இரவில்'

உமா சித்ரா என்டர்பிரைசஸ் என்னும் நிறுவனம் "அமாவாசை இரவில்" என்ற பெயரில் பயங்கர திகில் படம் ஒன்றை உருவாக்கி வருகிறது.

அமலாஷா, டிஸ்கோசாந்தி, திவ்யா, கல்யாணி, சஞ்சய் குமார் நடிக்கும் இந்தப்படம் தெலுங்கு, தமிழ், இந்தி, மலையாளம் ஆகியவற்றிலும் மொழி மாற்றத்துடன் தயாராகிறது.

ஏராளமான செலவில் 4 மொழிகளிலும் தயாராகும் "அமாவாசை இரவில்" படத்தின்பாடல்களை கவிஞர் முத்துலிங்கம் எழுத, பம்பாயைச் சேர்ந்த அனுமாலிக் இசை அமைக்கிறார். பி. ஜெயச்சந்திரன் தயாரிக்கும் இந்தப் படத்தின் ஒளிப்பதிவு, டைரக்ஷன் பொறுப்பை பி. சந்திரகுமார் ஏற்றுள்ளார்.

ஆங்கில திகில்படம் "டிராக்குலா" பாணியில் உருவாகும் இந்த "அமாவாசை இரவில்" விரைவில் திரைக்கு வருகிறது. (எ - 4)

வெள்ளித் திரையில்

கவித்துளி

எதிர்பார்ப்பு

மரங்கள்
ஓங்கி வளர்ந்து
தூரத்துப் பச்சைகளை
ஸ்பரிசித்து
புதிய வானத்தைப்
பார்த்து நின்றாலும்
வானங்கள்...மாறுவதில்லை!

வண்ணக் கோலங்களை
வாரிவாரிப் போர்த்தாலும்
கூவம் நதியின்
உண்மைக் கோலங்கள்
மாறப்போவது இல்லை!

ஆயிரம் வேஷங்கள்
அன்பை மறைக்க - நீ
போர்த்தித் திரிந்தாலும்
உன் மனக்கிடக்கைகளை
நான்-என் நெஞ்சில்
பதித்து வைத்திருக்கிறேன்!

என்றோ - என்
இதயச் சிலுவை - உன்
இதயத்தில்
இருப்பிடமாகும்
அப்போது காதல்
உணர்வுகள் கருத்தரித்து
ஆதவன் அரங்கில்
நடமாடும்!

— க. பிரியசங்கர்

காய் வெட்டல்

உன்னிடம்
இலட்சணங்கள்
உண்டு
உண்மை
ஆனால்
இலட்சங்கள்
இல்லையாமே
சிலவற்றைப்
புரியுமாற்றலுமா
உனக்கில்லை?
நான்
செம்பவளமென்றது
உன்
இதழ் களையல்ல
விழி களை
குயில்போலென
நான்
கூறியது
உன் குரலையல்ல
நிறத்தை!
நான்
கருநாகமென்றது
உன் கூந்தலையல்ல
உன்னை!
நீ
தவறுசப்புரிந்து
விட்டாயே!

— உரும்பை அரும்பு

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம்

'ராசா' இனி எழும்பன். எட்டுமணியும் ஆயிற்று தல்லே'

அவனால் நம்பவே முடியவில்லை: இத்தனை மணி நேரம் தூங்கி எத்தனை நாட்கள் ஆகிவிட்டிருந்தன. ஐந்து மணிக்கு முன்னரே எழுந்து 'நீங்கள் மட்டுமோ வேலைக்குப் போறியள், நானும் தானே போறன், எனக்கு மட்டும் அலுப்பில்லையோ...?' என்று எரிந்து விழுகின்ற மனைவிக்குக் கூடமாட ஒத்தாசை பண்ணி தன் கடமைகளையும் முடித்துக்கொண்டு வேலைக்கு ஓடுகின்ற அந்த இயந்திர வாழ்வில் இருந்து விடுபட்டு இன்று எத்துணை சந்தோஷமான பொழுதாய் விடிந்திருக்கிறது.

காலைக் கடன்களை முடித்து இவன் ஹோலுக்குள் வந்து அமர்வதற்கிடையில் மேசையில் கோப்பி ஆவி பறக்கக் காத்துக்கொண்டிருந்தது.

'என்ன தம்பி யோசிக்கிறாய் கோப்பி ஆறப் போகுது எடுத்துக் குடியன்' அரக்கப் பரக்க எழுந்து சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாய் ஓடிய அவனுக்கு இன்று ஏதோ ஒரு புது உலகில் சஞ்சரிப்பது போலத்தான் தோன்றுகிறது.

'பாமா சீப்பெங்கை'

அண்ணனின் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருகின்ற அண்ணியை இவன் வைத்தகண் வாங்காமலே பார்க்கிறான்.

இந்த விடிகாலைப் பொழுதில் சுழற்றிவிட்ட பம்பரமாய்க் கொஞ்சம் கூடச் சீறுமல் சினக்காமல் என்னமாய்ச் சேவை செய்கிறாள் அண்ணி.

'என்ன ராசா யோசிக்கிறாய்?'

அம்மாவின் கேள்வியில் நிமிர்ந்தவன் 'ஒன்றுமில்லை' எனச் சமாளித்துக் கொண்டு கோப்பியைப் பருகுகிறான்.

அண்ணனுக்கும் அவனுக்கும் ஒருவருஷ இடைவெளிக்குள்தான் திருமணம் நடந்து முடிந்தது.

திருமணமான கையோடு ராஜா மனைவியையும் அழைத்துக்கொண்டு கொழும்புக்குப் போய்விட்டான்.

பிரச்சினை என்று பெரிதாய் ஒன்றும் குடும்பத்தில் இல்லாவிட்டாலும் மனதில் பூரண திருப்தியான இல்லறம் என்று சொல்லமுடியாது.

முதல் ஒரு வருஷமும் 'வீவில்லை' என்ற புராணத்தையும், பின்னர் அடுத்த வருடத்தை 'பிரச்சினையாலை வந்துபோறது கஷ்டம்' என்ற சாக்குப் போக்கையும் சொல்லிக் காலங் கடத்தியவன். இரண்டு வருடங்களின் பின்தான் பெற்றவர்களைப் பார்க்க ஊருக்கு வந்திருக்கிறான்.

தொட்டிலில் கிடந்த அண்ணனின் குழந்தை 'வில்' என்று அலறுகிறது. அம்மா எழுந்து போய் தூக்கி வருகிறாள்.

'இங்கை பாருங்கோ ஆர் வந்திருக்கிறதென்று பாருங்கோ சித்தப்பாவல்லே வந்து நிக்கிறார்'

அம்மா செல்லம் கொஞ்சியதில் குழந்தை அழுகையை மறந்து சிரிக்கிறது இவன் மனதிற்குள்ளே 'சுரீர்' என்கிறது. இவனுக்குக் குழந்தை என்றால் எத்தனை ஆசை. இதனை இவன் மனைவி புரிந்து கொண்டதாய்த் தெரியவில்லை. அவள் தன்னுடைய சிநேகிதி ஒருத்திக்கு பெருமையாய்ச் சொன்ன ஒரு விஷயம் இப்பொழுதும் இவன் செவிகளில் மோதிக்கொண்டு தான் இருக்கிறது.

'என்ற ஹஸ்பன்ற் என்னுடைய அழகிலை மயங்கித் தான் என்னை 'மரி' பண்ணினவர் ஒரு இருபத்தைஞ்சு பொம்பிளையளுக்கு மேல் பார்த்து வேண்டாமெண்டவர் என்னைப் பார்த்த உடனை ஒற்றைக்காலிலை நின்டவராம் என்று என்ற மாமி சொல்லுறவ ஆனபடியாலே என்ரை அழகை நான் முடிஞ்சவரைக்கும் காப்பாற்றித்தான் ஆகவேணும் 'கோடி ஒரு வெள்ளை குமரி ஒரு பிள்ளை' எண்டு சொல்லிறவை அதனாலை எனக்கிப் போதைக்குக் குழந்தையே வேண்டாம்'.

அவன் மனதில் விழுந்த இந்த அடி பலமாய்த்தான் தாக்கிவிட்டது.

'என்னதம்பி போய்க்கொண்டு

'ஒன்றுமில்லை' அம்மாவைக் சமாளித்து விட்டாலும் மனம் குறுகித்தான் போனது.

'மனுஷியையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாமே ராசா'

'அவவுக்கு வீவில்லை எண்டல்லே சொன்னனான்'

'உது நீ பிறரை ஏமாத்தச் சொல்லுகிற ஞாயம் என்னை நீ ஏமாத்த முடியாது'.

'ஓ அண்ணைக்கும் நீங்கள் தான் கலியாணம் செய்து வைச்சனீங்கள் எனக்கும் நீங்கள்தான்...

'நிறுத்தடா'

அம்மாவின் ஆவேசத்தில் அதிர்ந்து போகிறான் அவன்.

'உன்னோடை கூடப்பிறந்த அண்ணன் அவன். கலியாணத்துக்கு முதல் பொம்பிளையைக் கூடப் பார்க்கேல்லை அம்மா உன்னோடை அனுசரிச்சுப் போகக் கூடியவளாய் குடும்பத்தைக் கொண்டு நடத்தக் கூடியவளாய்ப், பார் என்டான் ஆனால் நீ கேட்டது அழகிருக்க வேணும், படிப்பு, அந்தஸ்து, வேலை எல்லாம் இருக்கவேணும் எண்டு கேட்டாய். இரண்டு பேரும் விரும்பின மாதிரியே செய்து வைச்சன். அவன் கேட்டது கோவில்லை இருக்குற விக்கிரகத்தை ஆனால் நீ ஷோகேஸிலை இருக்கிற பொம்மையை எதிர்பார்த்தாய் கிடைச்சிட்டுது அனுபவிக்க வேண்டியது அவரவர் கடமை. கண்கெட்ட பின்னால் சூரிய நமஸ்காரத்தைப் பற்றி சிந்திக்கிறதிலை பிரயோனமில்லை.

(வளரும்)

- மிதிலைச் செல்வி -

குடுகுடுகுது

பொது அறிவுப்போட்டி இல. 16

1. கஷ்டகாலத்தில் எதைப் பார்ப்பார்கள்? ... ... ஜாதகம் / கைரேகை
2. சுவை அறியப் பயன்படுவது எது? ... ... நாக்கு / மூக்கு
3. ஆயுதம் எது? ... ... ஈட்டி / கத்தி
4. உழைப்பாளி எதிர்பார்ப்பது எது? ... ... ஓய்வு / கூலி
5. தேர்ந்தெடுக்கப்படுபவர் யார்? ... ... ஜனாதிபதி / பிரதமர்
6. இராணுவம் பயன்படுத்துவது எது? ... ... துப்பாக்கி / பீரங்கி
7. எதை வெளியில் சொல்ல வேண்டும்? ... ... துக்கம் / மகிழ்ச்சி
8. நல்ல கதையில் எது வேண்டும்? ... ... விறுவிறுப்பு / சஸ்பென்ஸ்
9. பொந்தில் வாழ்வது எது? ... . பாம்பு / எலி
10. ஆதியில் செய்தி கொண்டு வந்தது எது? ... ... புறா / தூதன்
11. சம்பனின் மகன் யாவன்? ... ... அம்பிகாபதி / அமராவதி
12. எங்கே மலைக்கோட்டை இருக்கிறது? ... ... திருச்சி / கொழும்பு

பெயர்:- .....
விலாசம்:- .....
.....

பொது அறிவுப்போட்டி இல: 16
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டுக

நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 9. 11. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை ஒளிமயமாக்கும் தீபாவளித் திருநாள்

இந்துக்களின் பண்டிகைகளுள் ஒன்றாக தீபாவளி விளங்குகிறது; தீபம் - விளக்கு ஆவளி - வரிசை வரிசையாகத் தீபங்களை வைத்து ஒளிவடிவில் இறையைக் காணும் ஒளி விழாவாக இது விளங்குறது.

இந்துக்கள், சீக்கியர் ஜைனர்கள் எனப் பலராலும் நாட்டாளாவிய பண்டிகையாகத் தீபாவளி பாரத நாட்டில் கொண்டாடப்படுகிறது.

ஆனால் பண்டிகையின் அடிப்படை நம்பிக்கை, தத்துவம், கொண்டாடப்படும் முறை, நடத்தப்படும் சடங்குகள் ஆகியவை இடத்துக்கிடம் வேறுபடுகிறது.

இந்த வகையில் சமயங்களை ஒருங்கிணைக்கும் பண்டிகையாகத் தீபாவளி அமைகிறது.

ஒரு ஒளி முதலிருந்து ஒளியைப்பெறுவதால், அதன் ஒளிச் செறிவில் மாற்றம் ஏற்படுவதில்லை. அதுபோல் மனிதனில் மறைந்திருக்கும் அன்பு ஆரம்பத்தில் இருந்து அன்பைக் கொடுக்கக் கொடுக்க அது குறைவுபடாது என்னும் பொருளையும் தீபாவளி குறித்து நிற்கின்றது.

நன்றிகூறும் திருநாள்

தீபாவளி குளிர்கால ஆரம்பத்தில் ஐப்பசி மாதத்து அமாவாசை தினத்தில் கொண்டாடப்படுகிறது. புராதன காலத்தில் இது அறுவடை செய்யவுள்ள சிறுபோக விளைச்சலுக்காக இயற்கை அல்லது தெய்வங்களுக்கு நன்றி கூறும் ஒரு பெருநாளாகவே தீபாவளி அமைந்தது என்று கூறப்படுகிறது.

காலப்போக்கில் அதற்குச் சமயரீதியான கருத்துக்களும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டன என நம்பப்படுகிறது. பல்வேறு மெய்ஞானியரின் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தியும் இறையரனுடன் தொடர்புபடுத்தியும் அகச் சமய உண்மைகள் உணர்த்தப்பட்டதால் இது மனித நேயம் கொண்ட மக்களின் பெருவிழாவாக உருக்கொண்டது.

இருந்த போதிலும் ஆதி வாசிகளின் சடங்குமுறைகளில் ஒருசில இன்னும் உள்ளன.

புராணங்களில் தீய உணர்வுகள் (இயல்புகள்) அசுரர்கள் எனவும் தெய்வீக உணர்வுகள் (இயல்புகள்) தேவர்கள் எனவும் உருவகப்படுத்தப்படுகின்றன. இவர்களிடையே போர் நடைபெற்று தீயஇயல்கள் ஒடுக்கி, அழிக்கப்பட்டு தெய்வீக இயல்புகளின் வெற்றி, வாழ்வு கூறப்படுகின்றது. நரகாசுரன் என்னும் அரசன், ''நானே பெரியவன்'' என்று அகங்காரம் கொண்டிருந்தான். அவன் நல்லோர்களையும் வருத்தினான் ஆலயங்களில் வழிபாடுகள் நடைபெறவில்லை. மக்கள் துயர இருளில் மூழ்கியிருந்தனர்.

காத்தற் கடவுளான விஷ்ணுவைச், சரணடைந்தனர். கிருஷ்ணவதாரம் எடுத்திருந்த விஷ்ணு பகவான் அசுரனைக் கொல்லத் திருவுள்ளம் கொண்டார்.

பகவானின் கையால் இறக்கும் தறுவாயில் நரகாசுரன் உண்மையை உணர்ந்து, இறைவனிடம் வரம் கேட்டான்.

''சுவாமி, நான் இறக்கும் இத்தினத்தில் உன்னை அர்ச்சித்து வழிபடுவோருக்குக் கருணை வழங்க வேண்டும்'' என்றான்.

நல்லெண்ணம் ஆகிய நல்லெண்ணெயை நம் உடம்பிற் பூசி, சித்தமாகிய அரப்பால் அழுக்காறு, வெகுளி, ஆகியவற்றைத் தேய்த்து தீய இயல்புகளுக்குத் தலை முழுகவேண்டும்.

உட்கருத்து

ஞானமாகிய ஒளியை அடைவதனைக் காட்ட புத்தாடை அணிய வேண்டும். இது தீபாவளியின் உட்கருத்தை விளக்குகிறது.

விஷ்ணு பகவானின் எல்லையற்ற கருணையினால் அசுரனின் இறப்பு ஞாலத்தின் இருளைப் போக்கி மக்களை களிப்புக்குள்ளாக்கியது. விடுதலை பெற்றவர்கள் விளக்குகளை ஏற்றி வழிபாடு செய்தனர். இதனை நினைவுகூருமுகமாக வருடந்தோறும் தீபாவளி இந்துக்களால் கொண்டாடப்படுகிறது.

வட இந்தியாவில் இராமபிரான் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடிந்து சீதையுடன் அயோத்திக்கு வந்த காலத்துடன் தொடர்புபடுத்தி தீபாவளியைக் கோலாகலமாகக் கொண்டாடுகின்றார்கள்.

இராவணனுடன் போரிட்டு வென்று சீதாராமனுக அவர் காடு விட்டேகி, நாடாள அயோத்திக்கு வரும் போது குளம் போல் எண்ணெய்விட்டுக் கோலமுடன் விளக்கேற்றி வரவேற்ற தினமே தீபாவளி என்று கூறப்படுகிறது.

தீபாவளிக்கு முதற் தினமே பல வகையான வாண வெடிகள், பட்டாசுகள், கொழுத்தப்பட்டு எங்கும் வர்ண ஒளியும், சந்தோஷ ஒலியும் பரவி ஒரு ஆனந்தமான சூழ்நிலை தோற்றுவிக்கப்படும். இந்த ஒளி, ஒலி வெள்ளத்தில் தீய ஆவிகள் அடங்கி விடும் என்று அந்நாட்டவர்கள் நம்புகிறார்கள்.

ஆனால், தற்போது கால வேகத்தின் மாற்றமும் விஞ்ஞான அறிவும் சுடர்விடும் சுட்டிகளை ஒளிரும் மின் விளக்குகளாக மாற்றி விட்டது. மின்விளக்குகளாலும் நூர்ந்து அணையும் அலங்கார விளக்குகளாலும் வீட்டு பல்கனி, யன்னல்கள், மதில்கள், வாயில்கள் அலங்கரிக்கப்பட்டு ஒளிர விடப்படுகின்றன.

திருமகள்

செல்வத்திருமகள் இலட்சுமி எவ்வித சிரமமுமின்றி இல்லங்கள் தோறும் புகுந்து ஆசிகளைச் சொரிய வசதியாக இல்லங்களில் ஒளி விளக்கேற்றிக் கதவுகளை நன்றாகத் திறந்து வைப்பார்கள்.

வட இந்தியாவில் குறிப்பாக பஞ்சாப் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்கள் வெள்ளிக் காசுகளால் உண்டியலை நிரப்பி வெள்ளியாலோ அன்றி வேறெந்த உலோகத்தாலோ செய்த இலட்சுமியின் திருவுருவை இல்லங்களில் வாசலில் கோலமிட்டு அழகுற வைப்பார்கள்.

தீபாவளியன்று இரவுப் பொழுதில் வெள்ளிக் காசுகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகும் என்பது அவர்கள் நம்பிக்கை.

கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கிறிஸ்மஸ் தாத்தா (Santa Claus) அன்பளிப்புப் பொருட்களுடன் எவ்வாறு குழந்தைகளால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறாரோ அதே போன்று இலட்சுமியானவள் இந்த மாநிலத்தவர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றாள் பணக்காரன், ஏழை என்ற பேதமின்றித் தீபாவளித் திருநாளின் போது இலட்சுமி அனைவராலும் ஆராதிக்கப்படுகின்றாள்.

அசுரர்களின் அரசனான பாலியை எவ்வாறு விஷ்ணு பகவான் நரகலோகத்திற்கு அனுப்பி, அவனால் சிறைபிடிக்கப்பட்டிருந்த இலட்சுமியையும் ஏனையோரையும் அவர் மீட்டார் என்பது பற்றியும் புராணங்கள் கூறுகின்றன.

ஜைன மதத்தவர்கூட தீபாவளியை மகிமை பொருந்திய நாளாகக் கொண்டாடுகிறார்கள். அவர்களுடைய 24 வது குருவான மகாவீரர் நிர்வாண நிலையை அடைந்த புனிததினமாகத் தீபாவளி கருதப்படுகிறது.

சீக்கியர்களும் தமது மதகுருவான அரவிந்த சாகிப் மோகுல் சிறையிலிருந்து மீண்ட திருநாளாகத் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள் அவர்கள் தமது புனிதஸ்தலமான குருத்துவாருக்கு யாத்திரை சென்று குறைந்தது ஐந்து மெழுவர்த்திகளையேனும் ஒளியேற்றி இத்தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள்.

சமாதானமும் சாந்தியும் உலகில் நிலவ மனித நேயம் எங்கும் பரவி எல்லோரும் நல்லோராய் வாழ்ந்து இன்புற்றிட இதுவே தகுந்த காலமாகும். ★

- கோண்டாவிலூர் பூ. க. இராசரத்தினம் -

இஸ்லாமிய நெறியும் இறை நம்பிக்கையும்

தத்துவங்களை விரித்துரைப்பதைவிட, செயல்முறைகளை அதிகமாக வலியுறுத்தும் அற நெறி இஸ்லாம்.

இறை நம்பிக்கையே இஸ்லாமிய நெறியினுடைய அடிப்படையாக அமைந்து இருக்கிறது.

அந்த நம்பிக்கை, நற்செயல்களைப் புரிவதைக் கொண்டே கணிக்கப்படும் என்று வகுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

நற்செயல்கள் புரிய இறை நம்பிக்கை காரணமாகிறது. அதே போல, நற்செயல்கள் புரிவது நம்பிக்கையை வலுப்படுத்துகிறது.

பகுதியை வறுமைப்பட்டவர்களுக்கு வழங்கி வாழ்வது,

★ ஆண்டுக்கொரு முறை ரம்ழான் மாதத்தில் பகற்காலங்களில் உண்ணாமல் நோற்பது. அப்படி நோன்புக்

- ஏ. கே. ஏ. அப்துல்ஸமது -

இஸ்லாமிய நெறிமுறையைப் பற்றி சுருங்கக் கூறுவதானால்—

★ நாளிலமெல்லாம் படைத்த நாயன் ஒருவன் உண்டு என நம்புவது — அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நற்செயல்கள் புரிவது.

★ நம்பிய இறைவனை நாள் ஒன்றுக்கு ஐவேளை வணங்கி வாழ்வது.

★ வாழும் சமுதாய மக்களோடு இணங்கி வாழ்வது, ஈட்டிய பொருளில் இன்றியமையாத தேவைகளுக்குப் போக, நாற்பதில் ஒரு காலங்களில் இறைவனின் கட்டளைகளை முற்றாக ஏற்று வாழ்வது.

★ ஆயுளில் ஒரு முறை உடல்நலமும் பொருள் வளமும் பெற்றவர்கள் மக்காமாநகருக்குச் சென்று புனித ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவது.

இந்தக் கடமைகள் அனைத்தும் மனித சமுதாயத்தோடு ஒட்டி உறவாடுவதற்கும் ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்வதற்காகவும் விதிக்கப்பட்டவைகள். ★

கல்விப் பணியில் நூறாண்டுகளைக் கண்ட திருக்குடும்பக் கன்னியர் சபை!

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்று கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் மாதரின் பெருமையை அழகாகப் பாடினார்.

அண்ணல் காந்தி மகளிர் சமத்துவத்துக்கும் பெண் விடுதலைக்கும் மகளிர் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினார். மகளிரை அடிமையாக்கும் மடமையைக் கொளுத்துவோம் என்று பெண்களின் விடுதலைக்கு வீர முழக்கம் செய்தார் பாரதியார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு மகளிர் விழிப்புணர்வுகளைத் தாண்டி சமுதாயத்தில் ஆணுக்குப் பெண் சமம் என்ற சித்தாந்தம் வலுப்பெற்று நின்ற காலம்.

மூடநம்பிக்கைகள் வேரறுக்கப்பட பழைய கொள்கைகள் பாரம்பரியங்கள் அழிந்து புதியதோர் உலகம் உருவாக மாதர் கல்வியறிவு பெறுதல் அவசியம் என்பதை உலகின் பலபாகங்களிலும் உணரத் தலைப்பட்டனர்.

அடுக்களையில் முடங்கிக் கிடந்த பெண் அரசு கட்டில் ஏறும் காலம் மாறியது: இத்தகைய ஒரு நிலை இலங்கையிலும் உருவாக மிஷனரிமார் பெரிதும் உதவினர்.

மகளிர் கல்விக்கு கத்தோலிக்க மதகுருமாரும், துறவிகளும், பெண்துறவியர்களும் பெரியதோர் பங்களிப்பைச் செய்துள்ளனர் என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது.

இந்த வகையில் திருக்குடும்பக் கன்னியர் சபையினர் கடந்த 125 ஆண்டுகளாக இலங்கையில் குறிப்பாக யாழ்குடாநாட்டிலும், வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் அளப்பரிய பணி ஆற்றியுள்ளனர்.

1820 ஆம் ஆண்டு பிரான்சு தேசத்திலே அமலமரித்தியாகிகள் சபைக் குரவரான பியன் வெனு நொயாலி என்னும் குரவரால் ஆரம்பிக்கப்பட்டதே திருக்குடும்பக் கன்னியர் சபையாகும்.

திருச்சபையின் மறுமலர்ச்சிக்கும், கத்தோலிக்கக் குடும்பங்களின் புதுப்பித்தலுக்கும் மகளிர் கல்வி அவசியம் எனக் கண்டு கல்விப்பணியே தம் தலையாய பணியாகக்கொண்டு சேவையில் இறங்கியவர்கள் திருக்குடும்பக் கன்னியர்கள்.

இவர்களின் சேவை இலங்கையிலும் தேவை என்று ணர்ந்த அன்றைய ஆயர் பெத்தக்கினி ஆண்டகை அவர்கள் பிரான்சு தேசத்திலிருந்த இச்சபையின் நிறுவனருக்கு மனுச் செய்தார்.

எனினும் அவரின் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற பேரருட்திரு சமேரியா ஆண்டகை அவர்களே நேரிற் சென்று அனுமதிபெற்று இச்சகோதரிகளை அழைத்து வரலானார்.

1862 ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் ஆயர் சமேரியாவின் தலைமையில் ஆறு திருக்குடும்பக் கன்னியர்களும், வேறு குருமாரும் இலங்கைக்குப் புறப்பட்டனர்.

கடற்பயணம் இன்றிருப்பது போல் அன்று இலகுவானதல்ல. பல சிரமங்கள், ஆபத்துக்கள் எதிர்கொள்ளப்பட்ட காலமது. நீண்ட பயணத்தின் பின் 1862 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19 ஆம் திகதி காலித் துறைமுகத்தை அடைந்தனர்.

அங்கிருந்து கொழும்புக்கு வந்து, கொழும்புமார்க்கமாக 1862 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இரண்டாம் நாளில் யாழ் மண்ணில் காலடி வைத்தனர்.

'எக்காலத்துக்கும், எவ்விடத்துக்கும், எப்பணிக்கும் எப்பொழுதும் தயார்' என்னும் இறைவனின் சொந்தக் குமாரத்தியாக்கிக் கொள்ளும் இந்த மேலதிக வாக்குறுதியை எடுத்துக்கொண்ட மதர் சேவியர் அவர்களின் தலைமையில் யாழ்நகர் வந்த இந்த ஐரோப்பிய த்துறவியர்கள் முற்றிலும் மாறுபட்ட சுவாத்தியம், இடம், பழக்கவழக்கம், கல்விப்பணி, சமூக நலப்பணி, அன்னியமொழி, வாழ்க்கை முறை, வதிவிடவசதியின்மை, உணவுப் பழக்கம் என்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து சகிப்புத்தன்மையோடும் தளராத உறுதியோடும் பணியாற்றத் தொடங்கினர்.

மதர் சேவியர் தலைமையில் சகோதரிகள் மேரிஸ்ரனிஸ்லோஸ், மேரிலிகோரி, மாறி தெரேஸ், யோசெவ், மேரி ஹெலன் ஆகிய ஐந்து பேருடன் சிறுக ஆரம்பித்த இச்சபை இன்று இலங்கை முழுவதிலும் 107 மடங்களில் அறுநூற்றுக்குமேற்பட்ட துறவி கொண்ட சபையாக பேரருட்திரு யூலன் ஆண்டகையின் காலத்தில் உருவாகியது: ஆயினும் சுதேச பெண்துறவிகள் சபை 1865 லேயே ஆரம்பமாகிவிட்டது என்றும் அவர்கள் புனித இராயப்பர் சகோதரிகள் (Sisters of St Peter) என அழைக்கப்பட்டனர் என்றும் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசரின் குறிப்புகளில் காணப்படுகிறது.

தொடக்கத்தில் 18 அருட்சகோதரிகளுடன் ஆரம்பமான இச்சபை ஆல விருட்சமாய் வளர்ந்து கிளைபரப்பி நற்கனி கொடுத்து வருகின்றது.

1870 ஆம் ஆண்டில் சிங்களப் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டது. குருநாகலில் அப்பொழுதுதான் முதல் மடம் ஆரம்பமாயிற்று. கண்டி, பதுளை, பண்டாரவளை உட்பட மலைநாடு, மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்குடாநாடு, தீவுப்பகுதியடங்கிலும் இன்று 44 மடங்களில் தமிழ்பேசும் மறைபரப்புப்பணி சமூகநலப் பணி ஆகிய பல்திறப்பட்ட பணிகளை ஆற்றி வருகின்றனர்.

அக்காலத்தில் ஆங்கிலக் கல்வி மிக அவசியமானதாக கருதப்பட்டது: எனவே பெண்களுக்கான ஆங்கிலப் பாடசாலையொன்று 1345 ஆம் ஆண்டிலே யாழ் நகரிலே ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் நிருவாகம் 1863 ஆம் ஆண்டு திருக்குடும்பக் கன்னியரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுவே யாழ்நகரில் இன்று புகழ்பரப்பி நிற்கும் திருக்குடும்பக் கன்னியர் ஆங்கிலப் பாடசாலையாகும்.

1862 இல் ஐரோப்பிய துறவியருடன் திருக்குடும்பக் கன்னியர்சபை சுதேச இளம்மங்கைகளுடன் [illegible]

கல்விப்பணியோடு, அநாதை இல்லங்கள், விடுதிச் சாலைகள், என்பனவற்றைப் பராமரித்தல், குடும்ப அப்போஸ்தலப் பணி, சிறுவர் இல்லங்கள், உளவளர்ச்சியற்ற சிறுவர் பராமரிப்பு, சமூக முன்னேற்றப்பணி, இளைஞர் தலைமைத்துவப் பயிற்சி, குடும்பநலச் சுத்தம் பேணுதல், சுகாதாரப்பணி, மலையக மக்கள், சேரிவாழ் மக்கள் சீர்திருத்தப்பணி, பாலர் பாடசாலைகளை நிருவகித்தல், பங்குப்பணிகள், நோயாளர் பராமரிப்பு, குஷ்டரோகிகளுக்கு உடல்நலசேவை என்று இன்னோரன்ன பணிகளில் இன்று ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்.

உலகிலே அவுஸ்திரேலியா தவிர்ந்த அனைத்து நாடுகளிலும், கண்டங்களிலும் அரும்பணி ஆற்றிவரும் திருக்குடும்பக் கன்னியர்கள் இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்தில் கடந்த 125 ஆண்டுகளாக அளப்பெரும் பணிகளை ஆற்றி உள்ளனர்:

சிறப்பாக மகளிர் கல்விக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க உதவியுள்ளனர்.

நற்பிரசைகளை உருவாக்க கல்வியறிவிற் சிறந்த தாய்க்குலத்தை உருவாக்க வேண்டும்; எனவே நம் தாய்க்குலம் திருக்குடும்பக் கன்னியருக்குப் பெரிதும் கடப்பாடுடையது. சிறந்த ஒழுக்கம், கட்டுப்பாடு, அன்பு, கருணை, கடமை உணர்வு என்ற நற்பண்புகள் எம்மக்களுக்கு ஏற்பட வழி சமைத்துக் கொடுத்த இத்தியாகத் தாய்மாரின் சேவையை நாம் நன்றியுடன் போற்றி, அவர்களை வாயார வாழ்த்துவோமாக.

பல்லாண்டு அவர்கள் பணி நம்மத்தியில் சிறந்து விளங்க இறையருள் வேண்டுவோமாக. நமது முன்னோரைப் போலவும், நம்மைப்போலவும், நம் எதிர்காலச் சந்ததியினரும் இவர்களின் சேவையால் நலம் பெற்று உயர்வடைவார்களாக. ★

- எஸ். எம். ஜே. -

இதயத்தினால் உனைத் துதிப்பேன்!

கர்த்தாவேநீ போதித்திடு எனக்குஇங்கே
-உன்னுடைய வழிதனையே
நான்நடப்பேன் நீயோசொன்ன உண்மையெனும்
-சத்தியத்தின் நெறிகளிலே
ஆண்டவாஎன் இறையவனே எந்தன்முழு
-இதயத்தினால் உனைத்துதிப்பேன்
உன்னுடைய நாமத்தினை காலமெல்லாம்
-மகிமையினால் நிறைத்திடுவேன்
ஏனெனில்நீ என்னில்வைத்த அன்புநிறை
-ஆதரவோ மாபெரிது
கல்லறையில் இருந்துஎந்தன் ஆத்துமாவை
-மீட்டுத்தந்தாய் ஓர்விடிவு
திமிர்பிடித்து வாழும்அகங் காரர்களோ
-ஓ! இறைவா கிளர்ந்துவிட்டார்
எந்தனையே தாக்குதற்கு இரக்கமற்ற
-கொடியவரும் எழுந்துவிட்டார்
என்உயிரைக் குடிப்பதற்கு ஆலுலுமோ
-உனை அவர்கள் நினைத்தாரில்லை
உன்னைநோக்கிப் பார்த்திடவோ மதிப்புனக்குத்
-தந்திடவோ முனைந்தாரில்லை
ஆலுலும்நீ ஆண்டவனே இரக்கமுள்ள
-கிருபையுள்ள இறையவன்தான்
நீள்பொறுமை யோடுஅன்பின் ஆதரவும்
-உண்மைப்பண்பும் நிறைந்தவன்தான்
உன்னுடைய அடியன்என்னை நோக்கிப்பார்த்து
-எந்தனில்நீ இரக்கங்காட்டு
எந்தனுக்கு உன்னுடைய மாபெரிய
-வல்லமையின் உரத்தைஏற்று
இத்தனையும் எனக்குஈந்து என்னைக்காக்கும்
-இறையவனே அத்துடனே
பக்தியுள்ள உன்அடியா னின்மகனை
-மீட்டிடைன்று கேட்கிறேனே
ஓ! கர்த்தாவே நீஎனக்கு உதவிதந்து
-தேற்றும்அந்த உண்மைகண்டு
என்பகைவர் எல்லாமிங்கு வெட்கத்தாலே
-தலைகுனிந்து நிற்கஎன்று
எந்தனுக்குச் சாதகமாய் மிகவும்நல்ல
-அனுகூலமாய் ஓ! கர்த்தாவே
உந்தனுடைய நன்மைதனைக் காட்டும்அடை
-யாளமொன்று தாஇந்நாளே

வேதாகம சங்கீதம் – 86
தமிழ் வடிவம்: நவாலியூர் சி.என். செல்லத்துரை

Digitized by Navanaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜனதா தள்-மும்மொழிக் கொள்கை காரணமாக

ஏழுகட்சி அணியிலிருந்து தி.மு.க விலகும் நிலை!

ஏழு அரசியல் கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள தேசிய முன்னணியில் தி. மு. க. தொடர்ந்தும் அங்கம் வகிக்குமா?

ஏழு கட்சிகளில் மூன்று கட்சிகள் தனியாக இணைந்து அமைத்துள்ள புதிய கட்சியான ஜனதா தள் அறிவித்துள்ள மும்மொழிக் கொள்கைத் திட்டம், தி. மு. கவுக்கு நெருக்கடியை உருவாக்கி இருப்பதாக தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரு மொழிக் கொள்கையே தனது உயிர்மூச்சாகக்கொண்டது தி. மு. க.

பாடசாலைகளில் ஆங்கிலமும் தமிழும் மட்டுமே கற்றுத் தரப்படவேண்டும் என்பது தி. மு. கவின் கொள்கை.

தேசிய முன்னணியில் உள்ள ஏழு கட்சிகள் வருமாறு;

ஜனதா,
லோக்தள்,
ஜனமோர்ச்சா,
காங்கிரஸ் (எஸ்),
தெலுங்குதேசம்,
அஸாம் கணபரிஷத்,
தி. மு. க.

இவற்றின் ஜனதா, லோக்தள், ஜனமோர்ச்சா ஆகியன ஒன்று இணைந்து ஜனதா தள் என்ற புதிய கட்சியை அமைத்

வி. பி. சிங்

துள்ளன.

பெங்களூரில் புதிய கட்சியின் அங்குரார்ப்பணம் நடந்தது.

புதிய கட்சியின் கொள்கை விளக்கத்தை பெங்களூரில் வைத்து ஜனதாவின் முன்னாள் தலைவர் சந்திரசேகர் வெளியிட்டார்.

அதில் மொழிக் கொள்கை பற்றி தெட்டத்தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

'இந்திய மொழிகள் அனைத்தும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

'அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் நேபாள மொழியையும் சேர்க்கவேண்டும்

எட்டாவது பிரிவில் தமிழ் உட்பட 14 மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை தீவிரமாக அமுல்படுத்த வேண்டும்'—

இப்படி 'ஜனதா தள்'ளின் கொள்கை விளக்கம் கூறுகிறது:

இதில் மும்மொழிக் கொள்கை என்பது இந்தி, ஆங்கிலம், மற்றும் அந்தந்த மாநில மொழியை பாடசாலைகளில் கற்றுத்தருவதாகும்.

மும்மொழிக் கொள்கைக்குப் பதில் தமிழும் ஆங்கிலமும் மட்டுமே பாடசாலைகளில் கற்றுத் தரப்படவேண்டும் என்பது தி. மு. க. வின் நிலை.

மூன்று கட்சிகள் இணைந்தது ஜனதா தள்.

இதனால் ஏழு கட்சி தேசிய முன்னணி என்பது போய் இப்போது ஐந்து கட்சி தேசிய முன்னணி என்ற பெயர் வந்திருக்கிறது.

இந்த ஐந்தில் ஜனதா தள் தவிர மீதியுள்ள ஒரே தேசியக் கட்சி காங்கிரஸ் (எஸ்) தான்:

கருணாநிதி

அது மும்மொழித் திட்டத்தை ஆதரிக்கிறது:

மீதியுள்ள மாநிலக் கட்சிகள் தெலுங்கு தேசம், அஸாம் கணபரிஷத்.

தெலுங்கு தேசம் கட்சி; ஆந்திரா மாநில ஆளும்கட்சி.

அஸாம் கணபரிஷத் அஸாம் மாநில ஆளும் கட்சி.

இரண்டு மாநிலங்களிலும் அவை மும்மொழித் திட்டத்தை அமுல்செய்கின்றன.

ஆகவே இரு மொழிக் கொள்கையுள்ள ஒரே ஒரு கட்சி தி. மு. க. தான்.

இந்த நிலையில் அரசியல் லாபத்துக்காக இரு மொழிக் கொள்கையைக் கைவிட்டு தேசிய முன்னணியில் தி. மு. க. நீடிக்குமா?

மொழிக்காக பல தியாகங்களைச் செய்துள்ள தி. மு. க,

சென்னையிலிருந்து தி. மேனகன்

தேசிய முன்னணியில் நீடிக்கக்கூடாது என்ற கருத்து தி. மு. க. தலைமைப் பீடத்தில் பரவிவருகிறது.

தி. மு. க, இதுகாலவரை நம்பிவந்த அதன் மாநிலக் கூட்டணியை மீண்டும் பலப்படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயமும் மேலோங்கி வருகிறது.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் தி. மு. க, தேசிய முன்னணியில் நீடிக்காது என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். (எ 4)

ஜெயலலிதாவின் பேச்சுக்கு காளிமுத்து கண்டனம்

ஏழு கட்சி தேசிய அணியில் தி. மு. க. தலைவர் கருணாநிதி எனக்குப் பயந்தே சேர்ந்திருக்கிறார்.

இப்படி ஜெயலலிதா அறிக்கை விட்டிருந்தார்.

அதற்கு அ. தி. மு. க. ஜா அணி துணைப்பொதுச் செயலாளர் காளிமுத்து பதில் அறிக்கை விட்டிருக்கிறார்.

அதன் சில பகுதிகள் வருமாறு;

இந்த திமிர் பேச்சு, ஜெயலலிதாவின் ஆதிக்க புத்தியையே அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. நான் நினைக்கிறேன்.

ஒரு தென்னை மரத்தில், ஓர் அணில் அமர்ந்திருந்தது. அது, காற்றில் ஆடும் தென்னங்கீற்றைப் பார்த்து, 'நான் (அணில்) உட்கார்ந்ததினால் தான் தென்னை மரமே ஆடுகிறது '- என்று நினைத்துத் தென்னை மரத்தை எப்படி ஆட்டி வைக்கிறேன்' என்று அணில் அகங்காரத்தோடு நினைக்குமாம்!

அந்த அணிலின் அற்ப புத்தியைப்போல, ஜெயலலிதாவின் கோணல் புத்தி அமைந்துள்ளது.

நகைச்சுவை

'ஜெயலலிதாவைப் பார்த்து கருணாநிதி பயப்படுகிறார்'— என ஜெயலலிதா சொல்லுவது இந்த ஆண்டின் மிகப் பெரிய நகைச்சுவையாம்!

ஜெயலலிதாவுக்குப் பதில் சொல்வது தனக்கு அசிங்கம் என்று கலைஞர் நினைக்கிறார்.

கலைஞர் நினைப்பதுபோல, காளிமுத்துக்களும் நினைத்தால். தமிழக நிலைமை என்னாவது?

கலைஞர் ஒதுங்கலாம்- ஆனால் தர்மத்துக்குப் பாத்தியப்பட்டவர்கள் அல்லவா நாங்கள். (அ. தி. மு. க.)

சர்க்கஸ்

தமிழ்நாட்டில் காங்கிரசை வளர்க்கும் திட்டம் - ராஜீவ் ஜீப் ஓட்டுவது - மூப்பனார் சைக்கிள் ஓட்டுவது - மூப்பனார் குப்பை கூட்டுவதாகும்! நான் கேட்கிறேன்: - சர்க்கசில் நாய், பன்றி, கழுதை, குதிரை, யானை கூட சைக்கிள்களையும், ஜீப்பையும், மோட்டார் சைக்கிள்களையும் ஓட்டுகின்றன.

குப்பை கூட்டும் தெருவில், குப்பை இல்லையென்றால், அடுத்த தெருவில் கருப்பையா மூப்பனார் தெருக்கூட்ட வேண்டியதுதானே.

கூடையிலே குப்பை- கூளங்களை, சுத்தமாக இருக்கும் தெருவிலே அள்ளி அள்ளிப் போட்டுத் தெருக்கூட்டினால், காங்கிரஸ்காரர்களுக்கு அறிவு இல்லை என்றுதானே அர்த்தம்! தொண்டுக்காகத் தெருக்கூட்டவில்லை- தொலைக்காட்சிக்காகவே தெருக் கூட்டியுள்ளார்கள்! எனவே தெருக் கூட்டினாலும், தெருவிலே வாகனங்களை ஓட்டினாலும், காங்கிரஸ் மக்களிடம் வளராது!

துரோகி

காங்கிரசோடு கூட்டணிக்குத் தெருத்தெருவாக நாய் போல அலைபவன். அண்ணாவுக்குத் துரோகி- திராவிட தத்துவத்துக்குத் துரோகி!

பணப்பெட்டியை எதிர் பார்ப்பவனும் - பணப்பெட்டியைப் பாதுகாக்க நினைப்பவனுமே, காங்கிரஸ் கூட்டுக்கு அலைவான்!

காங்கிரஸ் கூட்டணி அமைத்து, சிம்மாசனம் ஏறுவதைவிட, கந்தல் உடையை அணிந்து, தவிட்டைக்கூட உணவாகக் கொண்டு வீதிகளிலே திராவிட லட்சிய கீதம் பாடுவோம்!

முகமூடி கிழிப்பேன்

திராவிட இயக்கத்தைக் காப்பதுதான் தன்மானமுள்ள தமிழனின் வேலை! காங்கிரசுக்குத் துணை நிற்கும் எந்தச் சக்தியையும், நடுத்தெருவிலே தூக்கிப்போட்டு மிதிப்பேன்; முகமூடிகளைக் கிழித்து எறிவேன்!

தி. மு. க. ஆட்சி

தமிழ்நாட்டில், தி.மு. கழகமும் - அண்ணா தி. மு. கழகமும் மாறி மாறி ஆளும் கட்சியாகவும் - எதிர்க்கட்சியாகவும் இருக்கவேண்டுமே தவிரக் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்தவிடமாட்டோம்!

இவ்வாறு காளிமுத்து கூறினார். (எ—4)

சொற்சிலம்பம்



போட்டி இல. 91

சொற்சிலம்பம் இல: 91
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: .....
விலாசம்: .....
.....

இங்கே வெட்டுக

முடிவு திகதி: 16 – 11 – 1988

(வலது பக்க மேல் மூலைச் சதுரத்தை இலக்கம் 4 ஆகக் கொள்ளவும்.)

இடமிருந்து வலம்:

1. அதிசயம், 5. கறுப்பு நிறமானது, 6. கலப்பை, 7. அகாலமரணம், 8. ஆபத்துக்காலம், 9. மரம், 10. பிள்ளைகளில் ஒன்று, 11. இரைச்சல், 13. துன்பம், 14. கல்லீரலில் சுரக்கும் நீர், 16. மதிப்பு, 17. கோண அளவின் அலகு.

மேலிருந்து கீழ்:

1. நகைச்சுவைக்கவி, 2. மலர்ச்சி, 3. நீர் போன்ற பொருள், 4. இரண்டு, 6. தூண்டுதல், 7. நெருக்கம், 10. பார்வதி, 11. மெலிவு 12. பிரணவமொழி 13. அணைந்துபோ, 15. சிரம்.

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல: 90 சரியான விடைகள்

இடமிருந்து வலம்

1. நவராத்திரி, 5. பற்று, 6. பரமபதப், 9. கதி, 10. தன், 11. அதிகரிப்பு, 13. அதிரடி 14. இடபம், 15. பதவி, 17. கவின், 18. உடும்பு.

மேலிருந்து கீழ்

1. நண்பகல், 2. ராமன். 3. தந்தி, 4. நற்பண்பு, 7. ரதி, 8. பத்திரம், 10. தப்பிதம், 11. அதிபன், 12. கடி, 13. அடவி, 14: இகழ், 15. படு, 16. புவி.

கால்-வாய் நோயைக் கட்டுப்படுத்தும் வழிகள்

கால்-வாய் நோய் ஆங்கிலத்தில் Foot-Mouth Diseases (F M D) என அழைக்கப்படும். இது ஒரு வைரஸ் நோய். வரட்சி கூடிய காலத்தில் இந்நோய் கால்நடைகளை தாக்குகின்றது. காற்றினால் மிகவேகமாக இது பரவும்.

குளம்புகள் உள்ள எந்தக் கால்நடைகளையும் இந்நோய் பாதிக்கக் கூடியது.

1948 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து இந்நோய் இங்கு பரவியதாகவும், மட்டக்களப்பில், மகியங்கனையில் முதன் முதல் இது காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்நோயில் ஏழுவகைகள் இருப்பினும் குறிப்பாக O, C, Set I, Asia I ஆகிய நான்குவகைகளே இலங்கையில் பரவலாக காணப்படுகின்றன. இந்நான்கு வகைக்கும் சேர்த்தே நாம் தடுப்பூசி ஏற்றுகின்றோம்.

ஆரம்பத்தில் வாய், நாக்கு, முரசு, தாடை மற்றும் கால் குளம்புகள், குளம்புகளுக்கிடையேயுள்ள மேற்பகுதி போன்ற இடங்களில் நீர் நிறைந்த கொப்பளங்கள் தோன்றும். பின் அவை உடைந்து கொப்பளங்களாகும் புண்களின் வேதனையால் மாடுகள் நொண்ட ஆரம்பிக்கும் உணவு உண்ணமாட்டா. வாயால் வீணீர் வடியும்.

இந்நோய் கண்டால் புண்களை குணமாக்கவும், புண்கள் தொற்றாமல் பாதுகாக்கவும், சிகிச்சை செய்யலாமே தவிர நோயை முற்றாக மாற்றமுடியாது. கவனிக்காமல் விட்டால் புண் இரத்தம் நஞ்சாகி மாடுகள் இறக்க நேரிடலாம்.

நோய்வர முன்பே கால்நடை வைத்தியர்கள் மூலம் தடை ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருடமும் தடுப்பூசி போடுவது அவசியம் நோய் கண்ட மாடுகளை விற்பனை செய்யக் கூடாது. அவற்றை மேய்ச்சலுக்காகவோ குடிநீர் நிலைகளுக்கோ அங்குமிங்குமாகக் கொண்டு செல்லக் கூடாது.

புண்கள் ஏற்பட்டால் கிருமி கொல்லி கொண்டு கழுவித் துப்பரவாக வைத்திருத்தல் வேண்டும். வாயில் புண் ஏற்பட்டு சாப்பிடமுடியாத நிலை ஏற்படின் சத்துள்ள உணவுகளை நீராகாரமாக்கி பருக்க வேண்டும். ஆவணி மாதத்தில் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதால் மழை ஆரம்பித்து நோய் பரவும்போது கால்நடைகள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறும், வயது முதிர்த்த மாடுகளிலே இறப்பு வீதம் குறைவாகவும் இளங்கன்றுகளில் இறப்பு வீதம் கூடுதலாகவும் காணப்படுகிறது,

> கால்நடைகளை முதலில் கோமாரி நோய் தாக்கியது. அது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.
>
> இப்போது கால்வாய் நோய் விரைவாகப் பரவி வருகிறது.
>
> கால்வாய் நோயைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது போன்ற விவரங்களைத் தெல்லிப்பழைப் பிரிவு கால்நடை வைத்தியர் திருமதி சுமணதேவி தனபால சிங்கம் இங்கு தருகிறார்.

பேட்டி கண்டவர்:

- வி. பி. சர்மா -

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் வடக்கு, தீவுப் பகுதி ஆகிய இடங்களில் இந்நோய் அதிகம் காணப்படுகிறது. எல்லாப் பிரிவுகளிலும் உள்ள அரசாங்கக் கால்நடை வைத்தியர்கள் மேற்கொண்ட தீவிர தடுப்பூசி போடும் நடவடிக்கைகளால் இன்று கால்வாய் நோய் யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ★

மன்னிப்பு

ஒரு வீட்டின் முற்றத்தில் அழகிய ஒரு பூந்தோட்டம் இருந்தது. அங்கே இருந்த ஒரு ரோஜாச் செடிக்குப் பக்கத்தில் ஒரு குரோட்டன் செடியும் இருந்தது.

அது ரோஜாச் செடியினும் பார்க்க உயரமாக வளர்ந்து நின்றது. ரோஜாச் செடி பூக்க ஆரம்பித்தது. மொட்டுக்கள் விரிந்து அழகிய சிவப்பு ரோஜாக்கள் மலர்ந்தன.

அங்கே வந்து போகின்றவர்களின் கண்களை அவைகள் கவர்ந்தன. இது குரோட்டன் செடிக்குப் பிடிக்கவில்லை.

வருபவர்கள் ரோஜாவின் அழகை வர்ணிக்கும்போது குரோட்டன் செடி பொறாமைத் தீயால் வெதும்பியது.

அடிக்கடி ரோஜாச் செடியை திரும்பிப் பார்க்கும். 'உண்மையில் அழகாகத்தான் இருக்கிறது'' அதனுடைய உள்மனம் பேசிக் கொள்ளும்.

'எவ்வளவு சந்தோஷமாக இவ்வளவு காலமும் இருந்தேன். இந்தப் பூக்கள் வந்த தன் பின்னர்தானே என்னுடைய மகிழ்ச்சி பறந்துவிட்டது.'

அதனுடைய பொறாமை வெறியாக மாறியது. இந்தப் பூக்களை மற்றவர்களின் கண்களுக்குத் தெரியாமல் செய்ய வேண்டும். அது தன்னுடைய தந்திரத்தை செயலில் காட்ட முடிவெடுத்தது.

குரோட்டன் செடி தன்னுடைய கிளைகளை ரோஜாச் செடியை மறைக்கும் விதத்தில் வளரவிட்டது. ரோஜாச் செடி மனம் நொந்துபோய்.

'இது உனக்கு நியாயமா?' மற்றவர்களுக்குத் தீங்கு செய்ய முயன்றால் அது அவர்களுக்கே தீங்காக முடியும் என்று உனக்குத் தெரியாதா? இந்தப் பூமி சத்தியத்தின் பிறப்பிடம். அநியாயங்கள் அழிக்கப்படுவதும், நீதி நிலை நாட்டப்படுவதும் நியதி. இது உனக்குப் புரியாவிட்டால் அதன் பலனை நீ எதிர் கொள்வாய்'

- க. தர்மலிங்கம் -

என்று பலவாறு கூறியது. ரோஜாச் செடி கூறிய எதையும் குரோட்டன் செடி காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தனது தந்திரம் வெற்றி அளிப்பதையிட்டு எக்காளமிட்டது.

ஒருநாள் அந்த வீட்டுச் சொந்தக்காரன் கத்தியோடு வந்தான். குரோட்டனின் கிளைகளை வெட்டித்தள்ளினான். ரோஜாச் செடியின் மலர்கள் சூரிய வெளிச்சத்தில் இரத்தினக்கற்களாகப் பளிச்சிட்டன.

ரோஜாச் செடி பழிவாங்கத் துடிக்கவில்லை. அன்பாக குரோட்டன் செடியைப் பார்த்து.

'கவலைப்படாதே நண்பியே. உன்னுடைய கிளைகள் வளரும். நடந்ததை மறந்து சந்தோஷமாக இரு' என்றது.

குரோட்டன் செடி 'என்னை மன்னித்து விடு. இனிமேல் இப்படியான தீய எண்ணம் கொள்ளமாட்டேன்' என்று கண்ணீர் விட்டது. ரோஜாச் செடி இதமாக அதனை அணைத்துக்கொண்டது. ★

மழையின் மலர்வு

மேகத்திற்கு
மேனியெங்கும்
குளிரெடுத்து நடுங்கியது
கறுப்பு ஸ்வெட்டர்
மாட்டிக்கொண்டு
துணைக்கு
ஆதவனையும் உள்ளெடுத்து
அணைத்துக் கொண்டது
வினாடிகள் சில
விடைபெற்றுச் செல்ல
அதன்
வியர்வை முத்துக்கள்
மண்ணை
முத்தமிட்டன!

– ரெசற் மெலனி –
அச்சுவேலி.

★ ★

ஓர்மோ!

ஏய்!
சிற்றின்பத் தளபதியே!
ஓரம்போ...!
இல்லாவிட்டால்
நிச்சயமாக
நீ ஒரு நாள்...
போலீப பஸ்லில்
மோதி மரணிப்பாய்!
அதனால் சொல்கிறேன்
ஏய்!
சிற்றின்பத் தளபதியே!
ஓரம்போ! ஓரம்போ!!

– குமார் தனபால் –

Digitized by Noolaham Foundation.
Noolaham.org | aavanaham.org

நாளுக்கோர் புதுமை,
நாடுவது உண்மை
இவற்றை அளிப்பதுதான்
சீமாட்டி
யாழ்ப்பாணம்

சஞ்சிகை

05-11-1988 சனிக்கிழமை

நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை
இவற்றை அளிப்பதுதான்
சீமாட்டி
யாழ்ப்பாணம்.
சுன்னாகம் தவிர்ந்த ஏனைய இடங்களில் எமது கிளைகள் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.
சீமாட்டி
Seemati

ஜோர்ஜ்புஷ் - மைக்கல் டுகாகிஸ்:

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி யார்?

உலகிலே மக்களால் தெரிவு செய்யப்படும் சக்திவாய்ந்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி, உலகிலே மக்களால் தெரிவு செய்யப்படும் அதிசக்தி வாய்ந்த ஜனாதிபதியாகக் கருதப்படுகிறார்.

உலகின் தலைவிதியை நிர்ணயிக்கும் இரு ஜனாதிபதிகளில் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதி. மற்றவர் சோவியத் ஜனாதிபதி.

இதனால் இத்தேர்தல் சர்வதேச முக்கியத்துவம் பெறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. கடைசியாக 1984 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. அதற்கு முன்னர் 1980 ஆம்ஆண்டு தேர்தல்நடந்தது;

2 தவணைகள் மட்டும்

இந்த இரு தேர்தல்களிலும் குடியரசுக்கட்சியைச் சேர்ந்த ரொனல்ட் றேகனே வெற்றி பெற்றிருந்தார்.

அமெரிக்க அரசமைப்பின்படி ஒருவர் தொடர்ந்து இரண்டு தவணைகளுக்குமேல் ஜனாதிபதி பதவி வகிக்க முடியாது.

அமெரிக்க கீழ்சபையான காங்கிரஸிலும் மேல்சபையான செனேட்டிலும் ஏற்கனவே பெரும்பான்மை பலம் இழந்து அரசியலில் 'நொண்டி வாத்து' (Lame Duck) நிலையில் இருந்து வரும் ரொனல்ட் றேகன் இதன் காரணமாக இம்முறை தேர்தலில் போட்டியிட முடியாது.

ஜோர்ஜ் புஷ்

றேகனின் பதவிக்காலத்தில் உபஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் புஷ் (George Bush) இம்முறை குடியரசுக்கட்சி சார்பாகத் தேர்தலில் போட்டியிடுகிறார். குடியரசுக் கட்சிசார்பாக உபஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுபவர் இந்தியானா செனட்டரான டான்குவாய்ல் (Dan Quayle). துருக்கி வம்சாவளியைச் சேர்ந்தவர்.

டுகாகிஸ்

தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பாக மைக்கல் டுகாகிஸ் (Michael Dukakis) போட்டியிடுகிறார்.

இதன் மூலம் 28 வருட காலத்துக்குப் பின்னர் மசாசூசெட் மாநிலம் மற்றொரு ஜனாதிபதி வேட்பாளரைக் களத்தில் நிறுத்தி உள்ளது.

1960 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மசாசூசெட் மாநில செனட்டரான ஜோன் எப். கென்னடி ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு

ஜோர்ஜ் புஷ்

வெற்றி பெற்றிருந்தார்; பதவி ஏற்று ஒரு சில வருடங்களில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இம்முறை ஜனநாயகக்கட்சி சார்பில் உபஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுபவர் லொயிட் பென்ட்சென் (Loyd Bentsen).

கருத்துக் கணிப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஏ. பி. சி. (A B. C.) மற்றும் லொஸ் ஏன்ஜெல்ஸ் ரைம்ஸ் (Los Angeles Times) ஆகிய வை சமீபத்தில்மேற்கொண்ட கருத்துக் கணிப்புகளின்படி குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் புஷ் முன்னிலையில் நிற்கிறார்.

குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் புஷ் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் மைக்கல் டுகாகிஸ் ஆகிய இருவரும் டெலிவிஷனில் நேருக்கு நேர் தோன்றி பகிரங்க விவாதம் நடத்திய பின்னர் இந்தக் கருத்துக் கணிப்புகள் எடுக்கப்பட்டன.

ட்ரூமன் பாணியில்

கருத்துக் கணிப்பில் தாம் பின்னால்நின்றாலும்வெற்றியில் மைக்கல் டுகாகிஸ் நம்பிக்கை கொண்டுள்ளார். ஹரி ட்ரூமன் ஜோன் எப்: கென்னடி பாணியில் தாம் ஜோர்ஜ் புஷ்ஷைத் தோற்கடிப்பேன் என்கிறார்.

1948 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹரிட்ரூமன் (Harry Truman) கருத்துக்கணிப்பில் குடியரசுக் கட்சி வேட்பாளர் தோமஸ் டேவேயை விட (Thomas Dewey) பின்னால் நின்றார். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்பாராத விதமாக ஹரிட்ரூமன் வெற்றி பெற்றார்.

அதேபோன்று 1960 ஆம் ஆண்டு தேர்தலிலும் ஒரு கட்டத்தில் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் செனட்டர் ஜோன். எப். கென்னடி கருத்துக்கணிப்பில் பின்னுக்கு நின்றாலும் இறுதி வெற்றி அவருக்கே கிடைத்திருந்தது.

அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் குடியரசுக்கட்சி - ஜனநாயகக்கட்சி வேட்பாளர் உட்பட 322 பேர் போட்டியிடுகின்றனர். ஆனால் 95 சதவீதமானோர் பெயரளவிலேயே போட்டியிடுகின்றனர். உண்மையான போட்டி ஜோர்ஜ்புஷ்ஷுக்கும் மைக்கல் டுகாகிஸுக்கும் இடையில் தான்.

ஜோர்ஜ் புஷ் - மைக்கல் டுகாகிஸ் ஆகியோருக்கு அடுத்ததாகத் தேர்தலில் மாற்று வேட்பாளர் என்று கருதப்படுபவர் கறுப்பரான புலானி என்பவர் (Fulani) கறுப்பரான இவர் NewAllian -ceகட்சி சார்பில் போட்டியிடுகிறார்.

இதற்கு முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களில் குடியரசு- ஜனநாயகக்கட்சி வேட்பாளராகக் கருதப்பட்டவர்கள் ஜோன் அன்டர்சன் (John Anderson) ஜோர்ஜ் வாலஸ் (George Wallace) ஆவர்.

ரொனல்ட் றேகனும் ஜிம்மி கார்ட்டரும் போட்டியிட்ட 1980 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜோன் அன்டர்சன் 57 லட்சம் வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்தை வகித்தார்.

கார்ட்டர் — பெகின் — சாதாத் ஆகிய மூவருக்கும் இடையிலான காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் ஜிம்மி கார்ட்டர் ஓரளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தார். எனினும் ஈரானில் அமெரிக்க ராஜதந்திரிகள் பணயம் வைக்கப்பட்ட பிரச்சினை 1980 தேர்தலில் தோல்விக்கு வழிவகுத்திருந்தது. காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் மத்திய கிழக்கில் தற்போது ஓரளவு அமைதி நிலவுகிறது.

1968 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ் வாலஸ் 99லட்சம் வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தார். அத்தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பாக ரிச்சர்ட் நிக்ஸனும் ஜனநாயகக் கட்சி சார்பாக ஹியூபர்ட் ஹம்ப்ரியும் போட்டியிட்டனர்.

ஐஸன்ஹோவருக்குப் பின்--

1972 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் நிக்ஸன் வெற்றி அடைந்த போதிலும் வாட்டர் கேட் (Water - gate) ஊழல் விவகாரம் அம்பலமானதை அடுத்து ஆட்சிக் காலம் முடியும் முன்னரே பதவியை இழக்க வேண்டியதாயிற்று.

ஆகவே ஜனாதிபதி ஐஸன் ஹோவருக்குப் பின்னர் தொடர்ந்து 8 வருடங்கள்

மைக்கல்டுகாகிஸ்

ஜனாதிபதியாக இருந்த பெருமை ரொனல்ட் றேகனையே சாருகிறது.

நாயின் பெயரைப் பதித்தவர்

இதற்கு முந்திய ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் தனது நாயின் பெயரை வாக்குச்சீட்டில் பொறித்த வையமிங் என்பவரும் இம்முறை போட்டியிடுகிறார். சோஷலிச தொழிலாளர்கட்சி சார்பாக (Socialist Workers Party) இவர் போட்டியிடுகிறார்.

வழமையான அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகப் போட்டியிடும் கஸ்ஹோல் (Gushall) இம்முறை போட்டியிடவில்லை.

தீவிர வலதுசாரி

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தீவிர வலதுசாரி வேட்பாளர் ஒருவரும் போட்டியிடுகிறார். சுதந்திர ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் லாறூச் (La Rouche) என்பவரே இந்த வேட்பாளர்.

சோவியத் யூனியனுக்கு அமெரிக்கா போதிய உணவுகளை அனுப்பத் தவறுமானால் அடுத்த இரண்டு வருட காலத்தில் மேற்கு ஐரோப்பா மீது சோவியத் யூனியன் படை எடுக்கும் என்கிறார் லாறூச்.

1968 பூர்வாங்க தேர்தலில் தீவிர வியட்நாம் யுத்த எதிர்ப்பாளராக விளங்கிய மக்கார்த்தியும் MCcarthy) இம்முறை போட்டியிடுகிறார்.

1968 ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக்கட்சியின் வேட்பாளர் நியமனத்தைப் பெறுவதற்காக ஹியூபேர்ட் ஹம்ப்ரியை எதிர்த்து இவர் பூர்வாங்க தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி கண்டிருந்தார்.

வெளிநாட்டுக் கொள்கை காரணம்

குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் புஷ் அதிக செல்வாக்குப் பெற்றிருப்பதற்கு றேகனின் வெளிநாட்டுக் கொள்கைகளே காரணம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

1983 ஆம் ஆண்டு கரிபியன் தீவான கிரெனடா(Grenada) மீதான படையெடுப்பு உள்நாட்டில் றேகனின் செல்வாக்கு அதிகரிக்க அடித்தளம் இட்டது.

கிரெனடாவில் இடதுசாரிகள் ஆட்சியைக் கைப்பற்றிய போது ஜனாதிபதி றேகன் அங்கு அமெரிக்கப் படைகளை அனுப்பி புரட்சியை முறியடித்திருந்தார்.

றேகனின் கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கொள்கைக்குக் கிடைத்த பெரும் வெற்றியாக இது கருதப்படுகிறது.

அத்துடன் ஆப்கானிஸ்தான் - கம்பூச்சியா, அங்கோலா ஆகிய நாடுகளில் இருந்து சோவியத் - வியட்நாம் - கியூபன் துருப்புக்கள் வெளியேறுவதற்கும் றேகனின் வெற்றிகரமான வெளிநாட்டுக்கொள்கைகளே காரணம்.

இந்த மூன்று நாடுகளிலும் சுதந்திரத்துக்காகப் போராடிய இயக்கங்களுக்கு அமெரிக்கா பெரும் உதவிகளை வழங்கிவந்தது.

அமெரிக்கா தனது பலத்தை அதிகரிப்பது மூலமே சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்று றேகன் கருதுகிறார்.

அவரின் கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் புஷ்ஷும் அதனையே இந்த ஜனாதிபதித் தேர்தலும் வலியுறுத்தி வருகிறார்.

தீவிரவாதம்

சோவியத் யூனியனுடன் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். நேட்டோ நாடுகளின் தலைவர்கள் சோவியத் யூனியனுடன் கூட்டாக ஆயுதப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்றும் ஜோர்ஜ் புஷ் கோருகிறார்.

ஐரோப்பாவில் இருந்து ஒருதலைப்பட்சமாக அமெரிக்கப் படைகளை வாபஸ்பெறப் போவதில்லை என்று தம்முடன் சேர்ந்து வாக்குறுதி அளிக்க மைக்கல்டுகாகிஸ் தயாரா என்று ஜோர்ஜ் புஷ் சவால் விடுத்துள்ளார்.

இத்தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு உள்ள ஒரே ஒரு பாதிப்பு அவரின் கட்சி சார்பில் உபஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடும் டான் குவாய்ல் ஆவார்.

டெலிவிஷனில் நேருக்கு நேர் நடத்தப்பட்ட பகிரங்க விவாதங்களில் இவர் திறமையாகச் செயற்படவில்லை. ஜனாதிபதி ஒருவர் மரணம் அடையும் பட்சத்தில் அல்லது அவர் இடையில் பதவி விலகும் பட்சத்தில் உபஜனாதிபதியே அப்பதவிக்கு நியமிக்கப்படுவதால் டான் குவாய்லின் தகுதி இன்மை ஜோர்ஜ் புஷ்ஷுக்கு ஓரளவு தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இத்தாக்கத்தின் மத்தியிலும் ஜோர்ஜ் புஷ்ஷே வெற்றி வாகை சூடும் சாத்தியங்கள் இருந்து வருகின்றன. ★

உலகஊசி

இந்திரா காந்தி பிறந்ததினம் அன்று

இந்திய-பாக் கிரிக்கெட் போட்டி!

இந்தியாவும் பாகிஸ்தானும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஒன்றில் கலந்து கொள்ள உள்ளன.

இப்போட்டி இம்மாதம் 19 ஆம் திகதி நடைபெறும்.

கவாஸ்கர்

இந்திய மத்திய நகரான குவாலியூரில் விளையாட்டரங்கு ஒன்று கட்டுவதற்கான நிதியைச் சேகரிக்கவே இப் போட்டி நடத்தப்படுகிறது.

இந்திய அணிக்கு சுனில் கவஸ்கர் கப்டனாகவும்,

பாகிஸ்தான் அணிக்கு இம்ரான்கான் கப்டனாகவும் இருப்பர்.

இந்திரா காந்தியின் பிறந்த தினமும் அன்று ஆகும்.

இப்போட்டி மூலம் 2 லட்சத்து 85 ஆயிரம் டொலர் திரட்டப்படும் என்று குவாலியூர்எம்.பி.யும் மத்திய அமைச்சருமான மாதவராவ் சிந்தியா தெரிவித்தார்.

இந்திய அணி:

சுனில் கவஸ்கர், கபில்தேவ், திலிப் வெங்சாகர், நவ்ஜோற் சித்து, முகமது அஸாருதீன், ரவிசாஸ்திரி, சன்டீப் பட்டீல், கிரான்முரே, நரேந்திர கிர்வானி, சேட்டன் சர்மா, சந்திரகாந்த் பண்டிட், சஞ்சேய் மஞ்ரேகர், அபேலகேற்.

பாகிஸ்தான் அணி:

இம்ரான் கான், அப்துல் காதிர், ராமீஸ் ராஜா, ஜாவிட் மியான்டாட், முதாசர் நஸார், சலீம் மலீக், இஜாஸ் அகமட், ஷோய்ப் முகமது, மன்சூர் எலாஹி, சலிம் யூசுப், அமிர் மாலிக், சாகிர் கான், மோஷின் கமல், வாஸிம் அக்ரம். ★

இந்திய கால்பந்து அணி இலங்கை வருமா?

இந்திய தேசிய உதைபந்தாட்ட அணி ஒன்று அடுத்த ஜனவரியில் இலங்கை வரும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது.

இந்திய உதைபந்தாட்டச் சம்மேளனத்துடன் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் இது சம்பந்தமாகப் பேச்சுக்கள் நடத்தி வருகிறது.

பேச்சுக்கள் பலனளித்தால் இந்திய அணி வரலாம்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துடனும் இலங்கைத்தரப்பு தொடர்பு கொண்டுள்ளது.

தென்இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அரசியல் பந்துபோட்டி எப்படி முடிவடைகின்றது என்பதைப் பொறுத்துத்தான் இந்திய 'கால் பந்து' அணி வரலாம் என்று சொல்லப்படுகின்றது. ★

சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்!

பென் ஜோன்சன் கூறுகிறார்!

சோல் ஒலிம்பிக்போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் வென்ற தங்கப் பதக்கத்தை போதை மருந்து பாவித்து விட்டு ஓடியது கண்டுபிடிக்கப்பட்டதால் இழந்தவர் பென் ஜோன்சன்.

இவர் கனடா நாட்டின் சார்பில் சோல் ஒலிம்பிக்கில் பங்கு பற்றினார்.

ஆனால் இவரின் பிறந்த நாடு ஜமேக்கா. புகுந்த நாடுதான் கனடா.

போதை மருந்து பாவித்த காரணத்துக்காக பென் ஜோன்சனை இனி சர்வதேசப் பந்தயங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப் போவது இல்லை என்று கனடா அரசு அறிவித்துவிட்டது. இந்த நேரத்தில் அவரைப் பிறந்த நாடான ஜமேக்கா இருகரம் நீட்டி வரவேற்றுள்ளது.

ஜமேக்கா விளையாட்டு மந்திரி எட்மண்ட் கூறி இருப்பதாவது;

பென். ஜோன்சன் எங்கள் மகன்.

அவர் போதை வஸ்து பாவித்த குற்றச்சாட்டில் வீணாகப் பலிக்கடா ஆக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் ஒரு திறமையான வீரர். எங்கள் [illegible]

எனவே பென் ஜோன்சன் விரும்பினால் ஜமேக்கா சார்பாக சர்வதேச பந்தயங்களில் கலந்து கொள்ள அனுமதிப்போம்.

இப்படி ஜமேக்கா மந்திரி சொன்னார்.

இதனிடையில்—

தங்கப்பதக்கத்தைப் பறிகொடுத்த ஓட்டப்பந்தய வீரர் பென்ஜோன்சன் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் சொன்னதாவது;

என் பதக்கம் பறிக்கப்பட்டபோது முதலில் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

ஆனால் அது பற்றி இப்போது நான் கவலைப்படவில்லை.

சிலர் சிரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் சந்தோஷமாகச் சிரித்து விட்டுப் போகட்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அதேவேளை—

இரண்டாண்டுகளுக்கு உலக விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள பென்ஜோன்சனுக்குக் கனடா உடற்பயிற்சி விளையாட்டுக் கழகம் தடை விதித்துள்ளது. ★

உலக விளையாட்டு

இந்திய - நியூசிலாந்து கிரிக்கெட் போட்டி

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இம்மாதம் 29 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்ய விருக்கிறது.

இந்திய கிரிக்கெட் அணியும் நியூசிலாந்து அணியும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொள்ளும்.

டெஸ்ட்

நவம்பர் 12 - 17: முதலாவது டெஸ்ட் பெங்களூரில்

நவம்பர் 25-30: இரண்டாவது டெஸ்ட் பம்பாயில்.

டிசம்பர் 2 - 7. மூன்றாவது டெஸ்ட் ஹைதராபாத்தில்.

ஏனைய போட்டிகள்

நவம்பர் 1-3: மேற்கு மண்டல அணியுடன் ராஜ்கோட்டில்.

நவம்பர் 6-8: வடக்கு மண்டல அணியுடன் பரிதாபாத்தில்.

நவம்பர் 19-21: ரஞ்சி சாம்பியன் தமிழ்நாடு அணியுடன் கோவாவில்.

ஒருநாள் சர்வதேசபோட்டி

டிசம்பர் 10இல் விசாகபட்டினத்தில்;

டிசம்பர் 12 இல் ஹக்டாக்கில்.

டிசம்பர் 15 இல் இந்தூரில்.

டிசம்பர் 17 இல் பரோடாவில்.

டிசம்பர் 19 இல் ஜம்முவில் ★.

சொற்சிலம்பம் போட்டி இல: 90

பரிசு பெற்றவர்கள் விவரம் வருமாறு;

முதலாவது பரிசு:

நா. நாகநந்தினி,
முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

இரண்டாவது பரிசு:

சி. சிவச்செல்வன்,
மே/பா வே. சிவநேசன்,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

மூன்றாவது பரிசு:

திருமதி சந்திரா சண்முகசுந்தரம்,
மருதடி, வித்தனை லேன்,
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org